தமிழர் வாணிகம்

CONNEMARA PUBLIC LIBRARY
1 - MAY 1957

புலவர்
கா. கோவிந்தன், எம்.ஏ.

மலர் நிலயம்
133, பிராட்வே... சென்னை-1

முதற்பதிப்பு அக்டோபர், 1955.
பதிப்புரிமையுடையது.

விலை ரூ. 1—8—0

மாருதி பிரஸ், இராயப்பேட்டை, சென்னை,

1 - MAY
MADRAS

பதிப்புரை

தமிழர் வாணிகம் என்னும் இந் நன்னூல் இன்று தமிழகத்தில் உலவ வந்துள்ளது. இந்நூலில் செந்தமிழ் மக்கள் செய்த பண்டைத் தமிழ் வாணிகம் பரக்கக் கூறப்பட்டுள்ளது. இந் நூலாசிரியர் பெரிதும் முயன்று அயனாட்டு யாத்திரிகர்கள் எழுதிவைத்த அரிய குறிப்புக்களைத் திரட்டி மிகவும் பயன்படுமாறு தந்துள்ளார். மற்றும், தமிழ் இலக்கியக் களஞ்சியங்களான சங்கத்தொகை நூற்களைத் துருவி ஆராய்ந்து, வாணிகத்தொடர்பான செய்திகளை ஒழுங்குபடுத்தி, தமிழக வாணிகத்தை விளக்கி எழுதியுள்ளார். அரிதின் முயன்று செய்திகளைத் தொகுத்து அமைவுற எழுதியுள்ள திறன் மிகவும் போற்றத்தக்கது. நற்றமிழ், தென்னாடு முதலான எம் வெளியீடுகளைக் கற்பார் 'தமிழர் வாணிகம்' என்பதையும் கற்றுத் தமிழ்நாட்டின் சிறப்பினையும் தமிழர் மேம்பாட்டினையும் ஐயமறத் தெளிந்து மகிழ்வர் என்பது திண்ணம். 'தமிழர் வாணிகம்' என்ற நூல் காலத்திற் கேற்ற நூல். இதனை உவப்புடன் நற்றமிழ் நடையில் எழுதித்தந்த திருவாளர் கா. கோவிந்தன் M. A. அவர்களுக்கு என் நன்றி என்றும் உரித்தாகும்.

ந. பழநியப்பன்

1 - MAY
ADRAS

பொருளடக்கம்

எண்		பக்கம்
1.	தோற்றுவாய்	1
2.	புறவாணிகம்	7
3.	அகவாணிகம்	31
4.	துறைமுகப் பட்டினங்கள்	47
5.	வாணிகம் வளர்க்கும் தொழில்கள்	63
6.	வணிகரும் அரசரும்	76
7.	வணிகக் குழு	81
8.	வாணிக விளைவுகள்	92

CONNEMARA PUBLIC LIBRARY
1 - MAY 1957
MADRAS

தமிழர் வாணிகம்

1. தோற்றுவாய்

உலக வாணிகத்தின் உறைவிடம், உலகவாணிகத்தின் உயிர் நிலை, உலக வாணிக மக்களின் ஒப்பு உயர்வு அற்ற வழிகாட்டி; என இன்று போற்றிப் புகழப்படும் நாடுகளெல்லாம், உலக மக்களால் உணரப் படாமல் மறைவுண்டிருந்த அத்தக் காலத்திலேயே, அதாவது அந்நாட்டு மண்ணில் நாகரிகமக்கள் அடியெடுத்து வைப்பதற்குப் பல நூறு ஆண்டுகட்கு முன்னரே, உலகின் பல்வேறு பகுதியைச் சேர்ந்த வணிக மக்கள் அனைவரும் ஒன்று கூடிவந்து வாழத்தக்க வளம் நிறைந்த வாணிக நிலையமாய் விளங்கியது தமிழ்நாடு.

வாணிகத்துறையில் வளம்பெற்றுத் திகழும் நாடு எதுவோ அதுவே செல்வத்தால் சிறந்து விளங்கும். அதிலும், உள்நாட்டு வாணிகத்தைக் காட்டிலும் வெளி நாட்டு வாணிகத்தை வளர்த்து வாழும் நாடே, வளம்பல

பெற்று விளங்கும். வெளிநாட்டு வாணிகமும், தம் நாட்டுப் பொன்னைக் கொடுத்துப் பிறநாட்டுப் பொருளைப் பெறுவதாக அமைதல் கூடாது. அத்தகைய நாடு அவ்வாணிகத்தால் வளம்பெறுவதற்கு மாருக, பண்டு தான் பெற்றிருந்த வளத்தையும் இழந்து பாழுறும். அதற்கு மாருகத் தன்னாட்டுக் கைத்தொழில்கள் ஆக்கித் தரும் பொருள்களை, பிற நாடுகளுக்கு அனுப்பி அவற்றிற்கு ஈடாக அந்நாடுகளிலிருந்து பொன்னைப் பெறும் வாணிகமே வளம்தரும் வாணிகமாம். அத்தகைய வாணிகம் நடைபெறும் நாடே பெருவாழ்வு பெற்று விளங்கும் திருநாடாம். அனுப்பும் பொருளுள்ளும் விலை மலிந்த உணவுப் பொருளினும், விலை மிகுந்த கைத்தொழிற் பொருள்களே பெருவாரியாக அனுப்பப் பெறுதல் வேண்டும். பிறநாட்டுப் பொன்னைப் பெரும் அளவில் தருவன அவையே. அனுப்பும் பொருள்களையும், உலகமக்கள் உள்ளம் மகிழ்ந்து விரும்பி வாங்குமாறு நல்லனவாய், நனி சிறப்புடையவாய் ஆக்கி அனுப்புதல் வேண்டும். அத்தகு பொருள்களை அளவின்றி ஆக்கித் தருமாறு, தொழில் நிலையங்களும், தொழிலாளர்களும் நாட்டில் நின்று நிலைபெறுதல் வேண்டும். வணிகநூற் புலவர்கள் அறிந்துகூறும் உண்மைகள் இவை. இவ்வுண்மைகளை உள்ளவாறு உணர்ந்து, ஒரு சிறிதும் பிறழாது கடைப்பிடித்து ஒழுகித் தம் நாட்டு வாணிகத்தை வளர்த்தவர் தமிழ்நாட்டு மக்கள்.

பழந்தமிழ் வாணிகம், நீண்ட, நனிமிகப்பழைய வரலாற்றுச் சிறப்பினை உடையது. கிறிஸ்து பிறப்பதற்கு மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட காலத்தே

தொடங்கிய தமிழ்நாட்டு வாணிகம், கி. பி. பதினான்காம் நூற்றாண்டுவரையிலும் வளம் குன்றாது தலை நிமிர்ந்து நடைபெற்றுள்ளது. தொடர்ந்து இத்துணை நீண்ட காலம், வாணிக உலகத்தின் வல்லரசாய் வாழ்ந்த நாடு, உலகில் வேறு எந்நாடும் இலது. என்னே நம் செந்தமிழ் நாட்டின் வாணிகச் சிறப்பு !

தமிழர், பண்டு மேற்கொண்டிருந்த வாணிக வாழ்க்கையினை விளங்க உரைப்பதன் முன், அதை அறிதற்குத் துணைபுரியும் சான்றுகள் யாவை என ஆராய்வோமாக.

பழந்தமிழ்ப் புலவர்கள் தங்கள் வாழ்நாட்காலத்திலும், அதற்குச் சிறிது முற்பட்ட காலத்திலும் வாழ்ந்த மக்களின் வாழ்க்கையோடு தொடர்புடைய பல்வேறு நிகழ்ச்சிகளையும், நிழற்படம் போல் எடுத்துக் காட்ட வந்த சொல்லோவியங்களே செந்தமிழ்ப் பாடல்களாம். ஆதலின், அப் பாக்களை அறிவார், அக்காலமக்கள் அன்று மேற்கொண்டிருந்த வாணிக வாழ்க்கையினையும் அறிதல்கூடும். ஆகவே, பழந்தமிழ் வாணிக நிலையினை விளங்க உணர்வார்க்குப் பழந்தமிழ் இலக்கியங்களாய பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் இணையற்ற துணைகளாம்.

இனி, தமிழகத்தோடு வாணிகம் புரிந்த நாடுகளில் வாழ்ந்தார் சிலர், தங்கள் நாடுகளோடு வாணிகத் தொடர்புகொண்ட அத்தமிழகத்தைக் காண வேண்டி நேரில்வந்து, ஆண்டுத் தாம் கண்டு அறிந்தனவற்றையும், அவ்வாறு அறிந்தார் சிலர் வந்து கூறக் கேட்டன

வற்றையும் எழுதிவிட்டுச் சென்ற குறிப்புக்கள் பெருந் துணை புரிவனவாம். அவையாவன:

1. வரலாற்றாசிரியர்களின் தந்தை என மதிக்கத் தக்க பழம்பெரும் வரலாற்று ஆசிரியராகிய, கிரேக்க நாட்டைச் சேர்ந்த **ஹெரோடோடஸ்** என்பார், கி. மு. 484–ல் எழுதிய நூல்கள்.

2. **பிளினி** என்பார், கி. பி. 77–ல் எழுதிய "இயற்கைநூல்."

3. கி. பி. முதல் நூற்றாண்டிலேயே, பிளினி தன் "இயற்கைநூலை" எழுதி முடித்த பின்னர், கிரேக்க நாட்டு வணிகன் ஒருவன் எழுதிய "செங்கடற் செலவு" என்ற நூல்.

4. **தாலமி** என்ற கிரேக்க நாட்டு நிலநூல் அறிஞன் ஒருவன், கி. பி. 140–ல் எழுதிய "நிலநூல்."

5. **சுலைமான்** என்ற ஓர் அராபிய வணிகன், கி.பி. 850–ல் எழுதிவைத்த சில வாணிகக் குறிப்புக்கள்.

6. சுலைமான்எழுதிவைத்த அவ்வாணிகக் குறிப்புக் களைப் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வெளியிட்ட **அபுசையித்து** என்பான், அராபிய வணிகர் வழித் தான் அறிந்த பிறவற்றையும் கூட்டிக் கூறிய குறிப்புக்கள்.

7. **அல்பிரூனி** என்ற ஓர் அராபியப் பேரறிஞன், கி. பி. பதினொன்றாம் நூற்றாண்டில் எழுதிய நூல்.

8. அல்பிரூனி எழுதிய அந்நூலை அடிப்படையாகக் கொண்டு, **இரவிதுடீன்** என்பான் பதினான்காம் நூற்றாண்டில் எழுதிய நூல்.

9. **அப்துல்லா வாஸாப்** என்ற அராபியன், பதின்மூன்று, பதினான்காம் நூற்றாண்டுகளில், பாண்டி நாட்டார், அராபியரோடு நடத்தி வந்த குதிரை வாணிகத்தைப்பற்றி விளங்க எடுத்துரைத்த நூல்.

10. **மார்க்கோ போலோ** என்ற வெனிஸ் நகரத்தான் ஒருவன், சீனம் முதலாம் நாடுகளைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்து தமிழகத்தின் பல்வேறு கடற்கரைப் பட்டினங்களுக்கும் சென்று, ஆங்கு நடைபெறும் கடல்வாணிக வளங்களைக் கண்டறிந்த பின்னர், பதின்மூன்றும் நூற்றாண்டின் இறுதியில், தாம் அறிந்தனவற்றை எழுதிவைத்த உயர்ந்த அறிவியல் நூல்.

11. பதினான்காம் நூற்றாண்டில் வட இந்தியாவில் அரசு அமைத்து ஆண்டிருந்த முகமது டொக்ளக்கின் அரசவையில் ஓர் அதிகாரியாய் அமர்ந்திருந்த, **இபன் பதூதா** என்ற, வட ஆப்பிரிக்கநாட்டு மூர் இனத்தான் ஒருவன், கோழிக் கோட்டில் கப்பல் ஏறிச்சீன நாட்டிற்குச் செல்லுங்கால், இடையே கப்பல் கவிழ, நாகப்பட்டினத்தில் கரையேறித் தமிழ் நாட்டின் தலை நகரங்கள் சிலவற்றில் சிலநாள் வாழ்ந்து பிறகு சீனம் சென்று, தன் ஊர் அடைந்து எழுதிய நூல்.

12. **ஹுர்த், ராக்ஹில்** என்ற ஆங்கிலப் பேராசிரியர்கள் மொழிபெயர்த்து வெளியிட்ட, " தங்-குவோ-சி-பு," "பிங்-சௌ-கோ-மன்," " சுங்-சி," " சௌ-கோ-பெய் " முதலாம் சீன நூல்கள்.

இனி, அரசரும் பிறரும், கோயில்களுக்கும் அறநிலையங்களுக்கும் அளிக்கும் நிலதானம் முதலாயின

வற்றையும், அரசர்கள் தங்கள் காலத்தில் வாணிகம் முதலாம் தொழில் மேற்கொண்டு வாழ்ந்தார்க்கு வழங்கிய உரிமைகளையும் கற்களிலும், செப்பேடு களிலும் எழுதிவைக்கும் வழக்காறு எழுந்த காலத்தே அக்கால நிலைமையை நன்கு உணர்த்த அக்கல்வெட்டு களும், செப்பேடுகளுமே பெருந்துணைபுரிய வல்லவாம். அவற்றுள், அக்காலத்தில் நடைபெற்ற வாணிப நிலை யினை விளங்க உரைப்பனவும் சில உள. அவையாவன:

1. **தானுரவி** என்ற சேர அரசன், **சாபீர் இசோ** என்ற கிருத்துவவணிகனுக்கு வழங்கிய உரிமை உணர்த்தும் கோட்டயம் செப்பேடுகள்.

2. **வீரராகவச் சக்ரவர்த்தி** என்ற சேர அரசன், **இரவிகொற்றன்** என்ற வணிகனுக்கு வழங்கிய வாணிக உரிமையுணர்த்தும் கோட்டயம் செப்பேடுகள்.

3. நாகப்பட்டினத்துப் புத்தப் பள்ளிக்கு முதலாம் இராசராச சோழனும், முதலாம் குலோத் துங்கச் சோழனும் தானம்பல அளித்து உரிமை செய்ததை உணர்த்தும் ஆனைமங்கலம் செப்பேடுகள்.

4. பர்மாவில் **பகான்** என்ற ஊரிலும், சுமத்திரா வில், **லோபோடாவா** என்ற ஊரிலும், சீயத்தில் **தக்குவாபா** என்ற ஊரிலும் கண்டெடுக்கப் பெற்ற தமிழ்க் கல்வெட்டுக்கள்.

2. புறவாணிகம்

முப்புறமும் முந்நீரால் சூழப்பட்டது தமிழ்நாடு. இவ்வாறு நீண்ட கடற்கரையைப் பெற்ற தமிழ்நாட்டு மக்கள், கடலில் சிறியவும் பெரியவுமாய கலங்களைப் பருவக்காற்றின் பண்புணர்ந்து செலுத்தும் சீரிய அறிவினைப் பண்டே பெற்றிருந்தமையில் வியப்பேதுமில்லை. கடைச்சங்க காலத்தே சோணாடாண்ட பேரரசனாகிய கரிகாற்பெருவளத்தானின் முன்னோன் ஒருவன், காற்றின் நிலைகண்டு, கடலிடையே கலம் செலுத்திச் சிறப்புற்றான் என, வெண்ணிக்குயத்தியார் என்ற பெண்பாற் புலவர் கூறியுள்ளார். தமிழ்நாட்டுக் கடற்கரை நிலங்களாய நெய்தல் நிலத்தே வாழ்ந்து பரதவர் எனப் பெயர் பூண்ட மக்கள், சுறா போலும் பெரு மீன் பிடித்தலும், முத்துக்குளித்தலும் உப்பு விளைத்தலும் ஆகிய தொழில் பூண்டு, கடல்மேல் வாழ்க்கையில் நன்கு பழகி இருந்தனர். அதனால், அவர்கள் பருவக்காற்றினைப் பயன்கொண்டு, தமிழகத்தைச் சூழஉள்ள நாடுகளுக்குக் கலம் செலுத்தித் தம் நாட்டு வாணிகம் வளரப் பெருந்

துணை புரிந்தனர். "கலம்புணர் கம்மியர்," "கலஞ் செய் கம்மியர்" என அவர்க்குப் பெயர்சூட்டிப் பாராட்டுகிறது மணிமேகலை. அப்பரதவருள், மேற்குக் கடற்கரைக்கண் வாழும் வாய்ப்பினைப்பெற்றவர், பருவக் காற்றின் துணை பெறமாட்டாக் காலத்திலும் துடுப்புக் களின் துணையால் கலங்களைக் கரையோரமாகவே செலுத்திச் சென்று, ஆப்கனிஸ்தானைக் கடந்து, பாரசீக வளைகுடாவினை அடையக் கற்றிருந்தனர்.

எகிப்து நாட்டிலும், சிற்றாசியாவிலும், மெசபடோமியாவிலும் மண்ணினின்றும் இன்று தோண்டி எடுக்கப் படும் புதை பொருள்கள், பர்ஷியா, மெசபடோமியா, சிற்றாசியா, சிரியா, பாலஸ்தீனம், எகிப்து, சோமாலிலாந்து, கிரீக், உரோம் முதலாம் மேலை நாடுகளோடு, தமிழர்கள் மிகப் பழைய காலத்திலிருந்தே வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதை உறுதி செய்ய வல்ல நல்ல சான்றுகளாம் என, உலகப் பேரறிஞர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

மேலை நாடுகளோடு வாணிக உறவு கொண்ட தமிழர், சுமத்ரா, சாவகம், மலையா, சீயம், சீனம் முதலாம் கீழ்த்திசை நாடுகளோடு வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். தமிழர் சீனர் வாணிக உறவு, கிறிஸ்துபிறப் பதற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலேயே ஏற்பட்டுவிட்டது. அக்காலத் தமிழ் மக்கள் அறிந்த பொருள்களாய **சீனம்** என வழங்கிய பட்டாடையும், **சீனி** என வழங்கிய சர்க்கரையும் அவ் வுறவுண்மையினை உறுதி செய்கின்றன.

தமிழகமும் சுமேரியாவும்

ஈராக் நாட்டில், டைக்ரஸ், யூப்ரடீஸ் என்ற ஈராறு பாயும் மெசபடோமியப் பள்ளத்தாக்கில் விளங்கிய சுமேரிய நாகரிகம், பழந்தமிழ் நாகரிகமேயாம். ஆங்கு அந் நாகரிகத்தைத் தோற்றுவித்தவர், ஆண்டுக் குடியேறிய பழந்தமிழ் வணிகர்களேயாவர் என வரலாற்றுப் பேராசிரியர்கள் பலரும் வரைந்து கூறுவர். திருவாளர் **எச். ஆர். அல்** என்பார், தாம் எழுதிய வரலாற்று நூல் ஒன்றில், " உருவச்சிலைகள், உருவ ஓவியங்கள் இவற்றின் துணை கொண்டு கண்ட சுமேரிய மக்களின் உடலமைப்பு முறை, தம்மைச் சூழ வாழ்ந்து, செமிடிக், ஆரிய மொழிகளை வழங்கிய மக்களின் உடலமைப்பு முறையோடு ஒற்றுமை உடையதாகத் தோன்றவில்லை. அது பழந்தமிழ் மக்களின் உடலமைப்பு முறையோடே ஒற்றுமை கொண்டுள்ளது. ஆகவே, சுமேரிய மக்கள், நிலவழியாகவும், நீர்வழியாகவும் பர்ஷியா எனப்படும் ஈரான் நாட்டைக் கடந்து வந்து, ஈராக் நாட்டு மெசபடோமியப் பள்ளத்தாக்கில் குடியேறிய தமிழர்களேயாவர். இதை உறுதி செய்யவல்ல வேறு நல்ல அகச் சான்று எதுவும் கிடைத்திலது என்றாலும், இக் கொள்கை ஏற்றுக் கொள்ளக் கூடாத தொன்றன்று; ஏற்றுக்கொள்ளக் கூடியதே " என எழுதி முடிவு செய்துள்ளார்.

திருவாளர் **சாய்ஸ்** என்பார், தம்முடைய சொற்பொழிவு ஒன்றில், " கிறிஸ்து பிறப்பதற்கு நாலாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டகாலத்தே, சுமேரிய அரசர்களின் தலைநகராய்த் திகழ்ந்து, அழிந்துபோன **ஊர்** எனும்

இடத்தில், தமிழ்நாட்டைச் சேர்ந்த தேக்கு மரத் துண்டுகள் கண்டெடுக்கப் பட்டுள்ளன. மெசபடோமியப் பள்ளத்தாக்கில் விளங்கிய மிகப் பழைய பேரூராகிய **பாபிலோனியாவிலும்** அதைச் சூழஉள்ள நாட்டிலும் வாழ்ந்த மக்கள் அணிந்த மிகப்பழைய ஆடைவகைளுள் **சிந்து** எனும் பெயருடையதொரு ஆடையும் இடம் பெற்றுளது" என்று கூறியுள்ளார்.

"**சிந்து** எனும் இச்சொல்; தமிழின் உடன் பிறப்பு மொழிகளாய துளுவிலும் கன்னடத்திலும் ஆடையின் ஒரு பகுதி எனும் பொருளில், **சிந்தி** எனும் வடிவிலும், தமிழில் கொடி எனும் பொருளில் **சிந்து** எனும் வடிவிலும் வழங்கும் சொல்லின் திரிபேயாகும். அது **சிந்து** என்ற வட இந்திய ஆற்றின் பெயரினின்றும் பிறந்ததாகாது. மேலும், பர்ஷியா வழியாகச் சென்ற வணிகர் வழியாகச் சென்றதும் அன்று. கடல் வழியாகச் சென்ற தமிழ் வணிகர், அச்சொல்லைத் தமிழகத்தினின்று நேரே கொண்டு சென்று, ஆண்டு வழங்கியிருத்தல் வேண்டும். பர்ஷியா வழியாகச் சென்றதாயின், அந்நாட்டு மக்கள் ஒலிப்பில், 'ச'கரம், 'ஹ'கரமாக மாறும் இயல்பிற்கு ஏற்ப, **சிந்த்** என்ற வட இந்திய ஆற்றின் பெயர், **ஹிந்த்** என ஆனதைப் போன்றே, இச்சொல்லும் **ஹிந்து** என ஆகியிருத்தல் வேண்டும். ஆனல், அது அவ்வாறு திரியாது, தமிழ்நாட்டில் உள்ளவாறு **சிந்து** என்றே ஒலிக்கப் பெறுகிறது. அதனுல், அது தமிழ்ச் சொல்லே; தமிழ் நாட்டினின்றும் சென்றதே என்பதை உறுதி செய்யும்" என்று கூறுவர் தமிழர் வரலாறு என்ற நூலின் ஆசிரியர்.

இவ்வாறு, திருவாளர் **சாய்ஸ்** அவர்கள் அறிந்து கூறும் இவ்விரு உண்மைகளும், திருவாளர் **எச். ஆர். அல்.** அவர்களின் கொள்கைக்கு அரண் அளித்துத் தமிழர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கடல் கடந்து சென்றனர்; கடல் கடந்த நாடுகட்குச் சென்று மீண்டதோடு, அக்கடல் கடந்த நாடுகளிலேயே வாழவும், அங்குள்ளார்க்கு வழிகாட்டவும் தொடங்கினர் என்ற உண்மையினை உறுதி செய்து நிற்கின்றன.

தமிழகமும் எகிப்தும்

தமிழ்நாட்டு வணிகர், மெசபடோமியப் பள்ளத் தாக்கோடு நின்றாரல்லர். கிறிஸ்து பிறப்பதற்கு மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட காலத்திலிருந்தே, அவர்கள் சோமாலிலாந்து, எகிப்து முதலாம் வடஆப்பிரிக்க நாடுகளோடும் வாணிகம் புரியலாயினர். எகிப்துநாட்டு மக்களுக்கும், தமிழகத்து வணிகர்க்கும் நடைபெற்ற இவ்வாணிகத்தில் இடையே தரகர்களாய் இருந்து துணைபுரிந்தவர் அராபியநாட்டு வணிகராவர். தமிழ் நாட்டுப் பொருள்கள், எகிப்துநாட்டுக் கடைவீதிகளில் குவிந்து கிடந்தன எனினும், அப்பொருள்களை ஆங்குக் கொண்டு சென்று விற்றவர் தமிழ் வணிகரல்லர். தமிழ் வணிகர், பர்ஷிய வளைகுடாவோடு, ஏடன் நகரத்தோடு நின்று விட்டனர். ஆங்கு அவர் கொணர்ந்து குவித்த பொருள்களை, ஆங்கிருந்து எகிப்து முதலாம் நாடுகளுக்குக் கொண்டு சென்றவர் அராபியரே.

பருவக்காற்றின் பயனறிந்த பழந்தமிழ் வணிகர், தம் கலங்களில், மலைபடு பொருள்களான மிளகு, ஏலம்,

இலவங்கம், இஞ்சி, தந்தம், சந்தனம், அகில், கருங்காலி, தேக்கு முதலியவைகளையும், கடல்படுபொருள்களான முத்து, பூனக்கண் முதலாம் மணிகளையும், நூலும் பட்டும் விரவி நெய்யப்பெற்ற சோழநாட்டு உறையூர்ப் பூந்துகில்களையும் நிரப்பிக்கொண்டு, வடகிழக்குப் பருவக் காற்று வீசும் காலத்தே புறப்பட்டு, செங்கடல் நுழை வாயிற்கண் உள்ள ஏடன் சென்றடைவர். ஆங்குத் தமிழ் வணிகர்பால், அப்பொருள்களைப் பெற்றுக் கொண்ட அராபிய வணிகர், எகிப்துநாட்டின் தலைசிறந்த துறைமுகமாகிய **அலக்சாண்டிரியா, சோமாலிலாந்து,** ஈராக் நாட்டில் யூப்ரடீஸ் ஆற்றங்கரைக்கண் உள்ள **பாஸ்ரா,** டைக்ரஸ் ஆற்றங்கரைக்கண் உள்ள **மோசல்,** ஈராக் நாட்டின் தலைநகராய **பாக்டாட்,** சிரியாநாட்டுத் தலைநகராய **டமாஸ்கஸ், சிற்றுசியா** முதலாம் இடங் கட்குக் கொண்டுசென்று விற்றுவிட்டு, அவற்றிற்கு ஈடாக, ஆங்குத் தாம் வாங்கிக்கொணர்ந்த, பொன்னிழை யால் புனையப்பெற்ற விலையுயர்ந்த ஆடைகள், டமாஸ்கஸ் நகரத்துப் புகழ்பெற்ற பட்டாடை, வேலைப்பாடமைந்த கண்ணுடிப் பொருள்கள், ரோசாப்பூவிலிருந்து எடுத்த பனிநீர் அத்தர் போன்ற நறுமணப் பொருள்கள், மணம் மிக்க மாப்பிசின்கள், பெருங்காயம், காண்டா மிருகத்தின் கொம்பு இவை போலும் வேறுபல விலை யுயர்ந்த பொருள்களையும், பொன்னையும் தமிழ்நாட்டு வணிகர்க்கு அளிப்பர். அவற்றைத் தம் கலங்களில் ஏற்றிக்கொண்ட தமிழ்வணிகர், தென்மேற்குப் பருவக் காற்றுக் காலத்தே புறப்பட்டுத் தமிழகம் வந்துசேர்வர்.

"கிறிஸ்து பிறப்பதற்கு 2600 ஆண்டுகட்கு முன்னரே, நறுமணப் பொருள்கள், சிறுத்தைப்புலி,

தந்தம், நூலாடை, கருங்காலி, அரிசி முதலாம் பொருள் களை எகிப்துநாட்டு அரசர்கள் விரும்பி வாங்கிப் பயன் கொண்டனர்."

"கி. மு. 1580—1350-ல் எகிப்து நாடாண்ட பதி னேழாவது அரச இனத்தைச் சேர்ந்த அரசர்கள், தந்தம், தந்தத்தால் செய்யப்பெற்ற மேசை, நாற்காலி, பெட்டி, உருவச்சிலை முதலாம் பொருள்களைத் தமிழகத்தின் மேற்பாற் பகுதியினின்றும் பெற்று மகிழ்ந்தனர்.

"எகிப்து ஆண்ட பதினெட்டாவது அரசவழியில் வந்தோனுய **தேபன்** என்பான் ஆட்சிபுரிந்த காலத்தில், சாம்பிராணி, கருங்காலி, தந்தம், பொன், இலவங்கம், நறுமணப் பொருள்கள், கண்மை, வாலில்லாக் குரங்கு, குரங்கு, நாய், சிறுத்தைப்புலித்தோல் முதலாம் பொருள்களை, எகிப்தியர் சோமாலிலாந்திலிருந்து பெற் றனர்."

"கி. மு. 1198-1167-ல், எகிப்து நாட்டில் **ரமேசெஸ்** என்ற மன்னன் அரசோச்சியிருந்த காலத்தில், அரசர் களின் கல்லறையில் இடுதற்கெனப் பொன், வெள்ளி, நவமணிகள், செம்பு, அரசஆடை, இலவங்கம் முதலாம் விலையுயர்ந்த பெரும் பொருள்களை எகிப்து நாட்டினர் ஆண்டுதோறும் திரட்டி வைத்திருந்தனர்." இவை போலும் பல அரிய உண்மைகளை, எகிப்துநாட்டுப் பழைய அரசியற் குறிப்புக்கள் அறிவிக்கின்றன.

எகிப்துநாட்டு மக்களும், அரசர்களும் விரும்பி வாங்கிய இப்பொருள்களெல்லாம், தமிழ்நாட்டு வணிகர், ஏடன்போலும் இடைநிலங்களில், அராபிய வணிகரிடம்

பண்டமாற்றிக் கொடுத்த பொருள்களே. தமிழரிடம் தாம் பெற்ற அப்பொருள்களை, அராபிய வணிகர், அவற்றை விற்கும் இடங்களில், அவற்றைத் தம் பொருள்களாகவும், தம் நாட்டகத்தே உளவாம் பொருள்களாகவும் கூறி விற்றனர். அப்பொருள்கள் கிடைக்கும் நாடு எது? அவற்றைத் தங்களுக்குக் கொண்டுவந்து கொடுப்பவர் யாவர்? அவர்கள் கொண்டு வரும் வழி எது? என்பனவற்றை, அப் பொருள்களை விரும்பி வாங்கும் மக்கள் அறிந்துவிடுவாராயின், அவர்கள், அப்பொருள் கிடைக்கும் நாடுகட்கு நேரே சென்று அவற்றைத் தாமே பெற்றுக்கொள்வரே! அந்நிலை உண்டாகிவிடுமாயின், இருவர்க்கும் இடையே இருந்து பண்டமாற்றித் தருவதால், தாங்கள் பெறும் பெருவளம் இல்லாமற் போய்விடுமே! என்ற அச்சம், அராபிய வணிகரை, உண்மையை மறைத்து உரைக்கச் செய்தது

தமிழகமும் பாலஸ்தீனமும்

கி. மு. இருபதாம் நூற்றாண்டு முடிவுறுதற்குச் சிறிது காலத்திற்கு முன்னே, ஏப்ரூமக்கள், எகிப்து நாட்டில் தாம் வாழ்ந்த அடிமை வாழ்வை வெறுத்து ஒழித்து வெளியேறிப் பாலஸ்தீனம் புகுந்துஅரசமைத்து வாழத் தொடங்கினர். ஆங்குவந்த அவர்கள், தாங்கள், பண்டுவாழ்ந்த இடத்தில், வாங்கிப் பயன்துய்த்துப் பழகிய பொருள்களையெல்லாம், ஆண்டும் பெற விரும்பினர். அதனால், அப்பொருள்களை எகிப்து நாட்டிற்கு அளித்த அராபிய வணிகர், பாலஸ்தீனத்திற்கும் கொண்டு சென்று விற்பாராயினர். ஏப்ரூமக்களின் சமய ஆசிரியர்கள், கடவுள் வழிபாட்டில் மேற்கொண்ட

எண்ணெயொடு கலக்கப்பெற்ற நறுமணப் பொருள் களுள், இலவங்கமும் ஒன்று என அந்நாட்டு வரலாற்று நூல்கள் நவில்கின்றன.

கி. மு. பத்தாம் நூற்றுண்டில், மன்னன் சாலம னுக்கு, ஷீபா அரசியார் அளித்தனவற்றுள், நறுமணப் பொருள்களும், விலைமதிக்கவொண்ணு மாணிக்கங்களும் இடம்பெற்றன என்றும், சாலமனுக்குரிய கலங்கள், மூன்று ஆண்டிற்கொருமுறை பொன், வெள்ளி, யானைத் தந்தம், சந்தனமரங்கள், வாலில்லாக் குரங்கு, வால் வனப் புற்ற மயில்கள் முதலாம் பொருள்களை வாரிக்கொண்டு வந்து வழங்கும் என்றும், அரசர்களின் அரண்மனையும், செல்வர்களின் பெருமனைகளும், பாட்டிசைக்கவல்லாரின் வீட்டுத் தூண்களும் அச்சந்தனமரங்களால் அமைக்கப் பெற்றன என்றும், அரசர் இருத்தற்குரிய அரியணையைத் தந்தத்தால் ஆக்கிப் பொன்னிழைத்து மகிழ்ந்தான் மன்னன் என்றும், அந்நாட்டு வரலாற்று நூல்கள் கூறுகின்றன. மன்னன் சாலமன் பெற்ற அப்பொருள்க ளெல்லாம்,தமிழ்நாட்டினின்றும் சென்றனவே என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. தமிழ்வணிகர், தமிழ்நாட்டுப் பொருள்களையே யல்லாமல், அவற்றின் தமிழ்ப்பெயர் களையும் ஆண்டுக்கொண்டு சென்று வழங்கினர். அகில் என்ற தமிழ்ச்சொல் "அஃலம்" என்ற வடிவிலும், தோகை என்ற சொல் "துக்கி" என்ற வடிவிலும், இவ்வாறே வேறு பல சொற்களும் ஏற்றவாறு திரிந்தும் அந்நாட்டு மொழியில் இடம்பெற்றுள்ளன. ஈண்டுக் கூறிய இவ் வரலாற்று உண்மைகளால், தமிழர், பாலஸ்தீன மக்க ளோடும் வாணிகத்தொடர்பு கொண்டிருந்தனர் என்பது உறுதியாதல் காண்க.

தமிழகமும் அசிரியாவும்

பாபிலோனியாவைத் தலைநகராகக் கொண்டு யூப்ரடஸ் பள்ளத்தாக்கில் விளங்கிய அசிரியா நாட்டோடும் தமிழர்கள் வாணிக உறவு மேற்கொண்டிருந்தனர். கி. மு. 860–ல் அரசாண்டிருந்த அந்நாட்டு அரசன் **ஷல்மனேசர்** என்பான் கல்லறை மீது வாலில்லாக் குரங்கு, யானை இவற்றின் உருவங்கள் வரையப் பட்டுள்ளன ; பொன்னும் பொற்கலன்களும், முத்தும் மணியும், பன்னிற ஆடையும், பல்வேறு நறுமணப் பொருள்களும் ஆங்குச் சென்று விலையாயின. கி. மு. 700–ல் அந்நாடாண்ட அரசன் ஒருவன், தான் கட்டிய அரண்மனைத் தோட்டத்தில் இந் நாட்டுப் பருத்திச் செடிகளை நட்டுப் பேணி வளர்த்தான். பருத்திச் செடிக்கு அந்நாட்டு மக்கள் அளித்த பெயர், “**மயிர் விளையும் மரங்கள்**” என்பதாம். நம் நாட்டு மிளகையும் இலவங்கத்தையும் அந்நாட்டு மக்கள் விரும்பி வாங்கினர். கி. மு. 600–ல் பாபிலோனியாவே ஆசிய பெருநிலப் பரப்பின் வாணிக நிலையமாய்த் திகழ்ந்தது. உலகின் பல்வேறு பகுதியைச் சேர்ந்த வணிகர் குலமக்களாகிய யவனர், யூதர், மிலேச்சர், தமிழர், சீனர் அனைவரும் அந்நகரில் வந்து வாழ்ந்தனர். அந்நகரில், அன்று குடியேறிய தமிழ் வணிகரின் வழிவந்தோர், கி. பி. ஏழாம் நூற்றுண்டிலும் ஆங்குக் காணப் பெற்றனர்.

தமிழரும் கிரேக்கரும்

பாபிலோனியா நகரின் பெருவாழ்வு அழிந்து விட்டது. கி. மு. 538–ல், கிரேக்கர்கள் அந்நகரை

வென்று அழித்தனர். ஆங்கு அமைதி குலேந்தது. அரசியற் குழப்பங்களுக்கும், கொள்ளேக் கூட்டத்தாரின் படையெடுப்புக்களுக்கும் நிலேக்களமாய் மாறிச் சீரழிந் தது. மேலும், அவ்வரசினே அழித்த கிரேக்கர், அதோடு அமையாது, பர்ஷிய வளேகுடா வழியாக நடந்துவந்த வாணிகத்தை அழித்து செங்கடல் வழி வாணிகத்தை வளர்த்தற்காம் வழி வகைகளேயும் செய்து விட்டனர்.

கிரேக்கப் பெருவீரனுய அலெக்ஸாண்டர், எகிப்தை வென்று, அவ்வெற்றியின் நினேவுச் சின்னமாய், அலெக் ஸாண்டிரியா என்ற பெயருடைய பெருநகர் ஒன்றைக் கண்டான். அன்று முதல் அந்நகரே வாணிக நிலேய மாய் விளங்கிற்று. சூயஸ் கால்வாய் கலம் செல்லற்கு ஏற்றவாறு செப்பம் செய்யப் பெற்றது. செங்கடலி லிருந்து, நைல் நதி வரையுள்ள இடைவழிகள், வணி கர்கள், தம் வாணிகப் பொருள்களோடு வழியச்சம் இன்றி இனிது செல்வதற்குத் தகுதியுடையவாய் செப்பம் செய்யப் பெற்றன. துறைமுகப் பட்டினங்கள் பல எழுந்தன. எகிப்து அரசினரும் வாணிக வாழ்விற்கு ஆக்கம் அளித்துப் போற்றினர். இதனுல் தமிழ்நாட்டு வாணிகர், பாரசீக வளேகுடாவிற்குச் செல்வது விடுத்துச் செங்கடற்குச் செல்வாராயினர். இதுகாறும் வாணிகத் தரகராய் வாழ்ந்த அராபிய வணிகர் இடத்தையும் கிரேக்கர் பற்றிக் கொண்டனர். இந்நிலே, உரோமானியப் பேரரசு, உலக அரங்கில் இடம்பெற்ற கி. பி. முதலாம் நூற்ருண்டுவரை தொடர்ந்து சென்றது.

வெள்ளே மிளகு, கருப்பு மிளகு, வால் மிளகு முதலாம் மிளகு வகைகள், மருந்தாகிப் பயன் தரும்

என்பதைக் கிரேக்கர் அறிந்திருந்தனர். இஞ்சியும், எண்ணெய்யும், தேங்காயும், தேக்கும் கிரேக்கரால் விரும்பி வாங்கப் பெற்றன. இவ்வாணிகத் தொடர்பின் விளைவாய்ச் செந்தமிழ்ச் சொற்கள் சில அந்நாட்டு மக்களிடையே சென்று வழங்கலாயின. அரிசி என்ற தமிழ்ச்சொல், " ஓரய்ஸ் " என்ற வடிவிலும், கருவாப் பட்டை என்ற சொல், " கார்பியன் " வடிவிலும், இஞ்சி வேர் எனும் சொல் " ஜிக்கிபெரோஸ் " என்ற வடிவிலும், வயிடூரியம் என்ற சொல், " பெரியலொஸ் " என்ற வடிவிலும் அந்நாட்டு மொழிகளில் இடம் பெற்றுள்ளன.

தமிழரும் அர்மீனியரும்

தமிழர் மேற்கொண்ட இவ்வாணிக வாழ்க்கையின் விளைவால், தமிழர் நாகரீகம் அந்நாடுகளிலும் சென்று இடம் பெற்றுவிட்டது. சிற்றுசியா, காகஸஸ் ஆகிய இரு நாடுகளுக்கும் இடையே உள்ள அர்மீனியா நாட்டில், யூப்டீரஸ் ஆற்றின் கரையில், கி. மு. இரண்டாம் நூற்றுண்டில் குடியேறி வாழ்ந்த இந்நாட்டு வணிகர், ஆங்குக் கிருஷ்ணனுக்கும் பலதேவனுக்கும் கோயில் கட்டி வழிபட்டனர். அக் கடவுளர் இருவரும் " கிஸனி," " தெமெதெர் " என்ற பெயரோடு அந் நாட்டு மக்களால் இன்றும் வழிபடப் பெறுகின்றனர்.

கிருஷ்ண வழிபாடு இன்று வடஇந்தியாவிலேயே பெரும் அளவு மேற்கொள்ளப்படுகிறது என்றாலும், கிருஷ்ணனையும், பலதேவனையும் ஒருங்கே வைத்து வழிபடும் வழக்கம் வடஇந்திய வழக்கமன்று. அவ்விரு

கடவுளரையும் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே "மாயோன்" எனவும், "வாலியோன்" எனவும் பெயரிட்டு வழிபட்டனர் தமிழர். கிருஷ்ணனுக்குரிய கோயில்கள் அளவிறந்துள்ள வடநாட்டில், பலதேவனுக்குரிய கோயிலைக் காண்டல் அரிதாம்; ஆனால், மாயோன் கோயிலை அடுத்துக் கட்டப்பெற்ற பலதேவன் கோயில் காவிரிப்பூம்பட்டினத்திலும், மதுரையிலும் இருந்தது எனச் சங்கநூல்கள் கூறுகின்றன. மேலும், பலதேவனுக்குக் கொடி பனைமரக் கொடி எனக் கூறுவர். பனைமரம் கங்கை பாயும் மணலற்ற நிலங்களில் வளராது; அது, மணல்நிறைந்த தமிழ்நாட்டு ஆற்றங் கரைகளிலேயே வளரும். கூறிய இக் காரணங்களை அடிப்படையாகக் கொண்டு, கண்ணனுக்கும் பலதேவனுக்கும் கோயில்கட்டி ஒன்றாக வைத்து வழிபடும் வழக்கம் வடஇந்தியாவில் பண்டு இடம்பெறவில்லை; தமிழகத்திலேயே இருந்தது; ஆகவே, அர்மீனியாவில் நிலவும் அவ்வழிபாட்டு நாகரிகத்தை ஆங்குக் கொண்டு சென்றவர் தமிழ்நாட்டு வணிகரே என முடிவு செய்வர் வரலாற்று நூல்வல்லார்.

தமிழரும் உரோமானியரும்

கி. மு. முதல் நூற்றாண்டின் இறுதிக் காலத்தே, உரோமானியர் பேரரசு செலுத்தத் தொடங்கினர். மத்தியதரைக் கடலைச் சூழவுள்ள நாடுகள் எல்லாம் அவர்கள் ஆட்சிக்கீழ் வந்துற்றன. பேரரசன் அகஸ்டஸ் எகிப்தைக் கைப்பற்றினான். தாம் வென்ற நாடுகளில் அவர்கள் கைப்பற்றிக் கொணர்ந்த செல்வத்தால், உரோம் நகரத்து அரசியற் பண்டாரங்கள் நிறைந்தன.

உரோமானியர், பண்டு மேற்கொண்டிருந்த எளிய வாழ்வை மறந்தனர். நாகரீக வாழ்வில் நாட்டம் கொண்டனர். அதற்கேற்ப அகஸ்டசும், தமிழகத்தோடு, தன்னூடு கொண்டிருந்த வாணிக உறவினைப் பல்லாற்றானும் வளர்க்க முனைந்தான். அவன் அவையில், பலநாட்டு அரசியல் தூதுவர் வந்து வாழலாயினர். ஆங்குவந்த தமிழ்நாட்டு அரசியல் தூதுவர் நன்கு வரவேற்கப் பெற்றனர். இத்தகைய நெறிமுறைகளால், தமிழர் வாணிகம் அங்கு வளரத் தொடங்கிற்று.

வாணிகம் வளர்ந்தது; அந்நாட்டு மக்கள், நாகரீக வாழ்வில் கொண்ட வேட்கையின் விளைவால், வகை வகையான வனப்பூட்டும் வெளிநாட்டு வாணிகப் பொருள்கள் வரம்பின்றி வந்து குவிந்தன. அவற்றிற்கு ஈடாகத் தரவல்ல பொருள்கள் அங்கு இல்லாயின. அதனால் ஆட்சியாளர் பொற்காசுகளை வழங்கினர். அன்றுமுதல் பொருளுக்குப் பொருள் என்ற பண்டமாற்று முறை மாறிக் காசுக்குப் பொருள், பொருளுக்குக் காசு என்ற புதுமுறை புகுந்தது. எண்ணற்ற உரோம் நாணயங்கள் வெளி நாடுகளில் சென்று வழங்கலாயின. உரோம் நாட்டு அரசியல் பண்டாரங்கள் வறண்டன. மதிப்பிடமாட்டாப் பொன்னும் வெள்ளியும் ஆண்டு தோறும் அயல் நாடுகட்குப் போவதைத் தடுத்தாக வேண்டும் என உணர்ந்து, அவ்வாறே சட்டம் இயற்றினர் ஆட்சியாளர்கள். தமிழகத்திற்கு மட்டும், ஆண்டு தோறும் நூறாயிரம் பவுன் எடையுள்ள பொன் நாணயங்கள் வந்து குவிந்தன. பொருளேற்றிச் சென்ற தமிழ் வணிகர், தம் கலங்கள் நிறைய

பொன்னும், வெள்ளியும் தவிர வேறு பொருள்களை ஏற்றிவந்திலர். உரோம் நாட்டுப் பொன் நாணயங்கள் தமிழகம் எங்கும் புதையுண்டு, நிலத்தைத் தோண்டுங் கால் ஆங்காங்கே இன்றும் கிடைக்கின்றன.

நம் நாட்டுக் கிளியும் மயிலும், குரங்கும் பிறவும் அந்நாட்டு மகளிரின் விளையாட்டுத் தோழர்களாயின. புலியும் சிறுத்தையும் வீரர்களின் பாராட்டிற்குரிய வாயின. எருமையும், யானையும் எண்ணற்றன சென்றன. நம் நாட்டு வேட்டை நாய்களை, விரும்பி வாங்கினர்கள்.

யானைத் தந்தமும், எருமை நெய்யும், விலங்கின் தோலும், ஆமை ஓடும், பஞ்சும், பட்டும் தமிழகத்தை விட்டு, உரோம் நாட்டு வாணிக வீதிகளில் சென்று குவிந்தன. உரோமப் பேரரசின் பெருவளத்தை வற்றச் செய்த வணிகப் பொருள்களுள் கொற்கைத் துறை முத்தே முதலிடம் பெற்றது. நம் நாட்டு முத்தை, அந்நாட்டு மக்கள் பெரிதும் விரும்பினர். அரசிளங் குமரிகள், மதுவில் முத்திட்டுக் குடித்தனர் என எழுதி யுள்ளார்கள், அந்நாட்டு வரலாற்றாசிரியர்கள். இது போலும் நிகழ்ச்சிகளால், முத்தின் விலை அளவின்றி உயர்ந்தது. கிடைத்தற்கு அரிதாகிய காலத்தே, முத்து ஒன்று, எண்ணுயிரம் பவுன் நிறையுள்ள பொன்னின் மதிப்புடையதாகக் கருதப்பட்டது.

முத்தை அடுத்து, தமிழகத்தின் செல்வம் தழைக்கச் செய்த பொருள் மிளகு. உரோமானியர் மிளகின்பால் கொண்டிருந்த வேட்கையைநோக்கி, மிளகிற்கு, "யவனப் பிரியா" என்ற பெயர் வழங்கலாயிற்று. உரோம் நகர்

நோக்கிச் செல்லும் தமிழ்க் கலங்கள், பாதிக்கும் மேலாக மிளகையே கொண்டு சென்றன. மிளகோடு இஞ்சியும், இலவங்கமும் சென்றன; தேனும், சர்க்கரையும் சென்றன. வெல்லமும், எண்ணெய்யும் வாணிகப் பொருள்களாயின. உறையூர் சேலைகளும், உயர்ந்த வகைப் பஞ்சும், உரோம் நாட்டு நகரங்களில் விரும்பி வாங்கப் பெற்றன. அகிலும், சந்தனமும், தேக்கும், கருங்காலியும், இவற்றுலாய பல்வேறு பொருள்களும், உரோமானியரின் இல்லங்களை நிறைவித்தன. ஆசிரியர் பிளினி, தேங்காய் எண்ணெய், வாழைப் பழங்கள், அரிசி, சோளம், புளி, வெற்றிலை, பாக்கு முதலாம் உண்ணும் பொருள்களும் சென்று விலையாயின எனக் கூறியுள்ளார்.

மாணிக்கம், மரகதம், நீலம், வைடூரியம் முதலாம் விலையுயர்ந்த கற்களும் அவை போலும் தோற்றம் உடைய விலைமலிந்த கண்ணாடிக் கற்களும், அந்நாட்டு மக்களால் விரும்பி வாங்கப் பெற்றன.

விலங்குகளையும், பறவைகளையும், விலங்கின் உறுப்புக்களையும், மரங்களையும், செடிகளையும், மரப் பொருள்களையும், உணவுப் பொருளையும், உடை வகையினையும், மண்ணையும், கல்லையும் கொண்டு சென்ற தமிழ்நாட்டு வணிகர், இவற்றிற்கு விலையாகப் பெரும் பாலும் பொற்காசுகளையே பெற்று வந்தனர். பவழம், உயர்வகை மது, ஈயம், தகரம் முதலாம் பொருள்களையும், ஓரோவழி வாங்கி வந்தனர்.

தமிழர், உரோமானியரோடு நடத்திய இவ்வாணி கத்தின் விளைவாய், உரோமானியர் பலர், தமிழகத்திற்கு

வந்தனர். வாணிகம் கருதி வந்த அவர்கள், காலம் செல்லச் செல்லத் தமிழகத்திலேயே நிலையாக வாழவும் தலைப்பட்டனர். மேற்குக் கடற்கரை நகராகிய முசிறியில் தங்கள் நாட்டு மன்னன் அகஸ்டசுக்குக் கோயில் ஒன்று கட்டி வழிபட்டனர். வெளிநாட்டினின்றும் வந்த அவர்கள், தமிழகத்தாரால் யவனர் என அழைக்கப் பெற்றனர். யவனர் பலர் கூடிவாழ்ந்த இடங்களையும், தச்சு முதலாம் தொழில் வல்ல யவனர்களையும், அன்னார் இயற்றிய யவனப் பாவை, யவனப் பேழை, யவன மஞ்சிகை முதலாம் அரிய வேலைப்பாடமைந்த பொருள் களையும் பழந்தமிழ் நூல்கள் அறிந்து பாராட்டியுள்ளன. உடற்கட்டும், உள்ள உரனும் உடைய யவனர், வெளி நாட்டவராய், இந்நாட்டு நிகழ்ச்சிகளில் விருப்பு வெறுப்பு அற்றவராய் இருப்பதறிந்த தமிழ் அரசர், தம்மையும், தம் அரண்களையும் காக்கவல்ல காவலராய் அவரையே அமைத்தனர். "வெருவரும் தோற்றத்து வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்;" "கடிமதில் வாயில் காவலிற் சிறந்த அடல்வாள் யவனர்" என அவர் காவல்வன்மை யைப் பழந்தமிழ் மக்கள் பாராட்டி யுள்ளதும் உணர்க.

தமிழரும் அராபியரும்

தமிழ் வணிகர், பர்ஷிய வளைகுடாவோடு நின் றிருந்த காலத்தே, அவர் கொணர்ந்த பொருள்களை, எகிப்து முதலாம் தொலை நாடுகளுக்குக் கொண்டு சென்று விற்றுப் பொருள் சேர்க்கும் தரகராய் விளங்கி யவர் அராபியரே. ஆனால், தமிழ் நாட்டுக் கலங்கள், பர்ஷிய வளைகுடாவை மறந்து, செங்கடல் நோக்கிச் சென்றவுடனே, அராபியர் இடத்தைக் கிரேக்கர்களும்,

உரோமானியர்களும் பற்றிக் கொண்டனர். அதனால், தமிழர்க்கும், அராபியர்க்கும் இருந்த வாணிக உறவு அற்றுவிட்டது. இந்நிலை நெடிது நாள் நிற்கவில்லை. உரோமப் பேரரசு வீழ்ந்துவிட்டது; தமிழ் நாட்டுப் பொருள்களை ஆங்கு வாங்குவார் இல்லையாயினர். மேலும், அராபியர், கி. பி. ஏழாம் நூற்றாண்டில், சிரியா, எகிப்து, பர்ஷியா முதலாம் நாடுகளை வென்ற வெற்றி வீரராய் ஆளத் தொடங்கினர்; தமிழரோடு தாம் நடத்திய வாணிக உறவினை மீண்டும் உயிர்ப்பிக்க முன் வந்தனர்; தமிழர்—அராபியர் வாணிகம் மீண்டும் தலை தூக்கிற்று. மீண்டும் தொடங்கிய இவ்வாணிக உறவால் தமிழ் நாட்டிற்கு, ஆக்கத்திற்கு மாறாக கேடே வந்துற்றது. பண்டெல்லாம், தம் நாட்டுப் பொருள்களைக் கொடுத்துப் பொன்னை வாரிவந்த தமிழ் வணிகர், இக்காலை, பொன்னைக் கொடுத்துவிட்டு அராபியர் அளித்த பொருள்களை வாங்கி வந்தனர்; இக்காலத்தே, தமிழர், அராபியரோடு நடத்திய வாணிகம், குதிரை வாணிகமாம்.

தமிழர்—அராபியர் குதிரை வாணிகம் குறித்தும், அதனால் தமிழ் நாட்டிற்கு உண்டான பொருட்கேடு குறித்தும், மார்க்கோ போலோவும், அப்துல்லா வாசப்பும் கூறுவன வாவன:

மார்க்கோ போலோ : "தமிழகத்தார்க்குக் குதிரை வளர்க்கும் வழி தெரியாது. அதனால், அவர்கள் அவற்றை வளர்ப்பதில்லை. ஆகையால், ஆண்டுதோறும், எண்ணற்ற குதிரைகளை வாங்குவதில் கணக்கிலாப்

பொருள்களைச் செலவு செய்கின்றனர். கிஷ், ஆர்மூஸ், டோபிர், சோபிர், ஏடன் முதலாம் நாடுகளில் உள்ள அராபியர், கணக்கற்ற குதிரைகளைக் கலங்களில் ஏற்றிக் கொண்டு, பாண்டி நாடு அடைந்து, ஆங்கு அவற்றைக் குதிரை ஒன்று, 500 "சாகி" பொன் விலையாம் எனக் கூறி விற்பர். தமிழ் நாட்டில் அரசாண்டிருந்த அரசர் ஐவரும், ஆளுக்கு 2000 குதிரைகள் ஆண்டுதோறும் வாங்குவர். அவ்வளவு குதிரைகளை அவர்கள் வாங்குவதற்குக் காரணம், அவற்றை வைத்து வாழத்தெரியா அறியாமையால், ஓராண்டு காலமும் வாழாமல், அவை இறந்து விடுவதே ஆம். ஓராண்டு கழித்து நோக்கின், அவற்றுள் ஒரு நூறு குதிரைகள் உயிரோடிருப்பதே அரிதாம். குதிரைகட்கு இலாடம் அடிக்கும் வழக்கமும் அங்கில்லை; அடிக்கும் அறிவையும் அவர் அறிந்தவரல்லர். மேலும், தமிழர்களின் அறியாமையால், தங்கள் செல்வம் கொழுப்பது அறிந்த அராபியர், குதிரை வளர்ப்பவரோ, குதிரைகட்கு இலாடம் அடிப்பவரோ, அரேபியா நாட்டிலிருந்து, தமிழகத்திற்குச் செல்லாவாறு பார்த்துக்கொண்டனர்."

அப்துல்லா வாசப் : "மாலிக் இஸ்லாம் ஜலாலுடீனுக்கும் அராபிய குதிரை வணிகர்க்கும் ஏற்பட்ட உடன்படிக்கைப்படி ஆண்டுதோறும் 1400 குதிரைகள் மலபாருக்கு வந்து சேர்தல் வேண்டும். குதிரை ஒன்று 220 "தினார்" எனும் பொன் காசு மதிப்பாகும். (இது, மார்க்கோ போலோ கூறும் விலையைப் போல் இரு மடங்காகும்.) அபுபக்கர் ஆட்சிக் காலத்தில், ஆண்டுதோறும் 10,000 குதிரைகள் தமிழ் நாட்டிற்கு அனுப்பப்பெற்று,

22,00,000 'தினார்' பொன் அரேபியாவிற்கு வந்தது என்று அந்நாட்டு ஆசிரியர்கள் கூறுகின்றனர். குதிரைக்கு அவர்கள் தரும் மிக்க விலையினும், அவற்றை வளர்க்கத் தெரியா அவர்கள் அறியாமையே, குதிரை வாணிகத்தில், அவர்களை அவ்வளவு பெரும் பொருளை இழக்கச் செய்கிறது. தங்கள் நாட்டிற்கு வந்த குதிரைகளுக்குப் பச்சைப் பார்லி அரிசியைத் தாராமல், பார்லியில் நெய் கலந்தும், பசும் பாலைக் காய்ச்சியும் தருகின்றனர். இவ்வுணவு மாற்றத்தால் உயிரிழக்கும் குதிரைகள் பல. மேலும், வாங்கியகுதிரைகளை நாள் தோறும் வெளியிற் கொண்டு சென்று ஓட்டிப் பழக்காமல், நாற்பது நாள் வரையிலும், கொட்டில் களில், கட்டிப் போட்டுக் கொழுக்க வைப்பர்; கொழுத்த அக்குதிரைகளைச் சேணம் இடாமலும், இலாடம் அடிக்காமலும், போர் வெறி கொண்ட வீரர்கள் காட்டிலும், மலையிலும் விரைந்து ஓட்டுவர். அதனால் உடல் வலியும், உள்ள உரனும், விரைவும் உடையவாய் வந்த அக்குதிரைகள், விரைவில் உடல்மெலிந்து, உள்ளம் தளர்ந்து, ஊர்ந்து செல்லற்கும் இயலாவாறு வீழ்ந்து உயிர் விடும்."

அன்று நாடாண்டிருந்த அரசர் ஒருவரோடொருவர் பகைகொண்டு போரிட்டு வந்தமையால், தம் படைக்கு வேண்டும் குதிரைகளுக்கு விலையாக, ஆண்டுதோறும் கோடிக் கணக்கான பொன்னைப் பாழ்செய்து வந்தனர். அதனால், தமிழகத்தின் செல்வம் செழிக்கத் துணை புரிந்த பழந்தமிழ் வாணிகம், பிற்காலத்தே, அந்நாட்டுச் செல்வத்தைச் சிதைத்துவிட்டது.

தமிழரும் சீனரும்

தமிழர், சீனத்தோடு பல நூறு ஆண்டுகளாக வாணிக உறவு கொண்டிருந்தனர் என்பது உண்மையே; ஆனல், தமிழ் வணிகர், சீனத்திற்குத் தாமே நேரில் சென்று மீண்டதும், சீனர், தமிழகம் வந்து சென்றதும், கி. பி. ஏழாம் நூற்ருண்டிற்குப் பின்னரே நிகழ்ந்தது. அதுகாறும், சீன நாடு சென்று வாணிகம் புரிந்து வந்தவர் அராபிய வணிகரே. சீனத்திற்கும், மேற்கு நாடுகளுக்குமிடையே நடந்த அவ்வணிகத்தில், தமிழகம் நடுவிடமாய் அமைந்து பெரும் பொருள் திரட்டிற்று.

அந்நிலை விரைவில் மாறிவிட்டது. ஏழாவது நூற்ருண்டின் தொடக்கத்திலேயே, சீனக்கலங்கள், கடலில் செல்லத் தொடங்கிவிட்டன. காண்டன் பட்டினத்தினின்றும் புறப்பட்ட சீனக்கலங்கள், சுமத்ரா சென்று, ஆங்கிருந்து நேர் மேற்கே சென்று ஈழம் அடைந்து, ஆங்கிருந்து கொல்லம் நாகப்பட்டினம் முதலாம் தமிழகத்தின் துறைமுகப் பட்டினங்கட்கு வந்து சேர்ந்தன. வடகிழக்குப் பருவக்காற்று வீசும் காலத்தே தமிழகம் வந்து சேர்ந்த சீனர்கள், மழைக் காலத்தைத் தமிழகத்தில் கழித்துவிட்டுத் தென் மேற்குப் பருவக் காற்று வீசுங்காலத்தே புறப்பட்டுத், தம் நாடு சென்றடைந்தனர்.

அழகிய ஓவியம் தீட்டப் பெற்ற கோப்பைகளையும் விலை உயர்ந்த பட்டாடைகளையும், இடைவழியில், சம்பா, சீயம், மலையம், சுமத்ரா, சாவகம் முதலாம்

இடங்களிற் கிடைத்த ஈயம், செம்பு, ஆமைஓடு, பவளம், அகில், நறுமணமாப்பிசின் முதலாம் பொருள்களையும் ஏற்றிக்கொண்டு தமிழகம்வந்த சீனக்கப்பல்கள், ஈண்டுக் கிடைத்த முத்து, மிளகு, மலையாளக் கரையின் மணப் பொருள்கள், நீலம், உறையூர்ப் பூந்துகில், கண்ணுடிப் பொருள்கள், பாக்கு முதலாம்பொருள்களை ஏற்றிக் கொண்டு சீனம் சென்றடைந்தன. தமிழகத்திலிருந்து சீனம் சென்ற பொருள்களுள் முத்தும் மிளகுமே சிறந்தன. எகிப்து நாட்டின் வாணிக நிலையமாய அலெக்ஸான்டிரியாவிற்கு ஒரு கப்பல் மிளகு சென்ருல், சீன நாட்டிற்கு நூறு கப்பல் மிளகு செல்லும் என மார்க்கோ போலோ கூறியுள்ளார்.

சீனர் தமிழர் வாணிக உறவு, சீன நாட்டு அரசி யலில் உண்டான குழப்பத்தின் விளைவால், இடையே சிலகாலம் இல்லாமல் போயிற்று. ஆனுல் கி. பி. பத்தாம் நூற்ருண்டில் அரசுகட்டில் ஏறிய சுங் இனத்து அரசர்கள், கடல் வாணிகத்தை மீண்டும் போற்றி வளர்க்க முன்வந்தனர். தம் நாட்டோடு பண்டு வாணிகத் தொடர்பு கொண்டிருந்த நாடுகளுக்கெல்லாம் அரசியல் தூதுவரை அனுப்பினர். அக்காலத்தே சோணுட்டு அரியணையில் அமர்ந்திருந்த முதலாம் இராச ராசன், கி.பி. 1015-ல் தூதுவர் சிலரைக், கையுறையாக உயர்ந்த பொருள்களைத் தந்து சீன நாட்டு அரசவைக்கு அனுப்பினுன். இடைவழியில் மூன்ருண்டு கழித்துச் சீனம் சென்றடைந்த அத்தூதுவரை அரசன் வர வேற்றுத் தன் அரண்மனைக்கு அடுத்திருந்த விருந்தினர் விடுதியில் வைத்துப் போற்றினுன். அப்போது ஆண்டுக்

கொண்டாடப் பெற்ற அரசன் பிறந்தநாள் விழாவைக் கண்டு திரும்பிய அத்தூதுவர்க்கு, அரசன் அரிய பல பரிசுப் பொருள்கள் அளித்து அனுப்பினான். இராச ராசன் மகனாகிய இராசேந்திரன், கி. பி. 1033-ல் மீண்டும் ஒரு அரசியல் தூதுவரைச் சீனத்திற்கு அனுப்பினான். இராசேந்திரனுக்குப் பின்னர் சோழ நாட்டு அரியணையில் அமர்ந்திருந்த பேரரசனாய முதற் குலோத்துங்கன், கி. பி. 1077-ல், எழுபத்திருவரைக் கொண்ட தூதுக்குழு ஒன்றைச் சீனத்திற்கு அனுப்பினான். கையுறையாகக் கண்ணாடிப் பொருள்கள், கற்பூரம், காண்டாமிருகத்தின்கொம்பு, தந்தம், நறுமணப் பொருள்கள், கிராம்பு, ஏலக்காய் முதலாய பொருள்களைக் கொணர்ந்த அத்தூதுவரைச் சீன நாட்டு மன்னன் மகிழ்ந்து வரவேற்று, அவர்கள் மீண்டு செல்லுங்கால் 81,800 காசுகள் கொடுத்துப் பெருமைப் படுத்தினான்.

இவ்வாறு, இருநாடுகட்குமிடையே நடைபெற்ற அரசியல் தூதுக்குழுவின் போக்குவரவால் தொடங்கிய வாணிகம், ஆண்டுதோறும் படிப்படியே வளர்ந்து வளர்ந்து, இறுதியில் சீனநாட்டு செல்வ வாழ்வினையே சீர்குலைக்குமளவு பெருகிவிட்டது. குறிப்பிட்ட சிலரே வாணிகம் புரிதல் வேண்டும்; அவரும் அரசியலாரின் ஒப்பம் பெற்றவராதல் வேண்டும்; வாணிகப் பொருள் களில் பத்தில் இருகூறுப் பொருளை வரியாகத் தருதல் வேண்டும்; இறக்குமதி வரி வேறு தனியே தருதல் வேண்டும்; வாணிகப் பொருள்களின் விலையாக, விலை உயர்ந்த உலோகங்களையும், நாணயங்களையும் வெளி நாடுகட்கு அனுப்புதல் கூடாது என்றெல்லாம்,

அரசியலார், சட்டம் பல வகுத்து, வாணிகத்திற்கு வரம்புகட்ட வேண்டியவராயினர்.

இவ்வாறு சீனப் பேரரசும் அஞ்சுமாறு, வாணிகம் புரிந்து அந்நாட்டு வளங்களை வாரிக்கொணர்ந்தனர், செந்தமிழ்நாட்டு வாணிகப் பெருமக்கள்.

சீனநாட்டோடு தம் நாடு கொண்டிருந்த வாணிகத்தால், தம் நாட்டுச் செல்வம் சிறப்பதறிந்த இராசராசனும், அவன் மகன் இராசேந்திரனும், தமிழ் வணிகர்க்கு இடைவழியில் இடையூறு விளைத்த அரசுகளைப் படையெடுத்துச் சென்று வென்று அடக்கி, அவ்வாணிகத்தை வளர்த்தனர்.

3. அக வாணிகம்

கலம் ஏறிக் கடல்கடந்து நாடு பல புகுந்து, வாணிகம் புரிந்து வளம் தேடிக்கொணர்ந்த தமிழ்நாட்டு வணிகர், அக்கடல் வாணிகம் வளரவேண்டின், அந் நாடுகள்விரும்பும் வாணிகப் பொருள்களை ஆக்கித்தந்தும், ஆங்கு அப்பொருள்களுக்கு ஈடாகப் பெற்றுவந்த பொருள்களை வாங்கி மகிழ்ந்தும், துணைபுரியவல்ல அக நாட்டு வாணிகமும் வளர்தல் வேண்டும்; அந்நாடுகளில் விரும்பி விலையாகும் பொருள்களை, வேண்டுமளவு ஆக்க இயலாதுபோயினும், ஆங்குப் பண்டமாற்றி ஈங்குக் கொணர்ந்த பொருள்களை வாங்குவார் இலராயினும், அப்புறநாட்டு வாணிகம் நன்கு நடைபெறாது; ஆகவே அப்புறநாட்டு வாணிகத்தோடொப்ப, அகநாட்டு வாணிகத்தையும் ஒருசேர வளர்தல் வேண்டும்; ஆகவே அக நாட்டு வாணிகத்தை வளர்ப்பதிலும் மக்கள் ஆர்வம் உடையராதல் வேண்டும் என்ற உண்மைகளையும் உணர்ந்தே இருந்தனர். அதனால், வெளிநாட்டு வாணிகத்தை •வளர்த்து வளங்கொழித்த பழந்தமிழர், அது

என்றும் இடையறவுபடாது இனிது நடைபெறுதற் கேற்ப, உள்நாட்டுவாணிகத்தையும் வளர்த்தனர். தமிழ் நாட்டுப் பேரூர்கள் ஒவ்வொன்றும் தலைசிறந்த வாணிக நிலையமாய் விளங்கின. வாங்கவருவார் விரும்பிக்கேட்கும் எப்பொருளையும், இல்லையெனக் கூறாது எடுத்துக் கொடுக்கவல்ல எழில்மிக்க வாணிக நிலையங்களாய் விளங் கின அப்பேரூர்கள். அப்பேரூர்க் கடைவீதிகள் சில வற்றைக் கண்டு மகிழ்வோமாக.

மதுரை

மதுரை, ஒருபேரரசின் தலைநகராம் மாண்புடையது. உரோம் நாட்டின் மாண்புமிக்க மன்னன் அகஸ்டசின் அரசவைக்கு அரசியல் தூதரை அனுப்பிய பெருமை வாய்ந்த ஒரு பேரரசு இருந்து ஆண்ட இடம் மதுரை. ஏனைய தமிழ் அரசுகளின் தலைநகரங்களாய்த் திகழ்ந்த புகாரும், வஞ்சியும் தம் பெருமை இழந்து மறைந்து போகவும், மதுரை மட்டும், இன்றுவரை மறையாது நின்றதோடு, தமிழகத்தின் தலைசிறந்த நகரமாய் இன்றும் திகழ்கிறது. மதுரையில் வந்து வாழ்ந்த யவனர், அன்று வழங்கிய அவர் உரோம் நாட்டு நாணயங்கள், மண்ணில் கிடந்து, தோண்டுங்கால், இன்றும் ஆங்காங்கே கிடைக் கின்றன என்றால், அதன் வாணிகச் சிறப்பினை வகுத்துக் கூறவும் இயலுமோ? கடல் வாணிகத்தால் வளங் கொழிக்கும் புகார் நகரத்தில் பிறந்த கோவலன், தன் மனைவி காற்சிலம்பை விற்றுப் பணமாக்க மதுரைமா நகர்க்கே சென்றான் என்ற நிகழ்ச்சியொன்றே, அந்நகர், அன்று பெற்றிருந்த வாணிகச் சிறப்பினை விளக்குவ தாகும்.

கடல் கடந்து சென்று, பொருளீட்டி வாழும் இயல்பினராய கப்பல் வணிகர், இருந்து தொழில் புரியும் மாட்சிமை மிக்க மாளிகைகள், மதுரைமாநகரில், மக்கள் பலரும் கூடும் மன்றத்தை அடுத்து நின்று மாண்பு தரும். வளம் கொழிக்கும் வெளி நாடுகளிலிருந்து தாம் கொணர்ந்த வகை வகையான அந்நாட்டுப் பொருள்களை அம்மாளிகைக் கண்குவித்து வைத்திருக்கும் அவ்வணிகர், அப்பொருள்களுக்கு விலையாகப் பிறநாட்டு மக்கள் விரும்பி வாங்கும் பொருள்களாகிய, மிளகு போலும் மலை படு பொருள்களையும், நெல் போலும் நிலந்தரு பொருள்களையும், வெள்ளுப்புப் போலும் கடல் படு பொருள்களையும், பல்வேறு வண்ண மணிகளையும், மாணிக்கங்களையும், முத்தையும், பொன்னையும், வேறு பல விலைமிக்க பொருள்களையும் விலையாகக் கொண்டு விற்று வாழும் வாணிக வாழ்வினை "மலையவும் நிலத்தவும், நீரவும் பிறவும் பல்வேறு திருமணி, முத்தமொடு பொன் கொண்டு சிறந்த தேயத்துப் பண்ணியம் பகர்நர்" என வாயார வாழ்த்தியுள்ளார் அக்காலப் புலவர் ஒருவர்.

மதுரை மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப்படும் காய், கனி முதலாம் உணவுப் பொருள் விற்கும் அங்காடிக் கடைகளின் காட்சி, அம்மம்ம! கவின் மிகு காட்சியாமன்றோ! தேனின் சுவையும் தெவிட்டா மணமும் உடைய பலாக் கனி விற்பார் ஒருபாலும், நிறம் வேறுபடப் பழுத்த இனிய மாம்பழம் விற்பார் ஒருபாலும், பல்வேறு வடிவும், பல்வேறு வண்ணமும் வாய்ந்து பல்வேறு

வகைப்பட்ட உண்ணும்காய்களைக் கூறிட்டு விற்பார் ஒருபாலும், வாழை, முந்திரி, மாதுளை முதலாம் பல்வகைப் பழங்களை விற்பார் ஒருபாலும், காலத்தே மழை பெய்யக் கொடி விட்டுத் துளிர்த்துக் கறுத்து வளர்ந்த கீரை வகைகளை விற்பார் ஒருபாலும், கற்கண்டின் கட்டி, ஊன் கலந்து ஆக்கிய சோறு, கிழங்கொடு கூடிய பாற் சோறு ஆகிய பொருள்களைத் தனித்தனியே விலை கூறி விற்பார் ஒருபாலும் இருந்து வாணிகம் புரிவர்; ஆங்கு விற்பாரும், வாங்குவாரும் ஒன்று கலந்து எழுப்பும் ஓசை, பறவைகள் பல கூடி ஒலித்தாற் போலும் பேரொலியவாகி, அவ்வங்காடிக் கடையினை அழகு செய்து ஒலிக்கும்.

நாட்டில் நாகரிகம் வளர வளர, மக்கட்குத் தேவையாம் பொருள்களும் வகைகையாக வளர்ந்து கொண்டே செல்லும். புதுப்புதுப் பொருள்கள், நாள் தோறும் தோன்றிக் கொண்டே யிருக்கும். இப்பொருள் இதற்குப் பயன்படும் என்பதை, எவரும் எளிதிற் புரிந்து கொள்ளாவாறு, அப்பொருள்களின் வகைகள் விரிந்து கொண்டே செல்லும், அத்தகைய உயர்ந்த நாகரிக நிலையினை மதுரை மக்கள், அன்றே பெற்றிருந்தனர். அவ்வாறு நாகரிகத்தின் நிலைக்களமாய் வாழ்ந்த அம் மக்களின் தேவைகளை நிறைவேற்றித் தரவல்ல பல்வேறு பொருள்களையும் பெற்று வந்து வழங்கும் வகையில், தம் வாணிகத்துறையினையும் வளர்த்து வாழ்ந்தனர், அம்மதுரை வாழ் வணிக மக்கள்.

மக்கள் ஏறிச் செல்லற்காம் கூடார வண்டி, பொருளேற்றிச் செல்லற்காம் ஈர் உருளி வண்டி முதலாம்

வண்டிகளை விற்கும் வண்டிக் கடைகளும், தேர்மொட்டு முதலாம் தேர் உறுப்புக்களை விற்கும் தேர்க்கடையும், போர் வீரர்க்கு வேண்டும் மார்புக் கவசம், தோலால் ஆயகையுறை, அரையில் அணியும் பட்டிகை, பல்வேறு வகைக்கேடயங்கள், குத்துக்கோல், ஆனையை அடக்கும் அங்குசம் முதலாய படைக் கலங்களை விற்கும் படைக் கலக் கடைகளும், வெண் சாமரம்,வாசனைப் பொருள்கள், நறுமணப் புகைதரும் நால்வகைப் பொருள்கள், மெய்யிற் பூசப் பயன்படும் சாந்து வகைகள் முதலாம் நாகரிக மக்கள் நயந்து கேட்கும் பல்வேறு பொருள்களை விற்கும் பலவகைக் கடைகளும், செப்பாற் செய்த பல்வேறு பொருள்களைக் கொண்ட சிறந்த கடையும், வெண்கலக் கடையும், வாளரம் கொண்டு, வனப்பமையச் செய்யப்பெற்ற வகைவகையான வளையல்களைக்கொண்ட வளையற் கடையும், மனம் மகிழும் மாலைகட்டி விற்கும் மலர்க்கடையும் ஒன்றையொன்று அடுத்தடுத்து இருக்க, பல்வேறு பொருள்களையும் பரப்பிவைத்து விற்கும் அங்காடித் தெருவு, கண்டார் அகத்தையும் முகத்தையும் ஒருங்கே மலர்விக்கும் அத்துணைச் சிறப்புடையவாம்.

பொன்னையும், பவளத்தையும், நல்முத்தையும், நவமணிகளையும் கொண்டு அணிபல ஆக்கி அணிந்து மகிழ்வதில் ஆர்வம் உடையவர் தமிழர். அத்தகைய அணிகளை ஆக்கித் தரவல்ல பொற்கொல்லரையும், தமிழ் நாடு பண்டே பெற்றிருந்தது. அன்னார் அறிவையும் பயன்கொண்டு, அக்கால மக்களின் ஆர்வத் தையும் நிறைவேற்றித் தருமாறு நவமணிகளையும்,

நால்வகைப் பொன்னையும் தேடித் தரவல்ல வணிகர் களும் வாழ்ந்திருந்தனர் நம் செந்தமிழ் நாட்டில்.

காகபாதம், களங்கம், விந்து, ஏகை என்னும் குற்றம் அற்று, இந்திர கோபம் எனும் செந்நிறப் பூச்சியின் உடல்போலும் செவ்வொளி வீசும் வயிரம், ஏகை, மாலே, இருள் எனும் குற்றம் அற்றுப் பசுமை நிறைந்து, பச்சையொளி பரந்து தோன்றும் மரகதம், பதுமராகம், நீலகந்தி, குருவிந்தம், கோவாங்கு எனும் நால்வகைப்பட்ட மாணிக்கம், பூனையின் கண்போன்ற வடிவும், பொன்னை மாசறத் தெளிய வைத்தாற் போலும் வண்ணமும் உடைய புருடராகம், மேகத்தால் மறைவுறாது நின்ற ஞாயிற்றின் தூய ஒளி ஊடுருவப் பெற்ற, தெளிந்த தேன் துளிபோலும் ஒளியும், உருவமும் உடைய வயிடூரியம், இருளைத் தெளிய வைத்தது போன்று ஒளி வீசும் நீலம், மஞ்சளும் சிவப்பும் மாறி மாறிக் காட்டும் கோமேதகம், ஓரிடத்தே பிறந்து, மாணிக்கம், புருடராகம், நீலம், கோமேதகம், வயிடூரியம் என்னும் இவ்வைந்தின் ஒளிகளையும் ஒருங்கே காட்டும் மணிகள், காற்றிலும், மண்ணிலும், கல்லிலும், நீரிலும் கிடந்து அவற்றால் உண்டாம் குற்றம் ஒரு சிறிதும் பெறாது, தெளிந்த ஒளியும், வெள்ளி போன்ற வெண்ணிறமும், அங்காரகன் போன்ற செந்நிறமும் வாய்ந்த முத்துக்கள், உள்ளே துளைபட்டுப் போதல், இரு கற்களுக்கு இடைப்பட்டு வளைந்து போதல், முறுக்குண்டு போதல் முதலாம் குற்றங்கள் அற்றுச், செந்நிறம் வாய்ந்த பவளம் ஆகிய நவமணிகளின் பிறப்பையும், அவற்றின் சிறப்பையும்,

அவற்றிற் குண்டாம் குற்றத்தையும் அறியவல்ல வணிகர், அவற்றைத் தனித் தனியே குவித்து வைத்து விற்கும் மதுரை இரத்தினக் கடைத்தெருவின் மாட்சியே மாட்சி !

அம்மட்டோ ! பொன்னின் இயல்புகளை உள்ளவாறு உணரவல்ல வணிகர், அது பெற்றிருக்கும் மாற்றுக் குறைவு நிறைவுகட்டு ஏற்ப, சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்பூநதம் என்று நான்கு வகையாகப் பிரித்துக் காணப்படும் அந்நால்வகைப் பொன்னையும், இன்னவகைப் பொன், இன்ன இடத்தில் உளது என்பதை, வாங்க வருவார் சேய்மைக் கண் வருவழியே அறிந்து கொள்ளவல்ல அறிவிப்புக்களைக் கொண்ட கொடிகளைக் கட்டி விற்று வாழும் பொற் கடை வீதிகளின் புகழே புகழ் !

மக்கட்கு அழகு தருவதில், அணிகளைக் காட்டிலும் ஆடையே முதலிடம் பெறும் என்ப ; இன்றியமையாது வேண்டப்படுவதும் அதுவே. அணிகள்பால் ஆசை கொள்ளாதவரும், ஆடைகள்பால் ஆசைகொள்வர். மணமும், விழாவும்போல் மனத்திற்கு மகிழ்ச்சியூட்டும் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுங்கால் பட்டாடையும், ஏனைய காலங்களில் எளிய பருத்தி ஆடையும் உடுத்தல் வேண்டும் ; கோடைக்குப் பருத்தி ஆடையும், குளிருக்கு மயிராடையும் வேண்டும் என உணர்ந்து பயன்கொண் டவர் தமிழர் ; மக்களின் தேவை உணர்ந்து வாணிகம் புரிவதே வணிகர்க்கு அழகு ; ஆகவே ஆடைவிற்கும் அறுவை வணிகர், நுண்ணிய பருத்தி நூலாலும், எலி மயிராலும், மெல்லிய பட்டாலும் இனத்திற்கு நூறு

வகையாக நெய்யப்பெற்ற ஆடைகளை அடுக்கிவைத்து விற்கும் மதுரை அறுவைக் கடைவீதிகளின் அழகே அழகு !

அறுவகைச் சுவையினை அளிக்கவல்ல நூறுவகைப் பணியாரங்களை உண்டு மகிழ்ந்தவர் தமிழர். மேலும் ஆடை, அணி வாங்காது வாழ்தலும் கூடும் ; ஆனால், உண்ணும் பொருள்களை வாங்காதார் ஒருவரும் இலர் ; ஆகவே, ஆடை அணிகளை விற்பாரைக் காட்டிலும், உணவுப் பொருளை விற்பார் மிகப் பலராதலும், அதைப் போலவே, ஆடை அணிகளை வாங்கவருவாரைக் காட்டிலும், உணவுப்பொருள்களை வாங்க வருவார் மிகப் பலராதலும் உலகியல். இதை உணர்ந்தவர் மதுரைக் கூலவணிகர்கள் ; வகைவகையான உணவுப்பொருள்கள் மலைகள்போல் குவிந்துகிடக்கும் காட்சியும், அப்பொருள்களை வாங்கவருவார்க்கும், விற்பார்க்கும் இடைநின்று வாணிகம் புரியும் தரகர் ஓரிடத்தே ஓய்ந்து நில்லாது, நிறுக்கும் தூலாக்கோலையும், அளக்கும் மரக்காலையும் கையிலேயே உடையராய் அங்கும் இங்கும் ஓடி, ஓடி, இரவிலும் பகலிலும் ஓய்வின்றி வாணிகம் புரியும் காட்சியும், கூலவணிகர் கூடித் தொழில்புரியும் கூலக் கடைவீதியின் கண்கொளாக் காட்சிகளாமன்றோ !

ஈண்டுக் கூறிய இவரெல்லாம், ஓரிடத்தே இருந்து விற்று வாணிகம் புரிபவராவர். இவர் விற்கும் பொருள்களை வாங்க விரும்புவார், இவர் இருக்கும் இடந்தேடி வந்து வாங்கிச் செல்வர். ஒரு பொருளை விரும்புவார், அப்பொருள் இருக்கும் இடந்தேடிச் சென்று வாங்கிக் கொள்ளும் வகையில் உள்ள வாணிக முறையைக் காட்

டிலும், ஒரு பொருளை விரும்புவார்க்கு, அப்பொருளை, அவர் இருக்கும் இடந்தேடிக்கொண்டு சென்று கொடுக்கும் வாணிக முறையே, வாணிகம் புரிவார்க்கு வளம் தரும் முறையாம். வாங்குவார், பொருளைத் தேடிப்போதல் கூடாது; வாங்குவாரைத் தேடிப் பொருள் போதல் வேண்டும். வாணிகமுறையின் இவ்வகையினையும் அறிந்தவர் பழந்தமிழ் வணிகர். அத்தகைய வணிகர் பலர் வாழ்ந்திருந்தனர் மதுரையில்.

வெண்ணிறச் சங்கை வாளரங்கொண்டு அறுத்துக் கடைந்து, வளைமுதலாம் பொருள்களை வகைவகையாக வனைந்து விற்பாரும், அழகிய மணிகளுக்குத் துளை அமைத்து விற்பாரும், பொன்னைச் சூடேற்றி உருக்கி அடித்து அணிபல ஆக்கி வைத்து விற்பாரும், பொன்னை உரைத்துப் பார்த்து அதன் மதிப்பினை அறியவல்ல பொன் விற்பாரும், செம்பாற் செய்யப்பெற்ற பல்வேறு கலங்களை நிறுத்து விற்பாரும், பன்னிற மலர்களை வண்ணமுறத் தொடுத்து விற்பாரும், நறுமணம் தரவல்ல புகை எழுப்பும் பொருள்களைப் பெயர் கூறி விற்பாரும், அழகிய சேலைகளை அணிபெற மடித்துக் கொணர்ந்து விரித்துக் காட்டி வாணிகம் புரிவாரும், தம்தம் வணிகப் பொருள்களையும், அவ்வாணிகம் புரிதற்கு உறுதுணையாம் கருவிகளையும், தம் கையிலும் தோளிலும் சுமந்து கொண்டே, மதுரைமாநகரின் ஒவ்வொரு வீதிகட்கும் சென்று, ஒருவர் கால் ஒருவர் காலொடு நெருங்கி நிற்கு மாறு கூடிநின்று, விலையும், பொருளும் விளங்கக் கூறி விற்று வாணிகம் புரிவர். மதுரைமாநகரின் வாணிக மாண்புதான் என்னே!

புகார்

சோழநாட்டின் தலைநகராயும், தலைசிறந்த துறைமுகமாயும் சிறப்புற்றது புகார். வாழ்வு கருதி வேற்றூர் செல்லஎண்ணுது, என்றும் நீங்காது வாழும்பழங்குடிகள் பலவற்றை உடையது புகார். காவிரியாறு கடலோடு கலக்கும் இடத்தில் அமைந்த இவ்விடம், கடல் வாணிகம் வளர்தற்கு வாய்ப்புடைய இடமாம் எனக்கருதிய கரிகாற் பெருவளத்தானல் ஆக்கப்பெற்றது அப்புகார் நகரம். காவிரிப்பூம்பட்டினம் என்ற பிறிதொரு பெயரும் புகார்க்கு உண்டு. ககந்தன் என்ற மன்னன் இருந்து ஆண்ட காரணத்தால், புகார், காகந்தி என்றும் அழைக்கப் பெறும்; காவிரியாற்றின் கரைக்கண் இருப்பதால் காவிரிப்பூம்பட்டினம் என்ற பெயர் பெறுவதன் முன்னர் புகார், சம்பாபதி என்ற பெயர் பெற்றிருந்தது. "செங்கடற் செலவு" என்ற நூலை எழுதிய மேனுட்டு ஆசிரியர், இந்நகரைக் **கமாரம்** என்ற பெயரிட்டுக் குறித்துள்ளார். தாலமி என்ற யவன ஆசிரியர், புகார்க்கு இட்டபெயர், "கபேரிஸ்" என்பதாம்.

இவ்வாறு, பலராலும் பண்டுதொட்டே பாராட்டப் பெற்ற புகார் நகரம், அகநகர், புறநகர் என்ற இரு பிரிவுடையதாகும்; அகநகர் பட்டினப்பாக்கம் எனவும், புறநகர் மருவூர்ப்பாக்கம் எனவும் அழைக்கப்பெறும்; அரசரும், அரசவை இருந்து ஆட்சிக்குத் துணைபுரியும் அமைச்சர் முதலியோரும் பட்டினப்பாக்கத்தில் வாழ்வர்; வாணிகம் கருதிவந்த வெளிநாட்டு மக்களும், அவ்வாணிகம் வளர்வதற்குப் பல்லாற்ருனும் துணைபுரிவாரும் மருவூர்ப்பாக்கத்தே வாழ்வர்.

மருவூர்ப்பாக்கத்திற்கும், பட்டினப்பாக்கத்திற்கும் இடையில் திறந்த வெளியொன்று உண்டு; ஆங்கு வரிசையாக, அடர்ந்து வளர்ந்திருக்கும் மரங்களும், அம் மரநிழலிலே அமைந்த கடைகளும் இருந்தன; அவ்விரு பாக்கங்களில் வாழும் மக்கள் அனைவரும், தங்கள் அன்றாட வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்களை அவண் வந்து வாங்கிச்செல்வர். காற்றுச் செலுத்த கடல்கடந்து வந்த கலங்கள் கொண்டுவந்த குதிரைகள், மிளகுப் பொதிகள், வடநாட்டில்உள்ள மேரு முதலாம் மலைகளில் பிறக்கும் மாணிக்கம், அம்மாணிக்கத்தோடு ஆண்டுக் கிடக்கும் பொன், பொதியமலையில் பிறந்த சந்தனம், அகில் முதலிய நறுமண மரத்துண்டங்கள், பாண்டியர்க் குரிய கொற்கைத்துறைமுகத்துக் கடலில் பிறந்த முத்து, கடாரம், சீனம், சியம், சாவகம் முதலாம் கீழ்த் திசை நாடுகளிலிருந்து வந்த பவளம், கங்கையாறு பாயும் வடநாட்டினின்றும் வந்த பல்வகைப் பொருள்கள், காவிரி பாயும் சோணாட்டின் வளங்கள், ஈழநாட்டினின்றும் வந்த உணவுப் பொருள்கள், கடாரத்திலிருந்து கலங்களில் வந்த கணக்கற்ற பொருள்கள், சீனநாட்டின் பனிநீர், கர்ப்பூரம், குங்குமம், மேலைநாட்டினின்றும் வந்த மது, முதலிய அரியபெரிய பொருள்களை அளந்து அறிய மாட்டாவாறு, ஆங்காங்கே, குவியல் குவியல்களாகக் கொட்டி விற்கும் வாணிகவாழ்க்கையினை வாயாரப் பாராட்டி யுள்ளார், பட்டினப்பாலை ஆசிரியர்.

கடல் கடந்து வந்த பிறநாட்டுப் பொருள்களும், நாட்டின் பல்வேறு பகுதிகளில் தோன்றி நிலவழி வந்த உள்நாட்டுப் பொருள்களும் ஒன்றுகலந்து ஓரிடத்தே

விற்கும் இங்ஙாளங்காடியைக் கடந்து மருவூர்ப்பாக்கத்தினுள் நுழைந்து செல்லின், ஆங்கே, வகைவகையான பொருள்களை, வேறு வேறாகக் கொண்டு வரிசை வரிசையாக வைத்து விற்கும் வணிகர் வீதிகளைக் காணலாம்.

வகைவகையான வண்ணங்கள், மணமும் குணமும் நிறைந்து மாண்புமிக்க பல்வகைக் கிழங்குகளை இடித்துச் செய்த நறுமணத் தூள்கள், பூசினோர் உடற்குத் தண்மையும் மணமும் நல்கும் சந்தனம், வேறு வேறு நிறமும், வேறு வேறு மணமும் கொண்ட மலர் கொண்டு தொடுத்த மாலைகள், கூந்தலுக்கு மணம் ஊட்டி, ஈரம் போக்க மகளிர் எழுப்பும் புகைதரு பொருள்கள், ஆகிய நாகரிகப் பொருள்களை விற்பார், வரிசையாக இருந்து வாணிகம் புரியும் வீதிகளையும், பட்டாலும், மயிராலும், பருத்தி நூலாலும் நெய்யப்பெற்ற, கோசிகம், பீதகம், பச்சிலை, அரத்தம், நுண்துகில், சுண்ணம், வடகம், பஞ்சு, இரட்டு, பாடகம், கோங்கலர், கோபம், சித்திரக் கம்பி, குருதி, கரியல், பேடகம், பரியட்டக்காசு, வேதங்கம், புங்கர்க்காழகம், சில்லிகை, தூரியம், பங்கம், தத்தியம், வண்ணடை, கவற்றுமடி, நூல்யாப்பு, திருக்கு, தேவாங்கு, பொன்னெழுத்து, குச்சரி, தேவகிரி, காத்தூலம், இறஞ்சி, வெண்பொத்தி, செம்பொத்தி, பணிப்பொத்தி எனப் பல்வகையான் பெயர் பெற்ற பன்னிற ஆடைகளை நெய்து விற்கும் அறுவை வணிகர் வீதியையும், இருக்கும் பொருள் அளவு இவ்வளவு, அப்பொருள்களில் இத்தனை வகையுள்ளன என எண்ணிக்காண இயலாவாறு குவிந்துகிடக்கும் பட்டின் வகைகளையும், பவள வகைகளையும், மலையாரம், தீமுரண் பச்சை,

கிழான்பச்சை, பச்சைவெட்டை, அரிசந்தனம், வேர், சுக்கொடி எனப்பட்ட சந்தன வகைகளையும், அருமண வன், தக்கோலி, கிடராவன், காரகில் எனப்பட்ட அகில் வகைகளையும் விற்பார் வாழும் பட்டுச் சாலியர் வீதியை யும், பவள வணிகர் வீதியையும், ஆரவணிகரும், அகில் வணிகரும், வாழும் வீதிகளையும், முத்துக்களையும், மணிகளையும், பொன் வகைகளையும் விற்பார் வாழும் வீதிகளையும், நெல், புல், வரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, மூங்கில் நெல் முதலாம் எண்வகைக் கூலங் களைக் கொட்டி விற்கும் கூலவணிகர் வீதிகளையும், பிட்டு விற்பாரும், அப்பம் விற்பாரும், கள் விற்பாரும், மீன் விற்பாரும், வெள்ளுப்பு விற்பாரும், வெற்றிலை விற்பாரும் வாழும் பல்வேறு வீதிகளையும், அம்பரேச்சம் கத்தூரி, சவ்வாது, சாந்து, குங்குமம், பனிநீர், புழுகு, தக்கோலம், நாகப்பூ, இலவங்கம், சாதிக்காய், வசுவாகி, நீரியாசம், தைலம் எனப்பட்ட பல்வேறு வாசனைப் பொருள்களை விற்பார் வீதியையும், மலைச்சரக்கு, கலை, அடைவுசரக்கு, மார்பு, இளமார்பு, ஆரூர்க்கால், கை யொட்டுக்கால், மார்ப்பற்று, வாராசான், குமடெறிவான், உருக்குருக்கு, வாரோசு, சூடன், சீனச்சூடன் எனப்பட்ட கற்பூர வகைகளை விற்பார் வீதியையும், ஆட்டு வணிக ரும், எண்ணெய் வணிகரும் வாழும் வீதிகளையும், வெண்கலத் தொழில் புரியும் கன்னார், செப்புக் கலங்கள் செய்யும் கொட்டிகள், மரத்தொழில் புரியும் தச்சர், இருப்புக்கலங்கள் செய்யும் கொல்லர், கல்லும் சுண்ணும் பும் கொண்டு பாவை முதலாயின பண்ணும் சிற்பிகள், பொன்னை உருக்கித் தகடாக்கியும், பொன்னும் பவளமும் முத்தும், மணியும் கொண்டு அணிபல ஆக்கியும் வாழும்

பொற்கொல்லர் முதலாம் தொழில்புரி மக்கள் தனித் தனியே கூடிவாழும் பல்வேறு வீதிகளையும் கண்டு வருவார், காவிரிப்பூம்பட்டினத்தின் வாணிகச் சிறப்பினை வாயார வாழ்த்தாதிருப்பரோ!

தமிழ்நாட்டுப் பேரூர்களில், பகற்காலத்தில் மட்டுமே வாணிகம் நடைபெறுதல் வேண்டும், இராக்காலத்தில் நடைபெறுதல் கூடாது என்ற வரையறை என்றுமே இருந்ததில்லை. வாணிகம் கருதி வந்த பொருள்கள் வரம்பின்றிக் குவிந்துகிடக்கும் ஆதலாலும், அப்பொருள் களை வாங்கவருவாரும் வரம்பிலராவர் ஆதலாலும், வாங்குவதும், விற்பதும், பகற்காலத்திலேயே முடிவுற்று விடுவதில்லை. அதனால், வாணிகம் புரிவார், இரவிலும் இருந்து வாணிகம் புரிந்தனர். அவ்வாறு, இராக்காலத்தே நடைபெற்ற வாணிகத்தையும், அவ்விராக்காலத்தே, வரிசை வரிசையாக ஏற்றப் பெற்ற விளக்குகளோடு கூடிய அவ்வணிக வீதிகளின் வனப்பினையும், சிலப்பதி காரம் சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளது.

வாணிகம் செய்து வளம் சேர்க்க விரும்பிச், செல்வம் கொழிக்கும் தங்கள் தாய் நாட்டை மறந்து மரக்கலம் ஏறி இவண் வந்து, வாழ்ந்திருக்கும் யவனர், முதலாம் பிறநாட்டு மக்கள், அலையொலிக்கும் கடற் கரையை அடுத்து அமைந்துள்ள தம் ஆவணங்களின் முற்றத்தில், பல்வேறு கூலங்களையும் குவித்து வைத்து விட்டு, இன்ன இடத்தில் இன்ன பொருள் உளது என் பதைக் அறிவிக்கும் கொடிகளைக் கட்டிக் காட்டி விற்று வாழ்வார். ஆண்டு ஏற்றி வைத்த விளக்குகளும், ஓவியம் தீட்டுவதற்கு வேண்டிய பலவகை வண்ணங்களையும்,

சாந்து முதலாம் பலவகை உடற் பூச்சுக்களையும், பன்னிறமும், பல மணமும் வாய்ந்து, பார்க்க இனிக்கும் பற்பல வகையான மலர்களையும், நறுமணப் பொடிகளையும், பலவகைப் பண்ணியாரங்களையும் விற்பார், தம்தம் ஆவணங்களில் ஏற்றி வைத்த பல்வகை விளக்குகளும், பொன் கொண்டுவந்து தருவார் தந்த பொன் கொண்டு அவர் கூறும் அணிகளை ஆக்கித்தரவல்ல பணித்தட்டார் இருந்து தொழில் புரியும் ஆவணங்களில் ஏற்றிவைத்த விளக்கும், பிட்டு வாணிகர், பிட்டுநிறைந்த தம் தட்டுக்களில் ஏற்றி வைத்த விளக்கும், அப்பம் விற்பார், கடைந்தும் குடைந்தும் செய்த மரத்தண்டில் ஏற்றி வைத்த விளக்கும், யவனர்குலமகளிர், வேறு வேறு இடங்களில் தோன்றி, ஆங்காங்குக் கிடைக்கும் பல்வேறு பண்டங்களையும், ஒரு சேரக் கொண்டுவந்து விற்கும் தம் பலசரக்குக் கடைகளில் ஏற்றிவைத்த விளக்குகளும், மேலே கூறிய கடைகளுக்கு இடையிடையே இருந்து மீன் விலைகூறி விற்கும் பரதவரின் மீன் கடை விளக்கும், கூறிய இவ்விளக்குகளோடு, பரந்த கடலில், இராக் காலத்தில் திசையறியமாட்டாது ஓடும் மரக் கலங்களை, அவை சேரும் இடம் இது என அறிவித்து அழைக்கக், கரைக்கண் அமைக்கப்பெற்ற விளக்கும், வலைபல கொண்டு கடலிற் புகுந்து மீன் பிடித்து வாழும் பரதவர், தம் மீன் படகுகளில் ஏற்றிச் செல்லும் விளக்குகளும், இந்நாட்டு மக்கள் விரும்பும் பொருள்களைக் கொடுத்துத், தம் நாட்டு மக்கள் விரும்பும் பொருள்களைப் பெற்றுச் செல்வான்வேண்டி, வேற்று மொழி வழங்கும் தங்கள் நாட்டை விட்டு இவண் வந்து வாழும் வணிகர், தம் ஆவணங்களில் ஏற்றி

வைத்த விளக்கும், கடற்கரைக்கண், கலத்திலிருந்து இறக்கி வைத்தனவும், கலத்தில் ஏற்றக் குவித்து வைத்தனவுமாய பண்டப்பொதிகளைக் காத்து நிற்கும் காவலர் ஏற்றிவைத்த விளக்கும் வரிசை வரிசையாக இருந்து பேசும் பேரொளியால், ஆண்டுப் பரந்து கிடக்கும் கடற்கரை மணலில் வீழ்ந்த வெண்சிறு கடுகும் விளங்கத் தெரியும். அக்காலத்தில் அவ்விடத்தைப் பார்ப்பார் எவரும், இஃது இரவுக்காலமன்று, பகற் காலமே என்றே எண்ணுவர் அத்துணைப் பேரொளி தரும் அவ்வளவு விளக்குக்களை ஏற்றிவைத்து வாணிகம் புரிவர், ஆங்குவாழ் வணிகர், ஈண்டுக் காட்டிய இக் காட்சி, காவிரிப்பூம்பட்டினத்தின், கடைவீதியின் இரவுக் காலக் காட்சியாகும். காவிரிப்பூம் பட்டினத்து வாணிகத்தின் வளந்தான் என்னே!

4. துறைமுகப் பட்டினங்கள்

முப்புறமும் முந்நீரால் சூழப்பெற்றது தமிழ்நாடு. கிழக்கிலும், மேற்கிலும், தெற்கிலும் தன் எல்லையாக மிக நீண்ட கடற்கரையைப் பெற்றது தமிழகம். கரையோரமாகவே செல்லும் இயல்பினதாய சிறு படகையும், பரந்த கடலையும் கடந்துசெல்லவல்ல பெரிய பெரிய நாவாய்களையும் செலுத்தவல்ல அறிவினை அன்றே பெற்றிருந்தனர் தமிழர். அம்பி, கலம், திமில், நாவாய், பஃறி, பரிசில், புணை எனப் பலவேறு தெப்பங்களையும், அவற்றின் பெயர்களையும் அறிந்து கூறியுள்ளனர் அக்காலப் புலவர்கள். தம் நாட்டிற்குக் கிழக்கிலும் மேற்கிலும் உள்ள கடல் கடந்த நாடுகளோடு வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர் பழந்தமிழ் வணிகர். இன்ன பல காரணங்களால், தமிழ்நாடு, நல்ல பல துறைமுகப் பட்டினங்களை, அக்காலத்திலேயே பெற்றிருந்தது.

“ பெரிய கடலுள் அஞ்சாது கலம் விடவல்ல மீகாமர், அலையொலிக்கும் கடல் அளித்த ஒளிவீசும்

முத்தையும், அரங்கொண்டு, அழகு பெற அறுத்துச் செய்த சங்கு வளையையும், பாடுபலபட்டுப், பரதவர் கொணர்ந்த பல்வேறு பண்டங்களையும், கழியிடத்துப் பாயும் கடல் நீரைத் தேக்கி விளைத்த வெள்ளுப்பையும், படகேறிச் சென்று பிடித்துக் கொணர்ந்த மீன்களின் உப்பிட்டு உலர்ந்த துண்டங்களையும், தம் கலங்களில் ஏற்றிக்கொண்டு, கடல்கடந்த நாடுகட்குச் சென்று விற்றுவிட்டு, ஆங்கு வாங்கி வந்து இறக்கிய குதிரைகளாலும், பிற பொருள்களாலும் வளம் பெருகும் தமிழகத்து நெய்தல் நில ஊர்கள்."

"ஈண்டுச் செய்யப்பெற்றுக், கிடைத்தற்கரியவாய பொருள்களைக் கொண்டுசெல்லக், கடல்கடந்த நாடுகள் பலவற்றினின்றும் வந்த வணிகர் செலுத்தி வந்த வங்கம், பாய் நன்கு விரிந்திருக்க, காற்று விரைந்து கொணர்வதால், நடுயாமத்திலும் அச்சம் இன்றி உட்புகுந்து, தன் நாட்டிலிருந்து தான் ஏற்றிக்கொண்டு வந்த, தன்னுட்டுப் பல்வேறு பண்டங்களையும் இறக்கும் துறைமுகங்கள் தமிழ்நாட்டில் எண்ணற்றன உள."

"நாட்டு மக்கள் நல்வளம் பெற்று நன்கு வாழ்வதற்கு வேண்டிய பொன் பல பெற்றுச் சிறத்தற்குக் காரணமாய பொருள்களை வேற்று நாட்டில் விற்றுவிட்டு வந்து சேர்ந்த நாவாய்கள், அச்சம் தரும் பெரிய கடலில் காற்று விரைந்து வீசுவதால், தலைமடங்கிவீழ, ஓயாது ஆடும் அலைகள் பிளந்துபோகுமாறு பாய்களை விரித்துக் காட்டிக்கொண்டு விரைந்துவந்து, இனிய முரசு முதலாம் இசைகளை எழுப்பிக் கரைக்கண் உள்ளார் எதிர்கொள்ள,

உள்ளே புகுந்து, மேகம் சூழ்ந்த மலைபோல, ஓயாது ஆடியும் அசைந்தும் நிற்கும் துறைகள் பலப்பல."

"தன்னாட்டுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு, பிறநாடு சென்று விற்றுவிட்டு, அந்நாட்டுப் பொற்காசுகளை ஏற்றிக்கொண்டு வந்து சேரும் நாவாய் புகுந்து நிற்கும் துறைகளில், பிற சிறுகலங்கள் சென்று புகுவது பொருந்தாது என்ற விதிவிளங்கும் துறைகள் எத்தனையோ உள."

இவ்வாறு, தம் நாட்டுக் கடற்கரைகளையும், அக் கரைக்கண் உள்ள துறைமுகங்களையும், புலவர்கள் பல் லாற்றானும் பாடிப் பாராட்டியுள்ளார்கள்.

இவ்வாறு தமிழ்நாட்டுத் துறைமுகப் பட்டினங்களைப் பொதுவகையாற் பாராட்டிய புலவர்கள், சில துறைமுகங்களைச் சிறப்பாக எடுத்துக்காட்டியும் பாராட்டியுள்ளார்கள். அவ்வாறு அவர்கள் பாராட்டிய துறைமுகங்களுள், புகாரும், கொற்கையும், முசிறியும், தொண்டியும் சிறந்தனவாம். நம் நாட்டுப் புலவர்களின் பாராட்டைப் பெற்ற இத்துறைமுகப்பட்டினங்கள், நம் நாட்டிற்கு வந்து நேரில் கண்டு அறிந்தாரும், அவ்வாறு அறிந்தார் கூறியன கேட்டு அறிந்தாரும் ஆகிய மேனாட்டு அறிஞர்களின் பாராட்டுரைகளையும் பெற்றுள்ளன.

புகார்

புகார் நகரின் ஒரு பகுதியாய், வாணிக நிலையமாய் விளங்கிய மருவூர்ப்பாக்கத்தின் மாண்பு மேலே கூறப் பட்டுள்ளது; ஈண்டு அப் புகார்நகரின் துறைமுகச்

சிறப்பினைக் காண்போமாக. புகார்த் துறைமுகம், பண்டு தமிழ்நாட்டில் விளங்கிய துறைமுகங்களுள் தலை சிறந்த துறைமுகமாம். சோழமண்டிலக்கரை, கீழ்க் காற்று வீசுவதால், மணல் தூர்ந்து போய்விடும்; அதனால், ஆழமும் குறைந்து போய்விடும்; அதனால், அக் கரைக்கண் அமைந்த துறைமுகங்கள், தலைசிறந்த துறைமுகங்களாகக் கருதப்படுவதில்லை. அத் துறை முகம் நோக்கி வரும் கப்பல்கள், கரையைச் சேர வருவ தில்லை. அவை சேய்மைக்கண்ணே நிற்க, சிறு சிறு படகுகளே, அக் கப்பல்களில் உள்ள பொருள்களைக் கரை சேர்க்கவும், கரைக்கண் உள்ள பொருள்களைக் கப்பலில் ஏற்றவும் துணைபுரியும். இந்தக் குறைபாடு, புகார்த் துறைமுகத்திற்கு இல்லை என்று கூறுகிறார், அப்புகார் நகரை அடுத்து இருந்த உறையூரில் வாழ்ந்த முதுகண்ணன்சாத்தனார் என்ற புலவர். புகார்த் துறை நோக்கி வரும் நாவாய்கள், பாயைச் சுருட்டுதல் வேண்டும், கூம்பை இறக்குதல் வேண்டும்; ஏற்றிய பண்டைப் பொதிகளையும் இடைவழியிலேயே இறக்கி விடுதல் வேண்டும்; அதன் பின்னரே, அந்நாவாய், துறையின் உள்புகுதல் இயலும் என்ற கட்டுப்பாடு இல்லாமலே, உயர்த்திய கூம்போடும், விரித்த பாயோ டும், ஏற்றிய பாரத்தோடும் விரைந்து உட்புகுதல் இயலும் என அவர் பாராட்டியுள்ளார். "கூம்பொடு மீப்பாய் களையாது, மிசைப்பரம் தோண்டாது புகா அர்ப் புகுந்த பெருங்கலம்." இது, அந்தப் பாராட்டு.

புகார்த் துறைமுகத்தில், இராக் காலத்தில் திசை மயங்கிச் செல்லும் கலங்களைத் திசைக்குறி காட்டி

அழைக்கும் கலங்கரை விளக்கம் துறைமுகத்தை அடுத்துக் கட்டப்பட்டிருந்தது. கடல் வழியாக, நாவாய்களில் வந்த பல்வேறு நாட்டுப் பொருள்களுக்கும், நாவாய்களில் ஏற்றிப் பல்வேறு நாடுகளுக்கு அனுப்புவதற்காக வந்து குவிந்து கிடக்கும் பொருள்களுக்கும் உரிய தீர்வையை வரையறுத்துக் கடமை கொள்ளும் ஆயத்துறைகளும் (Custom House) ஆங்கே அமைக்கப்பட்டிருந்தன. சுங்கம் இறுத்த பின்னர், அப்புகார்த் துறைக்கு உரியோனுய சோழ வேந்தனின் அடையாள முத்திரையாகிய புலி இலச்சினை பொறித்த பண்டப் பொதிகளைக் கொண்டுபோய்ச் சேர்த்துவைக்கும் பண்டசாலைகளும் (Warehouse), கிடங்குகளும் (Godowns), உயர்ந்த மேடைகளும் (Docks and Piers), ஆங்கே அமைந்திருந்தன. இவற்றிற்கு அப்பால், பொருள் தேடும் முயற்சி உடையவராகிக் கலம் ஏறிக் கடல் கடந்து வந்துள்ள யவனர், சீனர், சாவகர் முதலாம் பிற நாட்டு மக்கள், தம்முள் பகை சிறிதும் இல்லாமல், உள்ளம் கலந்து உறவாடி வாழும் வானளாவிய மாளிகைகள் அமைந்துள்ளன.

அணுகுதற்கு அரிய காவல் அமைந்த அத்துறைமுகத்தை அடுத்துக் கட்டப்பெற்றுள்ள பெரிய பண்டசாலையின்கண், வெளிநாடுகளுக்குக் கொண்டுசென்று விற்பது கருதிக் கலங்களில் ஏற்றுவதற்காகக் கொண்டு வந்த உள்நாட்டுப்பொருள்களும், இந்நாட்டில் விற்பதுகுறித்து வெளிநாடுகளிலிருந்து, கப்பலில் வந்து, நிலத்தில் இறக்கி வைக்கப்பட்டுள்ள வேற்று நாட்டுப் பொருள்களும் அளந்து அறிய இயலாதவாறு வந்து குவிந்து கிடக்கும்.

அரசனுக்குரிய சுங்கப் பொருளை ஒருவரும் ஏமாற்றிவிட்டுச் செல்லாவாறு, ஒரு சிறிதும் சோம்பி இராது, உடற்றளர்ச்சியையும் உணராது, இரவு பகல் உறங்காது நாள் தோறும் காக்கும் புகழ் பொருந்திய சுங்கத் தலைவர்கள், அதற்குரிய சுங்கத்தில் குறைவு நேர்ந்திடாவண்ணம், அப்பண்டப் பொதிகளை மதிப்பிட்டு, மதிப்பிடப் பெற்றதற்கு அறிகுறியாக அரச இலாஞ்சனையாகிய புலியைப் பொறித்து, மலைபோல அடுக்கி வைப்பர். இவ்வாறு ஏற்றுமதியும், இறக்குமதியும், இரவிலும், பகலிலும் இடைவிடாது நடைபெறும் நல்ல புகழுடையது புகார்த் துறைமுகம்.

புகார்த் துறைமுகத்தின் பெருமை இது ; அப் புகார் நகரைச் சூழ ஓடும் உப்பு நீர்க் கழிகளும் உறு பயன் அளிப்பனவே ; ஆங்கு விளைந்த வெள்ளை உப்பை ஏற்றிச் சென்ற ஓடங்கள், சோணாட்டின் உள்நாடுகளிலும் சென்று, அவ்வுப்பை விற்றுவிட்டு, அதற்கு விலையாகப் பெற்ற நெல்லை ஏற்றிக்கொண்டு மீண்டு வந்து, கழிக்கரைக்கண் உள்ள மரங்களில் கட்டிவைக்கப் பெறும் ; அவ்வாறு அவ்வோடங்கள் கட்டப்பெற்றிருக்கும் காட்சி, கொட்டிலில் கட்டப்பெற்று நிற்கும் குதிரைகளின் காட்சிக்கு நிகராகும். இவ்வாறு, உப்பங்கழிவழி உள்நாட்டு வாணிகத்தையும் கப்பல் வழி வெளிநாட்டு வாணிகத்தையும் வளர்த்துப் புகழ்பெற்றது புகார்.

கொற்கை

பாண்டிய நாட்டின் பெரிய துறைமுகம் கொற்கையே. கடல் வாணிகத்தால், வளம் பல பெற்றுத்

தரும் புகார்த் துறைமுகம் சோழநாட்டின் அரசியல தலைநகராகவும் விளங்கியதைப் போன்றே, கொற்கை யும், ஒரு சில காலங்களில் பாண்டியர் தலைநகராகத் திகழ்ந்துளது. நெடுஞ்செழியன் மதுரையில் இருந்து நாடாண்டிருந்த காலத்தில், கொற்கையில் வெற்றி வேற்செழியன் என்பான் இருந்து அரசாண்டான் எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது. பாண்டியர் தலைநகராய் இருந்த பெருமையைக் காட்டிலும், கொற்கைக்குப் பெருமையளிப்பது, அத்துறைமுகத்திலிருந்து பெற்ற முத்துக்களே. "பாண்டிநாடு முத்துடைத்து" என்ற பாராட்டைப் பாண்டியர்க்குப் பெற்றுத் தந்த முத்தைப் பெறும் பெருமை கொற்கைக்கே உரிதது. நிலவளமும், நீர்வளமும் எல்லா அரசர்க்கும் உண்டு; ஆகவே, அவற்றால் பெற்ற பெருமை உண்மையான பெருமை யாகாது; என்று கருதி முத்துமாலை யணிந்து பெருமை யுற்றார் பாண்டியர் என்று, முத்தின் பெருமையைப் பாராட்டியுள்ளார்கள் புலவர்கள்.

தமிழ்நாட்டின் வளம் பெருகத் துணைபுரிந்தது கொற்கை. மேற்கே உரோம் முதலாம் பேரரசுகளின் செல்வத்தையும், கிழக்கே சீனப் பேரரசின் செல்வத்தை யும் வாரிக்கொண்டு வந்து, தமிழ்நாட்டின் வளத்தை வளர்த்தது கொற்கைத்துறை முத்தே. இவ்வளவு பெருமை வாய்ந்த கொற்கைத் துறையையும், ஆங்குக் கிடைக்கும் முத்தையும் பழந்தமிழ்ப் புலவர்கள் பல வாறு பாராட்டிப் பாடியுள்ளார்கள்.

"போரில் வல்ல பாண்டியர்கள் அறநெறி வழு வாது காக்கும் கொற்கைப் பெருந்துறையில் பெற்ற

முத்து." "அலை அலைத்துக் கரையில் ஒதுக்கும் குளிர்ந்த ஒளியினுடைய முத்துக்கள், அவ்வழியே வரும் குதிரைகளின் கால்களைப் புண் செய்து வடுப்படுத்தும் கொற்கைத் துறைமுகம்." "பாண்டியர்க்குரிய, புகழ் நிறைந்த கொற்கைத் துறையில், வலம்புரிச் சங்கோடு உடன் பிறக்கும், கண்டார் கண்ணொளியைக் கெடுக்கும் பேரொளி வீசும் முத்து." "கலம் ஏறிச் சென்று மீன் பிடித்து வாழும் பரதவர், மீனோடு தாம் கொண்டு வந்த முத்துச் சிப்பிகளைக் கள்ளின் விலையாக வழங்கும் புகழ் மிக்க கொற்கை." "ஆழம் மிக்க பெரிய கடல் நீரில் முழ்கி, ஆண்டு வாழும் சுறுமீன் போன்ற பெரிய மீன் களைக் கொன்று, வலம்புரி முத்துக்களைத் தரும் சிப்பிகளை வாரிக்கொண்டு வரும் பரதவர்களைச், சங்கு முதலாம் இசைகளை எழுப்பி, இனிது வரவேற்பார் வாழும் கொற்கைத்துறை." "சூல் முற்றி, ஒளி முதிர்ந்த முத்தும், வலம்புரிச் சங்கும் நிறைந்த கொற்கை." "உமணர் உப்பு வண்டியோடு தொடர்ந்து வந்த மந்தி கள், அவ்வுமணரின் மக்கள் அழுதவிடத்து, இரண்டு கிளிஞ்சல்களுக்கு இடையே முத்தை இட்டுக் கிலு கிலுப்பை ஆட்டி மகிழ்விக்கும் கொற்கைத்துறை." புலவர்கள் பாராட்டிய பாராட்டுரைகளில், இவை ஒரு சில.

பதின்மூன்றாண்டின் இறுதியில், தமிழகத்திற்கு வந்து, தமிழ் நாட்டின் பழக்க வழக்கப் பண்பாடுகளை நேரில் கண்டறிந்து சென்ற மார்க்கோ போலோ, இக்கொற்கையைப் பற்றிக் கூறுவன வருமாறு: "முத்துக் குளிப்பவர்கள், பெரியவும் சிறியவுமாய தம்

கலங்களோடு கொற்கைக்குச் செல்வர். ஆங்கே, அவர்கள் தம் பெரிய கலங்களில் ஏறிக்கொண்டு, கடலில் அறுபது கல் தொலைவினைக் கடந்து சென்று நிற்பர். ஆங்கு, அப்பெரிய கலங்களை நிறுத்திவிட்டுச் சிறிய கலங்களில் ஏறிக்கொள்வர், பின்னர்க் கடல் நீருள் குதித்து மூழ்குவர். மூழ்கிக் கடலடிக்குச் செல்வர்; கடலாழம் இருபத்திநான்கு அடியிலிருந்து எழுபத்திரண்டு அடிவரையும் இருக்கும்; ஆண்டு அவர்களால் எவ்வளவு நாழிகை இருக்கமுடியுமோ அவ்வளவு நாழிகை இருப்பர்; அதற்குள்ளாகவே ஆங்குக் கிடைக்கும் முத்துச் சிப்பிகளை வாரிக்கொண்டு வருவர்; ஓரே முறையில் நிறையக்கொண்டு வருவதும், பலமுறை மூழ்கியும் வறிதே வருவதும் உண்டு; ஒவ்வொருவரும் தங்களால் ஆகும்வரை, தங்கள் தங்கள் ஆற்றல்களுக்கு ஏற்ப, ஒருமுறையோ, பலமுறையோ மூழ்கி முத்தை வாரிக்கொண்டு வருவர். கடலடியில் செல்வார் சிலர், ஆங்கு வாழும் பெருமீன்களுக்கு இரையாகி உயிர் இழத்தலும் உண்டு. முத்துச் சிப்பிகளைத் தாம்வேண்டும் அளவு வாரிக் கொண்ட பின்னர்க் கரை வந்து சேர்வர்; சேர்ந்ததும், பத்தில் ஒருபகுதியை, அரசர்க்கு இறையாகவும், இருபதில் ஒருபகுதியைக் கடலில் மூழ்கிய தம்மை, அக்கடல் வாழ் உயிர்கள் ஊறு செய்யாவாறு மந்திரம் ஓதித் தெய்வத்தை வழிபட்ட அந்தணர்க்கு அன்புக்காணிக்கை யாகவும் தருவர். இவ்வாறு, தாமே சென்று மூழ்கி, மூழ்கிப்பெற்ற பயனைத் தாமே அனுபவிப்பார் சிலர்; ஒருசிலர், முத்துவணிகரின் ஏவற்படி சென்று மூழ்கி, மூழ்கிப் பெற்றனவற்றை அவ்வணிகர்பால் அளித்து

விட்டு அவர் தரும் கூலியை மட்டும் பெற்று வருவார் ஒருசிலர். முத்துக் குளிக்கும் இத்தொழில், பங்குனி பதினைந்தாம் நாட்டொடங்கிச் சித்திரை முடிய, நாற்பத்தைந்து நாள் நடைபெறும். இத்தனை முத்திற்கு மேல் எவரும் பாண்டி நாட்டு எல்லையைக் கடந்து எடுத்துச் செல்வது கூடாது எனத் தடைவிதித்தும், எவரிடத்தேனும் முத்துக்கள் இருப்பின், அவற்றைத் தன்பால் கொண்டு வந்து தரின், அதன் இருமடங்கு விலையைத் தருவதாக அறிவித்தும், மக்களிடையே கிடைக்கும் முத்துக்களையெல்லாம் மன்னனே பெற்றுக்கொள்வன்; இவ்வகையால் அரசன்பால் அளவிறந்த முத்துக்கள் குவிந்து கிடந்தன."

"செங்கடற் செலவு" என்ற நூலை எழுதிய ஆசிரியர், "பாண்டிய நாட்டில் முத்துக் குளிக்கும் தொழிலை, அங்நாட்டில் ஆயுள் தண்டனை பெற்ற குற்றவாளிகள் மேற்கொண்டிருந்தனர்" என்று எழுதிச் சென்றுள்ளார்.

கி. பி. பதின் மூன்றும் நூற்றுண்டில், மார்க்கோ போலோ கண்ட முத்துக் குளிக்கும் முறை, இன்றும் மாருதிருந்து, தமிழகத்திற்குப் பெருமை தந்து விளங்குவது பாராட்டற்குரியது.

முசிறி

வடமொழி இராமயணப் பேராசிரியராகிய வால்மீகியாரால் பாராட்டப்பெற்ற பழம்பெரும் சிறப்பினை உடைய முசிறித்துறைமுகம், சீதையைத் தேடிச் செல்ல வேண்டிய தென்னுட்டு நகரங்களாகச் சுக்ரீவன் கூறிய

இடங்களுள் ஒன்ருகக் கூறப்பட்ட முரசீபத்தனம் என்பது, மேற்குக் கடற்கரையில் சேரர்க்கு உரியதாய் இருந்த முசிறித்துறையே. தமிழர், உரோம் முதலாம் மேலை நாடுகளோடு நடத்திய வாணிகத்தில் பெரும் பங்கு கொண்டிருந்தது முசிறி. முசிறித் துறை முகத்தைப் பாராட்டிய புலவர் இருவராவர்; அவர் கூறுவன வருமாறு :

"முசிறி, சேரனுக்குரிய சிறந்த துறைமுகம்; அது, சுள்ளி என்னும் பெயருடைய பெரிய ஆறு, கடலோடு கலக்கும் இடத்தில் உளது. தமிழகத்தோடு வாணிகத் தொடர்பு கொண்ட மேனுட்டு, யவன வணிகர், தம் கலங்கள் நிறையப் பொன் கொண்டு வந்து கொடுத்துவிட்டு, அப்பொன்னின் விலையாக, அப்பொன்னின் நிறையளவு மிளகினை ஏற்றிக்கொண்டு செல்வார்; அக்கலங்கள், அப்பேரியாற்றின், வெண்ணுரை படிந்த நீர் கலங்குமாறு உட்புகுந்து வெளியேறும்."

"சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடுவந்து கறியொடு பெயரும்
வளங் கெழு முசிறி"

"தாம் பிடித்த மீனை விற்றுவிட்டு அவற்றிற்கு ஈடாகப் பெற்று வந்த நெற்குவியல்களோடு, மனைகளைச் சூழ உள்ள கழிகளில் வந்து நிற்கும் அம்பிகளுக்கும், அப்பரதவரின் மனைகளுக்குமிடையே வேற்றுமை தோன்றுவதில்லை. ஆதலின் மனை எது, அம்பிஎது

என அறியமாட்டாது மக்கள் மயங்குவர். தம் மனை களில் தொடுத்து வைத்திருக்கும் மிளகுப் பொதிகளைக் கலத்தில் ஏற்றுங்கால் ஏற்றுவார் எழுப்பும் பேரொலிக் கும், அக்கடலொலிக்கும் இடையே வேற்றுமை காண மாட்டாதும் மக்கள் மயங்குவர்; இவ்வாறு ஆண்டு வரு வார் கண்களையும், காதுகளையும் மயக்கவல்ல வளம்மிக்க அத்துறைமுகத்திற்குப் பிறநாட்டினின்றும் வாணிகம் கருதி வந்த நாவாய்கள் கொணர்ந்த பொற்காசுகளைக் கழிகளில் இயங்கும் தோணிகள் வழியாகக் கரைக்கண் கொண்டு சேர்ப்பர். அவ்வாறு பிறநாடுகளிலிருந்து வந்து பொன் தந்த வணிகர்க்கு, அந்நாட்டு அரசனாய செங்குட்டுவன், தன் நாட்டு மலைகளிலும், கடல்களிலும் விளைந்த பல்வேறு பொருள்களையும் தந்து அனுப்புவன். அத்தகைய வாணிகத்தால் வளம் சிறந்தது முசிறி."

"மீன் நொடுத்து நெல்குவைஇ
மிசைஅம்பியின் மனைமறுக்குந்து;
மனைக்குவைஇய கறிமூடையால்
கலிச்சும்மைய கரைகலக்குறுந்து;
கலம்தந்த பொன்பரிசம்
கழித்தோணியால் கரைசேர்க்குந்து;
மலைத்தாரமும், கடல்தாரமும்
தலைப்பெய்து வருநர்க்கு ஈயும்
புனலங் கள்ளின் பொலந்தார்க் குட்டுவின்
முழங்கு கடல் முழவின் முசிறி"

புலவர்கள் பாராட்டிக் கூறும், முசிறித் துறைக் காட்சிகள், தமிழ் நாடு, யவனர்களோடு நடத்திய மிளகு வாணிகத்தின் வளத்தினையும், அதனால் நம் நாடு பெற்ற

பொன்னின் பெருமையினையும் உள்ளவாறு உணர்த்தி நிற்றல் காண்க.

தொண்டி

சேரருள் ஒரு பிரிவினராய இரும்பொறை என்ற மரபினர் இருந்து ஆண்ட சிறப்புடையது தொண்டி. இவ்வாறு சேரநாட்டின் சிறந்த துறைமுகமாகவும், அச்சேரரின் ஒரு கிளையினரின் தலைநகரமாகவும் திகழ்ந்த தொண்டி நகர், இப்போது, அகலப்புழையை அடுத்துத் தொண்டிப்பாயில் எனும் பெயரில் விளங்கும் சிற்றூரே என ஆராய்ச்சியாளர் கருதுவர். மேற்குக் கடற்கரைக்கண் இருந்து வாணிக வாழ்விற்குப் பெருந் துணை புரிந்து வளமும் வனப்பும் மிக்க தொண்டி நகரையும், அதன் வளத்தையும் புலவர்கள் பாராட்டியுள்ளார்கள்.

"கடற்கரை மணல் மேட்டில், பழைய படகுகளின் சிதைவினைப் போக்கிப் புதுக்கியும், தாம் பிடித்துக் கொணர்ந்த சுறு மீன்களை, அக் கரையைச் சார்ந்த சிற்றூரில் வாழும் தம் இனத்தார்க்குப் பகுத்துக்கொடுத்தும் வாழும் பரதவர்களின் குடியிருப்பைக்கொண்டது தொண்டித் துறை."

தந்தை, பெரிய வலையையும், குத்துக்கோலையும் எடுத்துக் கொண்டு நீண்ட படகேறி, கடலிற்சென்று மீன் பிடித்துக் கொண்டு வரச் சென்ற பின்னர், தன் மனையைச் சூழ உள்ள கழிகளில் விளைந்த உப்பைக் கொண்டு ஊருட்புகுந்து விற்றுவிட்டு, அதற்கு விலையாகப் பெற்று வந்த நெல்லை அரிசியாக்கிச் சமைத்து,

அயிலை மீனும், புளியும் கலந்து செய்த கறியையும், கருவாட்டையும், மீண்டு வந்த தந்தைக்கு அளித்து மகிழும் பரதவர் குலத்து வந்த மகளிர் வாழும் மாண்புடையது தொண்டி."

"உரலில் இட்ட நெல்லை, அவலாக இடித்த உலக்கையை நெற்பயிர் விளைந்து கதிர் முற்றிச் சாய்ந்திருக்கும் வயல்களின் வரப்பிலே வைத்துவிட்டு, கடற்கரையில் மணல் வீடு கட்டி மகிழ்ந்து விளையாடும் மகளிர் நிறைந்த மாண்புடைய தொண்டிமாநகர்."

" தொண்டி நகர் வாழும் வணிகர், தம் தொண்டித் துறையில் வாணிகம் கருதி வந்து நிற்கும் வங்கங்களில், அகில் வகைகளையும், ஆடை வகைகளையும், சந்தன வகைகளையும், வாசனைப் பொருள் வகைகளையும், கருப்பூர வகைகளையும் ஏற்றுவர். அவற்றை ஏற்றிக் கொண்ட அவ்வங்கங்கள், ஆண்டிருந்து புறப்பட்டுக் கொண்டல் வீசும் பின் பனிக் காலத்தில் கூடல் சென்று சேரும்."

"ஓங்கிருப் பரப்பின்
வங்க ஈட்டத்துத் தொண்டியோர் இட்ட
அகிலும், துகிலும், ஆரமும், வாசமும்
தொகு கருப்பூரமும், சுமந்துடன் வந்த
கொண்டல் "

இவ்வாறு புலவர் பாராட்டும் பெருமை வாய்ந்த தமிழ் நாட்டுத் துறைமுகங்களை, அப்புலவர்கள் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்து தமிழ் நாட்டிற்கு வந்து சென்ற வெளிநாட்டு அறிஞர்களும் அறிந்து பாராட்டியுள்ளார்கள்.

"செங்கடற் செலவு" என்ற நூலை எழுதிய ஆசிரியர், தொண்டி, முசிறி, கொமரி முதலாம் துறை முகங்களைக் கூறிவிட்டுத், "தம் வாழ்க்கையில் தாம் அதுவரை செய்த பிழைகளைப் போக்கிவிட்டு, மேலும் பிழை செய்யாப் பேரறமாம் தவம் மேற்கொள்ளும் மக்கள் பலரும் இவண் வந்து இங்குள்ள கடல் நீரில் மூழ்குவர். பண்டு ஒரு பெண் தெய்வம், அவ்வாறே மூழ்கித் தவம் கிடந்ததாக அவர்கள் கருதுகின்றனர்" எனக் குமரி முனையின் இயல்புகளை எடுத்துக் கூறியுள்ளார். கொமரியை அடுத்துச் **சொல்ச்சி** என்ற துறைமுகம் இருப்பதாயும், அது பாண்டியர்க்கு உரித்து என்றும், அங்கு ஆயுள் தண்டனை பெற்றகைதிகளைக் கொண்டு முத்துக் குளிக்கும் தொழில் நடைபெறுகிறது என்றும் கூறியுள்ளார்; அவர் கூறும் **சொல்ச்சி**, கொற்கையே, "கொற்கைக்கு வடக்கே, கடற்கரை நாடு ஒன்றும் உள்நாடு ஒன்றும் உள; அவற்றுள் உள் நாட்டிற்கு **அர்குரு** என்பது தலைநகராம்; ஆங்கிருந்து, **அர்கரிடிக்** என்ற ஆடைவகைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் பெறுகின்றன" என்றும் கூறியுள்ளார். ஈண்டு, கடற்கரைநாடு உள்நாடு என அவர் உரைப்பது, முறையே புகாரையும், உறையூரையும், தலைநகராகக் கொண்டு சோழநாட்டை ஆண்டுவந்த இரு அரசுகளையே. அவர் குறிப்பிடும் **அர்குரு** இன்றைய உறையூரே; ஆண்டிருந்து அனுப்பப்பெற்ற **அர்கரிடிக்** ஆடை, உறையூர்ப் பூந்துகிலே என்பதில் சிறிதும் ஐயம் இல்லை. அந்நூலாசிரியர் கொற்கைக்குவடக்கே சென்றவர் அல்லர்; ஆகவே, அதற்கு வடக்குள்ள நாடுபற்றி அவர் கூறுவன அவ்வளது தெளிவாக இல்லை. "சோழநாட்டின் சிறந்த

துறைமுகங்களாக இருந்தவை **கமர**, **பொதுக**, **சோபடம** என்பனவாம் ; அத்துறைமுகங்களிலிருந்து **சோழந்தி** என்ற கடல் செல்லும் நாவாய்கள், கங்கைக் கரை நாடுகளுக்கும், கடாரம் முதலாம் நாடுகளுக்கும் செல்கின்றன. தமிழகத்தில் கிடைக்கும் எல்லாப் பொருள்களும் இந்தத் துறைமுகங்களிலிருந்தே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. எகிப்து முதலாம் நாடுகளிலிருந்தும், மலையாளக் கரையிலிருந்தும் வாங்கிய பொருள்கள், **பரலியா** நாடு வழியாக வரும் கப்பல்களிலிருந்து இந்தத் துறைமுகங்களிலேயே இறக்குமதி செய்யப்படும்" என அவர் கூறுவது, அன்றைய வாணிக நிலையினை விளங்க உரைப்பதாமன்றோ ! ஈண்டு அவர் கூறும் **கமர**, **பொதுக**, **சோபடம** முதலாம் துறைமுகங்கள், முறையே கோடிக்கரையும், புகாரும், நாகப்பட்டினமுமாம் எனக் கொள்க. அவர் கூறும் **பரலியா** நாடு, தென் திருவாங்கூர்ப் பகுதியாம் என்க.

கி. பி. 150-ல் வாழ்ந்த தாலமி என்ற நிலநூல் பேராசிரியர், தமிழ்நாட்டின் பல பகுதிகளையும், ஆங்காங்கு வாழ்ந்த மக்களையும், அரசர்களையும் அறிந்து எழுதிவைத்துள்ளார். மகாபலிபுரத்தின் பண்டைப் பெயராய மாவிலங்கையை **மலங்க** என்றும், காவிரிப்பூம் பட்டினத்தைக் **கபெரிஸ்** என்றும், நாகப்பட்டினத்தை **நிகம** என்றும், கொற்கையை **கொல்க்ஹொய்** என்றும், தனுஷ்கோடியைக் **கரோய்** அல்லது **கொரி** என்றும், குமரிமுனையைக் **கொமரியா** என்றும், முசிறியை **மௌசரிஸ்** என்றும், தொண்டியைத் **திண்டிஸ்** என்றும் பெயரிட்டு அறிந்து அறிவித்துள்ளார்.

5. வாணிகம் வளர்க்கும் தொழில்கள்

ஒரு நாடு வாணிகத்துறையில் வளம்பெற விரும்புமாயின், அது, தன்நாட்டுக் கைத்தொழில்களை வளர்ப்பதிலும் கருத்தூன்ற வேண்டும். நிறைந்த வாணிகம் நல்ல தொழில்களை வளர்க்கும்; நல்ல தொழில்கள் நாட்டு வாணிகத்தை வளர்க்கும். பழந்தமிழ் மக்கள் இந்த உண்மையை உணர்ந்தவர் ஆதலின், தங்கள் நாட்டுக் கைத்தொழில்களை நன்கு வளர்த்திருந்தனர். பல்வேறு தொழிலாளரும் ஒன்றுகலந்து வாழ்ந்திருந்தனர் தமிழகத்தில். தமிழர்கள், இரும்பு முதலாம் தொழில் வளர்க்கும் உலோகங்களைக் கண்டு, அவற்றின் பயனையும் பயன்படுத்தும் முறைகளையும், அக்காலத்திலேயே அறிந்திருந்தனர்.

பண்டைத் தமிழகத்துப் பேரூர்களில், வணிகர்களின் வாழ்விடங்களை அடுத்துப் பல்வேறு தொழில் வல்லாரும், தங்கள் தங்கள் தொழில் நிலையங்களை அமைத்து வாழ்ந்திருந்தனர். வெண்கலக் கன்னரைக் **கஞ்சகாரர்** என்றும், செம்பு கொண்டு கலன் புனைந்து

தருவாரை **செப்புகொட்டி** என்றும்,சிற்ப நூல்வல்லாரை **மண்ணீட்டாளர்** என்றும், தையல் தொழிலாளரைத் **துன்னகாரர்** என்றும் பெயரிட்டு அழைத்தனர். மரங் கொல் தச்சர், கருங்கைக் கொல்லர், பொன்செய் கொல்லர் நன்கலம் தருநர் முதலாம் பல்வேறு கம்மாளரும், பழந் தமிழ்நாட்டில் இருந்தனர். இவர் போலும் தமிழ் நாட்டுத் தொழிலாளரே யல்லாமல், பிறநாட்டுத் தொழி லாளரும் பெருந்திரளாக வாழ்ந்திருந்தனர். “பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்” என்ற பெரிய உள்ளம் உடையவர் தமிழர்; அதனால், பிறநாட்டுத் தொழிலாளர் பலரைப் பேணிய தோடு, அவர்கள், தமிழ்நாட்டுத் தொழிலாளரோடு தோழமை கொண்டு தொழிலாற்றும் காட்சியினை,

“மகத வினைஞரும், மராட்டக் கம்மரும்,
அவந்திக் கொல்லரும், யவனத் தச்சரும்
தண்தமிழ் வினைஞர் தம்மொடு கூடிக்
கொண்டினிது இயற்றிய கண்கவர் செய்வினை”

எனப் பாடிப்• பாராட்டியும் உள்ளனர். தமிழகத்தின் வாணிகமும், வளமும் வாழப் பிறநாட்டுத் தொழில் வல்லார் அறிவையும் பயன்கொண்ட பழந்தமிழ் மக்க ளின் பண்பாட்டினைப் பாராட்டுவோமாக!

உழவு

வாணிகம் வளர வழிசெய்யும் தொழில்களுள், உழவும் ஒன்று. உழவு, மக்களுக்கு வேண்டும் உணவைத் தரும் உயர்ந்த தொழில். அத்தொழில் நன்கு நடை பெருத நாட்டு வணிகர், தாம் அரிதின் முயன்று• ஆக்கிய

பொருள்களை அண்டை நாடுகட்குக் கொண்டுசென்று விற்குங்கால், அவற்றின் விலையாகப் பொன்னையும், மணியையும் பெற்று வருவதற்கு மாறாகத் தம் நாட்டு மக்களுக்கு வேண்டும் உணவுப்பொருள் பெற்று வருவர். அத்தகைய வாணிகம் வளம்தரும் வாணிகம் ஆகாது. தம் நாட்டு மக்களுக்கு வேண்டும் உணவுப் பொருள்களை வெளிநாடுகளிலிருந்து வாங்கி வழங்கும் நாடு, நாளடைவில் வளங்குன்றும்; வளம்குறைந்த நாட்டில் வாணிகம் வளராது. அதனால், வாணிகத்தில் வளம் காண விரும்புவார், உழவுத் தொழிலில் உயர்வு காண முன்வரல் வேண்டும். மேலும், உழவுத்தொழில் அளிக்கும் பொருள்களுள், நெல்லும் கரும்பும், இஞ்சியும்,மஞ்சளும் பஞ்சும் பிறவும் வெளிநாட்டு மக்களால் விரும்பி வாங்கப் பெறும் ஆதலின், வாணிக வளர்ச்சிக்கு உற்ற துணையாவதில் உழவும் ஒன்றே.

பழந்தமிழ் மக்கள், உழவைப்பற்றி அறியவேண்டுவனவற்றை, மிகவும் தெளிவாகவே அறிந்திருந்தனர். உடலைப்பற்றிப் பேசும்போதெல்லாம் அதற்கு "உணவின் பிண்டம்" எனப் பெயரிட்டு, உடலும் உயிரும் கூடி வாழ உறுதுணை புரிவது உணவே என்ற உண்மையை உலகறிய உணர்த்தினர். "உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோர்" என உணவின் சிறப்பினை உயர்த்திக் கூறிப் பாராட்டினர் ஒரு புலவர். நல்ல நாட்டின் இயல்பு இது என உரைக்கவந்த ஆசிரியர் திருவள்ளுவர், "தள்ளாவிளையுளும், தக்காரும், தாழ்விலாச் செல்வரும் சேர்வது நாடு" என வளங்குறைவிளையுள் உடையதே நாட்டின் நல்லியல்பாம் என்று கூறினர். பிற நாடுகள்

எல்லாம் விரும்பத்தக்க பெருவளம் உடையது நாடு; அவ்வாறு விரும்பிய நாடுகள், தன்பால் வந்து சேரின், வந்தார் அனைவர்க்கும் உணவு அளித்துப் புரக்கும் பெருவளம் உடையது நாடு; வளம் குறைந்தால் பசி மிகும்; பசிமிகின், பிணிமிகும்; பிணிமிகின், நாட்டில் அமைதி குலையும்; ஆகவே, அரசியல் குழப்பமும், அதற்குக் காரணமாய பிணியும், அதற்குக் காரணமாய பசியும் அற்று நாடு நல்வாழ்வு வாழ்தற்காம் வளம்பல தருவது நாடு; நாடு பெருவளம் பெறவேண்டுமாயின், அந்நாட்டு நிலங்கள் நிறைய விளைதல் வேண்டும். நிலம் நிறைய விளைதலை விரும்பின், வேண்டும் மழையும், இயற்கையாலும், செயற்கையாலும் உண்டாம் கேடின் மையும் வேண்டும் என வள்ளுவர் வகுத்துக் காட்டிய நல்ல நாட்டில், உணவிற்கும், அதைத் தரும் உழவிற் கும் எத்துணைச் சிறந்த இடம் கொடுக்கப்பட்டுளது உணருங்கள்!

நாட்டின் விளைவு நன்னிலையில் இருத்தல் வேண்டும் என்பதை அறிந்திருந்த அவர்கள், விளையத்தக்க நிலம் வேண்டும் அளவு பரந்திருத்தல் வேண்டும் என்பதையும் உணர்ந்திருந்தனர்; அதற்காக, நாட்டைச் சூழப் பரந்து கிடந்த காடுகளை அழித்து நாடாக்கினர்; காடழித்து நாடாக்கிய அரசர்களைப் பாராட்டினர்; காடுகளை அழித்து நிலம்பல கண்டுவிட்டதினாலேயே வளம் பெருகி விடும் எனக் கருதினாரல்லர்; நிலம் வளமாதற்கு நீர் வேண்டும்; அதனால் இயல்பாகக் கிடக்கும் நீர்வளங்களை இயன்ற அளவு பயன்கொண்டனர்; அவை அற்ற இடங் களில், குளம்பல தோண்டி அவற்றின் துணையால் வளம் பெருக்கி வாழ்ந்தனர். " காடுகொன்று நாடாக்கிக்

குளம்தொட்டு வளம்பெருக்கி" எனக் கரிகாற் பெருவளத்தானைப் பாராட்டிய பாராட்டும், உடல் உணவின் பிண்டம் எனப்படும்; ஆதலின், உணவளித்து உடலைப் பேணுவார், உயிர்அளித் துயர்ந்த உரனுடையவராவர்; உயிர் எனப் போற்றப்படும் அவ்வுணவு, நிலமும் நீரும் ஒன்றுகூடிய வழியே உண்டாகும்; ஆகவே நிலமும் நீரும் ஒன்றுகலந்து ஒருவழி நிற்க வழிவகை செய்தார், உலக உயிர்களை ஓம்பிய உயர்பேரருள் உடையவராவர். விதைத்த விதை விளைந்து பயன்தரத் துணைபுரிந்து நிற்கும் நீர்க்கு மழையை எதிர்நோக்கி நிற்கும் நிலங்கள் நல்ல நிலங்களாகா; அத்தகைய நிலங்கள் வேலி வேலியாகப் பரந்துகிடப்பினும் பயன் இல்லையாம்; நேர்ந்த இடங்களில் எல்லாம் நீர்நிலை பலகாணின், நிலம் ஆற்ற விளையும்; நாட்டில் உணவு மிகும்; உடலும், உயிரும் கூடியவாழ்வு உயர்வடையும்; ஆகவே நீர்நிலை பல கண்டவரே நிறைந்த புகழ் உடையவராவர்; அது செய்யாதார் அப்புகழினைப் பெறுதல் இயலாது; புகழ் உடையார் பெயரே உலகில் இறவாது நிற்கும்; அது அற்றார் பெயர், ஒரு கணப்பொழுதும் நில்லாது மறைந்து போம்; ஆகவே நீர்நிலை பலகண்டு நிறைந்த புகழ் உடையோனாகுக" எனத் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனுக்கு உரைத்த அறவுரையும், நீர்வளத்தின் இன்றியமையாமையினை எவ்வளவு நன்குணர்ந்திருந்தனர் என்பதை நின்று உணர்த்துவனவாம்.

நிலவளமும், நீர்வளமும் நிறைந்த நாட்டில், அவ்விரண்டினையும் பயன்படுத்தித் தொழிலாற்றும் குடிவளம் இல்லையாயின் அந்நாடு, நீர்நிலவளங்களால் பயன்

உறுவது இல்லை என்பதை உணர்ந்தவர் பழந்தமிழர். அதனால், அத்தொழிலையும், அத்தொழிலை விரும்பி மேற்கொண்டாரையும் புகழ்ந்து பாராட்டியுள்ளனர்; " மேழிச்செல்வம் கோழைபடாது ", " உழுவார் உலகத்தார்க்கு ஆணி ", " உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் ", " இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும் உழவிடை விளைப்போர் " எனப் பாக்கள் பலபாடிப் பாராட்டினர். அத்தொழில் மேற்கொண்டார்க்கு " வேள் " எனவும், " கிழார் " எனவும் சிறப்புப் பெயரளித்துப் பாராட்டினர் பழந்தமிழ் மக்கள்.

உழவுத்தொழிலைப் பேணிவளர்த்து, அதனால் பெருவளம் பெற்ற நாடு, மற்ற நாடுகளை எல்லாம் தன் ஆணைக்கீழ் அடக்கி ஆளவல்ல ஆற்றல் வாய்ந்ததாம். இதையும் உணர்ந்தவர் தமிழர் என்பதைப், " பகடுபுறந் தருநர் பாரம் ஓம்பிக் குடிபுறம் தருகுவையாயின், நின் அடிபுறந் தருகுவர் அடங்காதோரே " எனவும், "பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர் அலகுடை நீழலவர் " எனவும், அரசர்களை நோக்கிப் புலவர்கள் உரைத்த அறவுரைகள் உணர்த்துகின்றன.

பகைவரால் வளைத்துக் கொள்ளப்பட்ட நாடு, வளம் பலபெற்ற நாடாயின், அப்பகைவர்க்குப் பணிந்து போகாது, அவர் முற்றுகையினைப் பலநாள் தாங்கி இருந்து பகைவர்தம் ஊக்கத்தை உடைத்து உயர்வு பெறும் என்ற உண்மையைப் பாரிக்கு உரிய பறம்பு மலைக் கோட்டையைப் பெரும்படை கொண்டு வளைத்திருந்த வேந்தர்களை நோக்கிக் கபிலர் கூறிய அறவுரை உணர்த்துகிறது.

உழவின் பெருமையினை உள்ளவாறு உணர்ந்த பழந்தமிழர், “ அகல உழுவதினும் ஆழஉழுதல் வேண்டும் ; காற்று உட்புகுந்து உரம் ஊட்டும் அளவு உழுத புழுதி நன்கு உலரவேண்டும் ; நிலத்தின் உரம்பெருக நிறைய எருவிடுதல் வேண்டும் ; உழுது, எருவிட்டு விதைத்தபின், குறையாமல் நீர் பாய்ச்சவேண்டும் ; விளையும் பயிரோடு உடன்வளர்ந்து ஊறுசெய்யும் களை களைக் களைந்து எறிதல் வேண்டும் ; வளர்ந்து பயன்தரும் பயிரைப் பிற உயிர்கள் பாழ்செய்து விடாவாறு பக்கத்தில் இருந்து பாதுகாத்தல் வேண்டும்” என்பனபோலும் உழவுத்தொழில் பற்றிய அடிப்படை அறிவையும் அவர்கள் பெற்றிருந்தனர்.

இவ்வாறு உழவுத்தொழிலின் உயர்வையும், அதன் உண்மை இயல்பையும் உணர்ந்து கடைப்பிடித்துத் தம் நாட்டு வாணிபம் வளர வழிசெய்து வாழ்ந்தனர் பழந் தமிழ் உழவர்.

நெய்தல்

தமிழகத்தில் தொழில்கள் மிகப் பலவாகப் பல்கி இருப்பினும், அவற்றுள் மிகமிகச் சிறப்புடைய தொழில் நெய்தல் தொழிலாம். தமிழகத்தின் ஆடைகளுக்கு, வெளி நாடுகளில் தேவைமிகுதியாக இருந்த காலம் அக்காலம் ; தமிழ் நாட்டு ஆடைகள், உரோம் முதலாம் நாடுகளில், மக்களால் விரும்பி வாங்கப் பெற்ற காலம் அக்காலம். அதனால், அக்கால மக்களும் அரசரும் நெய்தல் தொழிலை நன்கு பேணி வளர்த்தனர்; சோழ நாட்டு உறையூரும், தொண்டை நாட்டுக் காஞ்சியும், நெய்யும்

தொழிலில் தலைசிறந்து விளங்கின. அதன் பயனாய், வண்ணத்தாலும், வகையாலும் சிறந்த பற்பல ஆடைகளை ஆக்கித்தந்தனர் அத்தொழில் வல்லார்; அவர்கள் ஆக்கித் தந்த அவ் ஆடை வகைகளை,

"அரவுரி அன்ன அறுவை"
"நுரையென விரிந்த நுண்பூம் கலிங்கம்"
"புகை முகந்தன்ன மாசில் தூவுடை"
"புகை விரிந்தன்ன பொங்குதுகில்"
"கொட்டைக் கரைய பட்டுடை"
"கண் நுழைகல்லா நுண் நூல் கைவினை
வண்ண அறுவை"
"நூலினும் மயிரினும் நுழைநூற் பட்டினும்
பால்வகை தெரியாப் பன்னூறடுக்கத்து
நறுமடி செறிந்த அறுவை"
"பாம்புரி அன்ன வடிவின; காம்பின்
கழைபடு சொலியின் இழையணி வாரா
ஒண்பூங் கலிங்கம்"

எனப் பாடிப் பாராட்டியுள்ளனர் புலவர்கள். அறுவைத் தொழில் புரியும் அவர்களை, அரசர்களும் மதித்துப் போற்றி வந்தனர். அத்தொழிலில் வல்லார் சிலர்க்கு, அரசர்க்குரிய ஆடைகளை ஆக்கித்தரும் உரிமைகளை அளித்ததோடு, அவர் வாழும் இடத்தே உள்ள கோயில்களின் செல்வ நிலையினைக் கண் காணிக்கும் உரிமைகளை அளித்திருந்தான் ஒரு சோழ அரசன் எனப் பிற்காலச் சோழர் கல் வெட்டொன்று கூறுகிறது. நெய்தற்றொழில் மேற்கொண்ட அக்குடியில் பிறந்த பெரும் புலவர் ஒருவர், சங்கப் புலவர்களுள் ஒருவராய்ப் பாராட்டவும் பெற்றுள்ளார்.

அணிகள் ஆக்கல்

பழந்தமிழ் மக்கள், பற்பல அணிகளை ஆக்கி அணிந்து மகிழ்ந்தனர்; வாணிகம் வளரும் பேரூர்களில் வாழ்ந்த பல்வேறு வணிகர் குழுவினுள், பொன் வணிகர் குழுவும் ஒன்றும்; ஆடகம், சாம்பூநதம், கிளிச்சிறை, சாதரூபம் என மாற்றுவகையால், பல்வேறு வகைப் படும் பொன்னின் இயல்பினை அவர்கள் நன்கு உணர்ந் திருந்தனர். நால்வகைப் பொன்னுள், ஆடகமும், சாம்பூ நதமும் மாற்றுக் குறையா மாண்புடையவாதலின் பெரும் பொன் எனவும், கிளிச்சிறையும், சாதரூபமும் மாற்றுக் குறைபாடுடையவாதலின் இளம் பொன் எனவும், இயல்பறிந்து வழங்கப் பெற்றன. பொற் கொல்லர், மாணிக்கம், நீலம், வயிரம் முதலாம் நவமணி களின் இலக்கணங்களை நன்கறிந்து இருந்தனர்; பொன்னையும், நவமணிகளையும் கொண்டு நல்ல பல அணிகளை ஆக்கித் தரும் ஆற்றல் வாய்த்திருந்தனர்;

கோயிலில் குடிகொண்ட கடவுளரும், அரண்மனை வாழ் அரசரும், பெருமனை வாழ் செல்வரும் அணிபல அணிவதில் ஆர்வம் கொண்டனர்; தாமம், முகுடம், பதுமம், கிம்புரி, கோடகம் என்ற ஐவேறு தோற்றமும் தோன்றி விளங்குமாறு, பன்னிறம் காட்டும் பல மணி கள் வைத்து இழைக்கப்பெற்று, வானத்து வில்லையும், விளங்கும் மின்னலையும் பழிக்கும் பேரொளியோடு விளங்கும் முடியினை அணிந்திருந்தான் முருகன் எனத் திருமுருகாற்றுப் படை கூறுகிறது.

கால் முதல் தலைவரை உள்ள உறுப்புக்கள் ஒவ்வொன்றிற்கும் வகைவகையான அணிகளை ஆக்கி

அணிந்து மகிழ்ந்தனர் மகளிர். பரியகம், பாடகம், நூபுரம், சிலம்பு, சதங்கை, காற்சரி முதலாம் அணிகளைக் காலில் அணிந்து மகிழ்ந்தனர்; கையில் அணியும் வளையல்களில், பொன்வளை, பவழவளை, மணிவளை, சங்குவளை, முதலாகப் பல்வேறுவகை கண்டு மகிழ்ந்தனர்; வீரசங்கிலி, நேர்ஞ்சங்கிலி, ஞாண், சவடி, சரப்பள்ளி, முத்தாரம் முதலாம் பல்வேறு ஆரங்களைக் கழுத்தில் அணிந்து கண்டு களித்தனர். தெய்வவுத்தி, தென்பல்லி, வலம்புரி, வடபல்லி, பூரப்பாளை முதலாயின தலையில் அணியும் தலைக் கோலங்களாம். மகளிர் இடையில், ஆடைமேல் அணியும் மேகலை எனும் அணிமட்டும் ஏழு கோவை, எட்டுக் கோவை, பதினறு கோவை, பதினெட்டு கோவை, முப்பத்திரண்டு கோவை என அணிவார்தம் செல்வ வளத்திற்கேற்பப் பலவகைப் படும்.

மக்களுக்கு, அணிகள்பால் இருந்த ஆர்வம், அவ்வணிகளை ஆக்கி அணிந்து கொள்வதோடு அமைதி உற்றிலது; சிந்தாமணி, சிலம்பதிகாரம், மணிமேகலை என, அக்காலத்தே எழுதப்பெற்ற நூல்களுக்கும், அவ்வணிகளால் பெயர் சூட்டி அகமகிழ்ந்தனர். மக்கள், இவ்வாறு அணிகள்பால் ஆசை உடையராய் வாழவே, அவர்தம் ஆசைகளைக் குறைவற நிறைவாக்கித்தரவல்ல தொழிலாளரும், பண்டு பெருக வாழ்ந்தனர். பாண்டி நாட்டு மதுரையில், அந்நாட்டு அரசனுக்கு அணிகள் ஆக்கித்தரும் பணியுடைய பொற்கொல்லன் ஒருவனிடத்துமட்டும் நூறு பொற்கொல்லர் பணி புரிந்தனர் எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது. என்னே அக்கால அணிகலத் தொழிற் சிறப்பு!

பண்டு வாழ்ந்த பொற்கொல்லர் குடியிலும், பொன் வணிகர் குடியிலுமாகப் புலவர் ஐவர் வாழ்ந்து அருந்தமிழ் வளர்த்தனர் என அறிகிறோம்; புலவரும் போற்றும் புலமையுடையாரைப் பெற்றெடுத்த பொற்கொல்லர் குடி வந்தார், அழகிய அணிகளை அருமை பெருமை உடையவாய் ஆக்கித்தரவல்ல அறிவுடைய ராய், அவ்வறிவினைத் தம் வழி வந்தார்க்கும் அறிவித்துத் தமிழ் நாட்டின் அணிகலத் தொழிற் சிறப்பினைப் போற்றிப் பேணிய பெருமையுடையோராவர்.

உப்புத் தொழில்

ஏனைய தொழில்களையும் ஒவ்வொன்றாய் எடுத்துக் கூறிக்கொண்டே போவது ஏடு விரிதற்கு ஏதுவாகும் ஆதலின், அவ்வெல்லாத் தொழில்களையும் எடுத்துக் கூறாது, பொருளை ஆக்குவோரும், அதை விற்போரும் ஒருவரேயாம் நிலை யுடைய தொழில்களில் ஒன்றாய உப்பு விளைக்கும் தொழில்பற்றி மட்டும் சில கூறுதல் நன்று.

கடலைச் சார்ந்த நெய்தல் நிலத்தில் வாழும் பரதவர், உப்பங்கழிகளைச் சார்ந்திருக்கும் இடங்களில் பாத்தி அமைத்து, அவற்றில் அக்கழி நீரைப் பாய்ச்சி உப்பினை விளைவிப்பர், விளைந்த உப்பினை உள் நாடுகளுக்குத் தாமே கொண்டு சென்று விற்பதும் உண்டு; பெரும் பாலும் அவ்வுப்பினை உமணர் என்னும் உப்புவணிகரே வாங்கிச் சென்று விற்பர். உமணர் வருகையை எதிர் நோக்கித் தாம்விளைத்த உப்பைக் கடற்கரைக் கண் உள்ள சோலைகளிடத்தே குவியல் குவியலாகக் குவித்து

வைப்பர். பரதவர் மகளிர், முன்னாள் மாலையில் சென்று, காலையில் திரும்பும், தம் தந்தை தமையன்மார்களின் மீன் படகுகளை, அவ்வுப்பு குவியல் மீது ஏறி நின்றே காண்பர் ; அவ்வளவு பெருங்குவியல்களாக, உப்பு குவித்து வைக்கப் பெறும்.

உமணர், தாம் கொண்டுவந்த நெல்லைத் தந்துவிட்டு உப்புப் பெற்றுச் செல்வர். உப்பினை உள்நாட்டு ஊர் கட்குக் கொண்டு செல்லும் உமணர், பெரும் பாரத்தையும் தாங்கவல்ல வலிய வண்டிகளையும், அவ்வண்டிகளை வழியருமை பாராது ஈர்த்துச் செல்லும் எருதுகளையும் உடன் கொண்டு செல்வர். உப்பு வண்டிகள், ஒன்றன் பின் ஒன்றாக ஒழுங்காகச் செல்லும் காட்சியினைச் சிற்றூரில் வாழும் சிறுவர்கள், தங்கள் தங்கள் வீட்டின் முன்புறத்தே இருந்து கண்டு, மகிழ்வர். இடைவழியில் உப்பேற்றிய வண்டி அச்சு முறிந்துபோவதாலும், ஆறுகளின் இடையே நின்று விடுவதால், உப்பு கரைந்து போய்விடுவதாலும் உமணர்க்குக் கேடு பல உண்டாதலும் உண்டு. இடைவழியில், ஆறலை - கள்வராலும், பிறராலும் சேதம் வருவது அஞ்சி, உமணர் பலர் கூடிச் செல்வதும், உப்பு வண்டிகளின் இரு மருங்கும் காத்துச் செல்லும் படையேந்திய வீரர்களை உடன் கொண்டு செல்வதும் வழக்கமாம். அவ்வாறு அரும்பாடு பட்டுக் கொண்டு வந்த உப்பினை, உமணர், உள்நாட்டு ஊர் தோறும் சென்று, "நெல்லின் நேரே வெண்கல் உப்பு" "நெல்லும் உப்பும் நேரே ஊரிர் கொள்ளீரோ?" எனக்கூறி விற்று வாழ்வர். உப்பை விற்று வெண்ணெல் பெறும் வாணிகத்தை, உமணரே அல்லாமல்,

அப்பரதவர் குடிவந்த மகளிரும் மேற்கொண்டிருந்தனர், உப்பு வணிகம் குறித்துச் சங்கநூல்கள் கூறுவன இவ்வளவே.

பிற்காலச் சோழர் காலத்தில், உப்பை விளைத்தலும் விற்றலும் அரசாங்கத் தொழிலாக ஆகிவிட்டன; அவற்றை மேற் கொள்வார் அரசியலாரின் ஒப்புதலை பெறவேண்டும்; அதற்கென, அரசாங்கத்திற்கு வரி செலுத்துதல் வேண்டும் எனும் வறையறை அக்காலத்தி லேயே வந்து விட்டது. மரக்காணம், கன்யாகுமரி, வரியூர், ஆய்துறை முதலாம் இடங்கள், அக்காலத்திய சிறந்த உப்பளம் உள்ள ஊர்களாக விளங்கின.

6. வணிகரும் அரசரும்

ஒரு நாட்டு வாணிகத் தொழிலின் வளர்ச்சி, அந்நாட்டு வாணிகப் பொருள்களின் வளத்தைக்காட்டிலும் அவ்வாணிகத்தை தம் தொழிலாகக் கொண்டு வாழும் அந்நாட்டு வாணிக மக்களின் நல்லொழுக்கத்தையே அடிப்படையாகக் கொண்டுளது. அவ்வணிகர், தம் வருவாயே குறியாய்த் தாம் விற்கும் வாணிகப் பொருள்களின் வளத்தினைக் கருதாராயின் வாணிகம் வீழ்ந்து விடும். அதற்குமாறாக, தம் வருவாயைக் காட்டிலும், வாணிகப் பொருள்களின் நேர்மையே பெரிது எனக் கருதும் பேருள்ளம் உடையராயின், அவர்கள் மேற்கொண்ட வாணிகம் வளரும்; அவரும் வளம் பல பெற்று வாழ்வர். வாணிகத் தொழிலின் இந் நுட்பத்தை நன்கு அறிந்திருந்தனர் பழந்தமிழ் வணிகர். தமிழ்நாட்டு வணிகர் நீதிதவறாத நல்ல உள்ளம் உடையவர். தமக்கும் தம் வாணிகத்திற்கும் உண்டாகும் பழி கண்டு அஞ்சும் பக்குவப் பட்டவர். என்றும் வாய்மையே வழங்கும் இயல்புடையவர். தம்பொருளையும், பிறர்பொருளையும்

ஒன்றே போல் எண்ணிப் போற்றும் அறவுள்ளம் உடையவர். கொள்ளும் பொருளைத் தாம் கொடுக்கும் பொருளினும் மிகையாகக் கொள்ளார். தாம் கொடுக்கும் சரக்கையும், விலையாகாத் தாம் வாங்கும் பொருளினும் குறைவாகக் கொடுக்கமாட்டார். இவ்வாறு வாணிக நெறியில் வழுவாது நின்று வாணிகம் புரிபவரே, நாட்டிற்கும் தமக்கும் நன்மை புரியும் நல்ல வணிகராவர். அத்தகைய நல்ல வணிகர் பலர், நம் நாட்டில் பண்டு வாழ்ந்திருந்தனர். அவர்களின் நல்லொழுக்கத்தால் நாட்டில் செல்வம் மிகுந்தது ; இவ்வாறு தம் நல்லொழுக்கத்தால், நாட்டிற்கு நன்மை தேடித்தந்த அந்நல்லோரைப் புலவர்களும் பாராட்டினார்கள்.

" கொடுமேழி நசை உழவர்
நெடுநுகத்துப் பகல் போல
நடுவு நின்ற நல் நெஞ்சினோர் ;
வடுவஞ்சி, வாய் மொழிந்து
தமவும் பிறவும் ஒப்பநாடிக்
கொள்வதூஉம் மிகை கொளாது, கொடுப்பதூஉம்
[குறைகொடாது,
பல் பண்டம் பகர்ந்து வீசும்
தொல்கொண்டித் துவன்றிருக்கை."

ஒரு நாட்டில் வாணிகம் முதலாம் தொழில்கள் வளம் பெற வளர வேண்டின், அந்நாட்டில் நல்லாட்சி நிலவுதல் வேண்டும் ; அரசராலும், அணங்குகளாலும், விலங்குகளாலும், கள்வர்களாலும் நாட்டுமக்களுக்குக் கேடுண்டாதல் கூடாது ; அத்தகைய நல்ல நாட்டிலேயே அமைதி நிலவும் ; அமைதி நிலவும் நாட்டிலேயே மக்கள் அச்சம் இன்றி வாணிக வாழ்க்கையினை மேற்கொள்வர்.

இதைஉணர்ந்து அரசர்கள், அத்தகைய அமைதிவாழ்வு நிலவுமாறு நாடாளுதல் வேண்டும். இதை உணர்ந்தவர் பழந்தமிழ் அரசர் ; தொண்டை நாடாண்ட திரையன் அல்லன கடிந்து நல்லன ஓம்பி நாடாண்டான் ; அவன் நாடும் காவல் செறிந்திருந்தது ; அதனால், அவன் நாட்டிற்கு வரும் புதிய புதிய மக்களை இடைவழியில் மடக்கி அடித்துத் துன்புறுத்தி அவர் கைப்பொருளைக் கவர்ந்துகொள்ளும் கள்வர்கள் அவன் நாட்டில் இலராயினர் ; அதனால், மக்கள், வழிச்செல்வதற்கு அஞ் சிலர்; வேண்டும்போது வெளியூர் செல்வதும், வேண்டிய இடங்களில் தங்குவதும், கைநிறையப் பொருள் கொண்டு செல்வதும் மேற்கொண்டு வாழ்ந்தனர் ;

அவ்வாறே கொங்குநாட்டிலும் அமைதி நிலவ ஆண்டிருந்தான் அதியமான் என்ற அரசன். அவன் நாட்டில், காலையில் காடு சென்று மேயும் ஆனிரைகள், காட்டு விலங்குகளுக்கும், கானவர்களுக்கும் அஞ்சி மாலையில் ஊர் திரும்பிவிட வேண்டும் என்று எண்ணுது தம் கன்றுகளோடு, அக்காட்டிலேயே அச்சம் அற்றுத் தங்கி விடும் ; வழிபல கடந்து வரும் மக்கள், தம் கால்கள் நடைமெலிந்த வழி, வழியில் ஆறலைகள்வர் இலர் என்ற துணிவால், அவ்விடங்களிலேயே தங்கிவிடுவர் ; நாட்டில் பிறர் பொருளைத் திருடித்தின்னும் கள்வர் இல்லை என்பதை அறிந்த உழவர்கள், நெல் முதலாம் உணவுப் பொருள்களைக் களத்தில் காவல் இல்லாமலே வைத்து விட்டு வீடுசெல்வர்.

இவ்வாறு அறம் விளங்க ஆண்டதோடு, மக்கள் ஓர் ஊரிலிருந்து பிறிதொரு ஊருக்கு, ஊறின்றிச் செல்ல

வல்ல சாலைகளையும், அச்சாலைகளின் இடையே ஆறலை கள்வர் முதலியோரால், அவ்வழிச் செல்வார்க்கு கேடுண்டாகாது காத்தற்பொருட்டு, ஆங்காங்கே வாளேந்திய வீரர்கள் இருக்கத்தக்க சிற்றரண்களை அமைத்து வைத்தனர்; அதனால், புகாரில் வாழ்ந்த வணிகர்; மதுரைக்குச் சென்றும், மதுரை வணிகர் வஞ்சிமாநகர்க்குச் சென்றும் வாணிகம் புரிந்து வந்தனர். பிற்காலச் சோழர் காலத்தில், **வடுகப் பெருவழி, கொங்கப் பெருவழி, தஞ்சாவூர்ப் பெருவழி** என்ற பெயருடைய பெருவழிகள், நாட்டின் பல்வேறு பகுதிகளையும் ஒன்று சேர்த்து வாணிகம் வளரத் துணை புரிந்தன எனக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

நல்லவழி அமைத்துக் கொடுத்தும், நல்லாட்சி நிலவச் செய்தும் துணைபுரிவதோடு, அரசர்களின் கடமை முடிந்துவிடாது. மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் புகழ் விரும்பிகளாவர். தம்மைப் பாராட்டியும், புகழ்ந்தும் பிறர் உரைக்கும் உரைகளைக் கேட்பதில் ஆர்வம் உடையவர்; அத்தகைய புகழ்ச்சிகளுக்காகவே, புகழுரை அளிப்பார் விரும்பும் செயல்களை விடாது செய்து முடிப்பர்; இவ்வியல்பிற்கு வணிகரும் விலக்காகார்; வணிகரின் தொழில் நேர்மையை வாயார வாழ்த்துவார் உளராயின், அது மேன்மேலும் வளரும் இந்த உண்மையை உணர்ந்து அரசர்கள் வணிகரைப் பாராட்டுதல்வேண்டும்; அவ்வாறே, அவர்களைப் பாராட்டினார்கள் பழந்தமிழ் அரசர்கள். வணிகர்க்கு ஓதிய அறநெறியில் வழுவாது நின்று வாணிகம் செய்து வளம் பெற்று உயர்ந்த வணிகரைப் பாராட்டி எட்டி

எனும் பெயர் சூட்டி, அதற்கு அடையாளமாகப் பொன்னால் செய்த எட்டி எனும் பூவை அணிவித்து மகிழ்ந்தனர் அக்கால அரசர்கள்.

> " வாணிக மரபின் வருபொருள் ஈட்டி
> நீள்நிதிச் செல்வனாய் நீணில வேந்தனின்
> எட்டிப் பூப் பெற்று."

7. வணிகக் குழு

ஊரில் இருந்து, யாதேனும் ஒரு பொருள் பற்றிய வாணிகம் மேற்கொண்டு வாழ்வார், தாம் ஒருவராகவே தனித்திருந்து வாணிகம் புரிதல் ஏற்புடைத்தாயிற்று. அந்நிலை கடந்து, ஊரை விட்டு, நாட்டைவிட்டு காட்டையும், கடலையும் கடந்து சென்று வாணிகம் புரியும் நிலை வந்துற்ற பின்னரும் தனித்திருந்து தொழில் புரிதல் பொருந்தாது போம். மேற்கே உரோம் முதல், கிழக்கே சீனம்வரை பரவிய பெருநாடுகளுக்குச் சென்று வாணிகம் புரியும் வாய்ப்புற்றவிடத்து, வணிகர்கள் பலர் சேர்ந்து வாணிகம் புரியத் தொடங்கினர். ஒருவர் வேண்டும் பொருள் தம்மிடத்து இல்லாது போயினும், அது கிடைக்கும் இடத்திற்கு அப்போதே சென்று அப்பொருளை வாங்கிவந்துவிற்கும் வாய்ப்பும், வேண்டும் இடங்களுக்கு வேண்டிய போதே, அச்சம் இன்றி வேறு எவர் துணையும் பெறுதே செல்லவல்ல வசதியும் உள்ளூர் வணிகர்க்கு இருந்தன : வாணிகம், அக வாணிக நிலைகடந்து, புறவாணிகம் என்ற பெருநிலையை அடைந்து விட்டது. அந்த வாய்ப்பும், வசதியும் இல்லாயின அத்தகைய புறவாணிகத்திற்குப் பெருமுதலும், ஆள்

பலமும் இன்றியமையாதனவாயின. அதனால், ஒருவரோ, இருவரோ கூடிச் செய்யும் நிலையினைக் கடந்துவிட்டது; நெடுவழி சென்று செய்யும் அவ்வாணிகத்திற்காம் பெரு முதலையும், இடைவழியில் உண்டாம் இடையூறுகளைப் போக்கற்குப் படை பலத்தையும் அவ்வொருவர் இருவரால் அளிக்க இயலாது; அதனால் வணிகர் பலர் கூடி வாழத்தொடங்கினர்.

அத்தகைய வணிகக்குழுக்கள் சிலவற்றைப்பற்றிய குறிப்புக்கள், பிற்காலச் சோழர் காலத்திய கல்வெட்டுக் களில் காணப்பெறுகின்றன. அத்தகைய குழுக்களுள் **நகரம், நானாதேசி, அஞ்சுவண்ணம், மணிக்கிராமம்** முதலாயின சிறப்புடையனவாம்.

நானாதேசிகள் :—கல்வெட்டுக்கள் கூறும் வணிகக் குழுக்களுள், நானாதேசிகள் எனும் பெயருடைய குழுவே மிகப் பெரிய குழுவாம். இக்குழு, "திசையாயிரத்து ஐந்நூற்றுவர்", "நானாதேசித் திசையாயிரத்து ஐந் நூற்றுவர்" "நான்கு திசை ஆயிரம்", "நானாதேசிய" எனப் பல பெயர் கொண்டு அழைக்கப் பெறும். திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர் என்ற தொடரால், இக்குழு ஆயிரத்து ஐந்நூறு அங்கத்தினரைக் கொண்ட பெருங்குழுவாம் எனக் கொள்வர் சிலர். ஆனால், அத்தொடரால் அறியக் கூடியதாவது, 'ஐந்நூறு அங்கத் தினர்களைக் கொண்டு, பற்பல நாடுகளிலும், ஆயிரம் திக்குகளிலும் சென்று வாணிகம் புரிந்து வாழும் குழு என்பதே' என ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

நானாதேசி என்ற இவ்வணிகக்குழுவே, ஏனைய வணிகக் குழுக்களைக் காட்டிலும் காலத்தால் முற்பட்ட

தாம். விஜயாலயன் வழி வந்த சோழர், ஆட்சிப் பீடம் ஏறுவதற்கு முற்பட்ட காலத்திலேயே, இக்குழு தோன்றி வளர்ந்துளது. விஜயாலயன் காலத்துக் கல்வெட்டொன்று, புதுக்கோட்டை நாட்டைச்சேர்ந்த முனிசந்தி என்ற ஊரில், நாநூதேசிகள், தம் பெயரால் ஒரு குளம் தோண்டி, ஆண்டுதோறும் அதைச் செப்பனிடற்காம் செலவிற்காக நிமந்தம் ஏற்படுத்திய நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறது. கி. பி. 1015 ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டொன்று, இந்நானூதேசிகள், நிகரிலிச் சோழச் சதுர்வேதி மங்கலத்துச் சபையாரிடம், தம் வாணிகப் பொருள்களை வைத்துக் காப்பதற்காகச் சில வீடுகள் வாங்கிய செய்தியைக் கூறுகிறது. சுமத்ராத் தீவில், லோபோ—டோவோ, எனும் இடத்தில் கண்டெடுக்கப் பெற்ற கி. பி. 1088-ஆம் ஆண்டைச் சேர்ந்த தமிழ்க் கல்வெட்டொன்றும், இந்நானூதேசிகளைக் குறிப்பிடுகிறது.

காலத்தால் முற்பட்டதாய இந்நானூதேசிய வணிகக்குழு, தன் ஆட்சிப் பரப்பாலும், ஏனைய வணிகக் குழுக்களினும் சிறப்புடையதாம்; இவர்கள் செல்லாத நாடே இல்லை எனலாம்; எல்லா நாடுகளிலும் இவர்களைக் காணலாம்; நாடு போர் ஒழிந்து அமைதி பெற்றிருக்கும் காலத்திலேயே அல்லாமல், நாடு போரில் மூழ்கி அமைதி இழந்து நிற்கும் காலத்திலும் இவர்கள் நில்லார்; ஒரு நாட்டின் ஆட்சி மாற்றமும், இவர்கள் வாணிகத்தை வழியிடை நின்று நிறுத்தியதில்லை. சென்ற இடங்களில் எல்லாம் சிறப்போடு வாழ்ந்தனர்; அரசரும், ஊராரும் இவர்களை உயர்வாகவே மதித்து,

உரிமை பல அளித்துப் பேணினர். இதனால், இவர்கள் எங்கும் எக்காலத்தும் சென்று • வாணிகம் புரிந்து வந்தனர்.

மைசூர்த் தனியரசில் கிடைத்த கன்னடக் கல்வெட்டொன்று இவ்வணிகக் குழுவைப்பற்றிய செய்திகளை விளங்க உரைத்துளது. "ஐந்நாற்றுவர் மெய்க்கீர்த்தி" எனப் பெயர் பெற்ற அக்கல்வெட்டு, "நானு தேசிகள், சேர, சோழ, பாண்டிய, மலைய, மகத, கோசல, சௌராட்டிர, தனுட்ச, குறும்ப, காம்போச, கௌள, லாள, பர்வ்வர, பாரசீக, நேபாள, எகபாத, லம்பகர்ண, ஸ்திரீராஜ்ய முதலாம் நாடுகளுக்கு நிலவழியாகவும், நீர்வழியாகவும் சென்று, யானைகளையும், குதிரைகளையும், இந்திர நீலம், சந்திர காந்தம், முத்து, ஆணிக்யம், வயிரம், வயிடூரியம், கோமேதகம், புஷ்பராகம், பத்மராகம், பவளம், மரகதம் முதலாம் மணிகளையும், ஏலம், இலவங்கம், அகில், சந்தனம், கற்பூரம், கத்தூரி, குங்குமம் முதலாம் நறுமணப் பொருள்களையும் விற்று, அவற்றிற்கு ஈடாக, ஆங்குக் கிடைக்கும் அரும்பொருள்களை வாங்கிக் கொண்டு வந்து சேர்வர்," என்றும், "இவ்வணிகக் குழுவின் உறுப்பினர், வாசுதேவன், கந்தழி, மூலபத்திரர்களின் குலத்து வந்தோராவர்" என்றும், "கவரை, காத்திரிகை, செட்டி, செட்டிபுத்திரர், அங்ககாரர், வீரர், வீரவணிகர், கண்டிகர், கவுண்டர், கவுண்டசாமி என்ற பட்டப் பெயர் உடையார்" என்றும், "பகவதியின் பேரன்பு பெற்ற அவர்கள், பதினெட்டுப் பட்டணங்களும், முப்பத்திரண்டு விளார்புறமும், ஐந்நூறு வீரசாசனங்களும் பெற்றவர்" என்றும் கூறுகிறது.

பதினொன்றும் நூற்றுண்டில் மயிலாப்பூரில் இருநது வாணிகம் புரிந்த நானுதேசிகள், அய்யப்புழல் காட்டூர் என்ற ஊரை வாங்கி, வீரபட்டினமாகச் செய்து கொண்டனர் என ஒரு கல்வெட்டு கூறுகிறது.

பர்மாவில், பகான் என்ற ஊரில் கிடைத்த பழைய தமிழ்க் கல்வெட்டொன்று, ' திருமாலுக்கு ஒரு கோயில் கட்டி நிமந்தம் பல செய்தான் மலபார்க் கடற்கரையைச் சேர்ந்த வணிகன் ஒருவன் ' எனக் கூறுகிறது. அக்கல்வெட்டு, குலசேகர ஆழ்வார் வட மொழியில் ஆக்கிய " முகுந்த மாலா ' என்ற நூலில் உள்ள சில அடிகளைத் தொடக்கமாகவும், " திருச்செல்வம் பெருக! புக்கம் ஆன அரிவர்த்தனப் புரத்து நானுதேசி விண்ணகர் ஆழ்வார் கோயில் திருமண்டபமும் செய்து, திருக்கதவும் இட்டேன், மலைமண்டலனுந்தாய மகோதையார் பட்டணத்து ஈராயிரன் சிறியனை சீகுலசேகர நம்பியேன் " என்ற தொடரை இறுதியாகவும் கொண்டுளது. கூறிய இச்சான்றுகளால், நானுதேசிகளின் வாணிக நிலையங்கள், நீர் கடந்து சென்ற நாடுகளிலும் இருந்தன, என்பது உறுதியாம்.

பண்டைக் காலத்தில் நில வழிகளும், நீர் வழிகளும், ஆறலை கள்வராலும், கடற்கொள்ளைக்கூட்டத்தாராலும் நிறைந்து இருந்தன. வாணிகப் பொருள் கொண்டு செல்லும் வங்கங்களைப் பற்றிக் கொள்ளையடிக்கும் கப்பற் கொள்ளைக்காரர், கடலிடையே காத்துக்கிடந்தனர் எனத் தன் " உலக நூலில் " தாலமி என்பார் கூறியுள்ளார். இதனுல் நானுதேசிகள், தம்மோடு

பெரும்படை யொன்றையும் உடன்கொண்டு சென்றனர். சீயத்தில் கிடைத்த கல்வெட்டொன்று, " சேனுமுகம் " என்ற ஒரு சொற்றொடரைக் கொண்டுளது. சேனுமுகம் எனும் இத் தொடர் படை தங்கியிருந்த இடத்தைக் குறிப்பதேயாம். பசனிகுண்டா எனும் இடத்தில் கண்டெடுத்த கல்வெட்டு " நான்கு திசை யாயிரத்து ஐந் நூற்றுவப் பெரும் சமையமும், இச்சமயத்துத் திருவடிக்குப் பணி செய்யும் எறிவீரரும் கொங்க வாளரும்" என்ற தொடரைக் கொண்டுளது. இக்கல் வெட்டால், நானுதேசிகள், வாணிகம் கருதி வெளியூர் செல்லுங்கால், படைத்துணை கொண்டே சென்றனர் என்பது உண்மையாதல் அறிக.

அஞ்சுவண்ணமும், மணிக்கிராமும் :— அஞ்சு வண்ணம், மணிக்கிராமம் ஆகிய இவ்விரு வணிகக் குழுக்களையும் இணைத்துக்கூறும் இரு கல்வெட்டுக்களும், மணிக்கிராமத்தைக் கூறும் கல் வெட்டுக்கள் இரண்டும் இப்போது கிடைத்துள்ளன. அவையாவன ; " அறுநூறுவரும் **அஞ்சு வண்ணமும், மணிக்கிராமமும்** இரட்சிக்கக் கடவர் " " கோவாதலச் செட்டி **அஞ்சு வண்ணம்** கூட்டம் **மணிக்கிராமத்தார்** மக்கள் " " மகோதையார் பட்டினத்து இரவி கொற்றனுகிய சேரமான் உலோகப் பெருஞ் செட்டிக்கு **மணிக்கிராமப்** பட்டம் கொடுத்தோம்." " திரு வெள்ளறை திருவாணைக்கல் பெருமானடிகள் உச்சம்போது, அமுது செய்தருளும்போது, ஒரு பிராமணனை ஊட்டுவிதாக உறையூர் **மணிக்கிராமத்து** நாராயணன் ஆச்சன் இவ்வூர் கல்லால் வைத்த பொன் ஐம்பதின் கழஞ்சு."

அஞ்சுவண்ணம், மணிக்கிராமம் என்ற இவ்வணிகக் குழுவைப் பற்றிப் பலர் பலவாறு கூறுகின்றனர். "அஞ்சுவண்ணம் யூதவணிகர்களின் குழு; மணிக்கிராமம் கிருத்தவ வணிகர்களின் குழு" என்று டாக்டர் பர்னல் கூறுகிறார். "மணிக்கிராமத்தார் என்பார், மணிவாசகப் பெருந்தகையாரால் சைவராக்கப்பெற்ற கிருத்தவர்களாவர்" என்று ரெவரண்ட் பீட் கூறுகிறார். "மனிக்கியர் என்பார், கிருத்தவரில் ஒரு பிரிவினர். அப்பெயரே மணிக்கிராமம் எனத் தமிழில் திரிந்து வழங்குவது போலும்" என்று டெயிலர் என்பார் ஐயுறுகிறார். அஞ்சுவண்ணம் என்ற சொல், அஞ்சுமான் என்ற அரபியச் சொல்லின் திரிபாம்; ஆகவே அஞ்சுவண்ணம் அராபிய வணிகக்குழுவாம்" என்று கூறுவாரும் உளர். இவ்வணிகக் குழுக்களில் அங்கம் வகிப்பார் எந்தச் சமயத்தவர் என்பதைத் துணிந்து கூறுவது இயலாது; திருவெள்ளறைக் கல்வெட்டில் உறையூர் மணிக்கிராமத்தான் பெயர் நாராயணன் என இருத்தலாலும், அவன் வேதம் வல்ல பிராமணனை உண்பிப்பதற்குப் பொன் வைத்தான் எனக் கூறப்படுதலாலும், சீயத்தில் தகுவாபா இடத்தில் கண்ட கல்வெட்டில், அவனிநாரணம் என்ற பெயருடைய குளத்தின் பாதுகாப்பு, மணிக்கிராமம், அஞ்சுவண்ணத்தார்பால் ஒப்படைக்கப்பட்டது எனக் கூறப்பட்டிருத்தலாலும், இவ்வணிகக் குழுக்கள், கிருத்தவர்களேயோ, யூதர்களேயோ, அராபியர்களேயோ, அங்கத்தினர்களாகக் கொண்டன அல்ல என்பது உறுதியாம்.

நெல்லூர், நாராயணபுரம், ஆர்க்காடு, மயிலாப்பூர், திருவொற்றியூர், பூந்தமலி, நெடும்பிறை, தமனகச்சேரி,

பெருங்கலூர், திருநீறு முதலாம் நகர்களில் வாழ்ந்த வணிகர்கள், கி. பி. 1207-ல் ஒன்றுகூடித், திருப்பாசூர் கோயிலைச் சூழ மதில் ஒன்று எழுப்புவதற்காம் செலவின்த்திற்கென, ஊர் ஒன்றை வாங்கித் தேவதானமாக வழங்கினர் என்ற செய்தியை ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. இவ்வணிகக்குழு நிலையானதன்று; குறிப்பிட்ட ஒரு காரணத்திற்காகக் கூடியதேயாம்; இதுபோன்ற வணிகக்குழுக்களும் அன்று விளங்கின.

நகரம்:—பல ஊர்களைச் சேர்ந்த வணிகர்கள் ஒன்றுகூடி அமைத்த வணிகக்குழுக்களைப் போன்றே, ஓர் ஊரில் உள்ள வணிகர்கள் அனைவரும் கூடித் தமக்குள்ளே குழு அமைத்து வாழ்ந்தனர்; அத்தகைய உள்ளூர்க் குழுக்களை நகரம் எனப் பெயரிட்டு அழைக்கின்றன கல்வெட்டுக்கள்.

கி. பி. 1199-ல், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த ஊட்டத்தூர் என்ற ஊரில் வாழ்ந்த நகரம், அவ்வூரை வாணிகநிலையமாக மாற்றித் தாயிலு நல்லபுரம் என்ற புதுப்பெயரும் வைத்து வழங்கினர் என்றும், காஞ்சீபுரம், மாமல்லபுரம் போன்ற வணிகப் பேரூர்களில் எல்லாம், நகரம் நிலைபெற்றிருந்தது என்றும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. நகரங்கள், குறிப்பிட்ட ஒரு நற்செயல் குறித்து மகமை தண்டுவதும் உண்டு. வாளையூரைச் சேர்ந்த நகரம், கி. பி. 1037-ல், கோயிலில் விளக்கேற்றவும், தம்வாணிகமுதலாக அக்கோயில்பண்டாரத்திலிருந்து பெற்ற கடனுக்கான வட்டியை வழங்குவதற்காகவும், தம்மிடம் பொருள் விற்பாரிடத்தும், வாங்குவாரிடத்தும் மகமை தண்டியுளது.

வணிகக்குழுக்கள், தங்கள் வாணிகவளம் கருதிச் சில ஊர்களை விலைகொடுத்து வாங்குவதும், வாங்கிய அவ்வூர்களுக்கு "எறிவீரப் பட்டினம்" எனப் பெயர் சூட்டி, அவற்றில் தனியரசு செலுத்துவதும் வழக்கமாம். பசனிகொண்டாவில் கிடைத்த கல்வெட்டொன்று, நானு தேசி ஐந்நூற்றுவர் கூடி, அவ்வூருக்கு "நானுதேசிய தசமடி எறிவீரப்பட்டினம்" எனப் பெயர் சூட்டினர் எனக் கூறுகிறது. மயிலாப்பூர் வணிகர், அய்யப்புழல் காட்டூரை, "வீரபட்டின"மாக்கினர் என்பது முன்னரே கூறப்பட்டுளது. அவ்வாறு வணிகர்கள் வாழும் அவ் வூர்களின் ஆட்சிப் பொறுப்பினை, அக்கால அரசர்கள், அவ்வணிகக் குழுவினரிடமே ஒப்படைத்து, அவர்கள் தனியாட்சியில் தலையிடாமை மேற்கொண்டனர்.

பழந்தமிழ் வணிகர், பண்டு பாராண்ட அரசர் களோடு ஒருங்குவைத்துப் போற்றப்பெறும் உயர்நிலை உடையவராவர்; வாணிகத்தொழில், ஆட்சிக்குக் கட்டுப்பட்டு நடைபெறவில்லை; அக்கால அரசர்கள், அவ் வணிகர்மீது ஆதிக்கம் செலுத்த விரும்பினாரல்லர்; வாணிகத்தொழிலைத் தம்ஆணைக்கு உட்படுத்த எண்ணாத அவர்கள், அவ்வணிகர்க்கு, வாணிகம் கருதிச் செல்லும் வெளிநாடுகளில் கேடுறுவாறு காக்கும் கருத்துடைய ராயினர். பிற நாடுகளில், வாணிகத் தொழில் மேற் கொண்டு வாழ்ந்த தம் நாட்டு வணிகர்க்கு, அந்நாட்டு அரசனால் அழிவு வந்துற்ற காலத்தில், அந்நாட்டுமீது படைகொண்டு சென்றனர் பழந்தமிழ் அரசர். ஸ்ரீ விசய நாட்டரசனாய சங்கிராம விசயோத்துங்கன்மேல், முதலாம் இராசேந்திர சோழன் போர்தொடுத்து எழுந்தது,

அந்நாட்டில் வாழும் தமிழ் வணிகரைக் காத்தற் பொருட்டே.

தமிழ்நாட்டு வாணிகம், பிறநாடுகளிலெல்லாம் வளம் பெருக நடைபெறுதல் வேண்டும் என விரும்பிய தமிழ் வேந்தர், அந்நாடுகளுக்கு அரசியல் தூதுவரை அனுப்பி, அந்நாட்டார் நட்பை வளர்த்தனர். உரோமப் பேரரசின் புகழ்மிக்க அரசனாய அகஸ்டஸ் என்பான்பால், பாண்டிய மன்னன் ஒருவன், கி. பி. முதல் நூற்றாண்டிலேயே, தூதுவரை அனுப்பியிருந்தான்; சீனநாட்டில் தம் வாணிகம் சிறக்கவேண்டும் என விரும்பிய, இராசராச னும், இராசேந்திரனும், குலோத்துங்கனும், முறையே கி. பி. 1015, 1020, 1077-ஆம் ஆண்டுகளில் அரசியல் தூதுவரை அனுப்பி இருந்தனர்.

பிறநாடு சென்று வாழும் தம் நாட்டு வணிகர், அந் நாட்டு அரசரால் அழிவுறாது வாழ்தலை விரும்பிய தமிழ் அரசர், பிற நாடுகளில் இருந்து, தமிழகம் போந்து வாணிக வாழ்வு மேற்கொண்டு வாழ்ந்த அந்நாட்டு மக்கள்பால் அன்பு காட்டி அவர்க்கு ஆக்கம் அளித்துக் காத்தனர். அவ்வணிகர், தம் சமயநெறிகளைத் தவறாது, தயங்காது மேற்கொள்ள உரிமை அளித்ததோடு, அதற்கு உறுதுணையும் அளித்தனர். தானுரவி எனும் சேரவேந்தன், கொல்லத்தில், கிருத்தவப்பள்ளி ஒன்று அமைக்க அனுமதி கொடுத்தும், அப்பள்ளிக்குப் பணி செய்யப் பல தமிழரை அளித்தும் துணைபுரிந்தான். சோழநாட்டுத் துறைமுகமாகிய நாகப்பட்டினத்தில், புத்தப்பள்ளி அமைக்க, ஸ்ரீ விசயநாட்டு மாறவிசயோத் துங்க வர்மனுக்கு அனுமதி அளித்த இராசராசன், அப்

பள்ளிக்கு, ஆனைமங்கலம் என்ற ஊரின் வருவாயையும் வழங்கினான். மேலும், இபன்-பதூதாவின் யாத்திரை நூலால், கொல்லம், கோழிக்கோடு முதலாம் இடங்களில் மசூதிகள் பல இருந்தன என்பதும் தெரிகிறது.

இவ்வாறு பிறநாட்டு வணிகர், தம்வழிபடு கடவுளர்க்குக் கோயில் கட்டத் துணைபுரிந்ததோடு, அவ் வணிகருள் சிலரை அரசியல் அலுவலராய் அமர்த்தியும் ஆக்கம் அளித்தனர். முதலாம் இராசேந்திர சோழன், சோநகன் எனும் பெயரோடு தமிழகம் போந்து வாழ்ந்த அராபியன் ஒருவனை அரசியலில் அங்கம் வகிக்கத் துணை புரிந்தான் என்பதை, "திருமந்திர ஓலைநாயகம் கங்கை கொண்ட சோழபுரத்து ராஜவித்தியாதரப் பெருந் தெருவில் சோநகன், சாவூர் பரஞ்சோதி" என்ற கோலார் கல்வெட்டுத் தொடர் உணர்த்துவது அறிக. பதி நான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மதுரையை ஆண்டுவந்த குலசேகர பாண்டியன், தகியுடீன் என்ற முகம்மதியன் ஒருவனைத் துணை அமைச்சனாய்ப் பெற்றிருந்தான் என்று அப்துல் வாசாப் அறிவித்துள்ளார். இவ்வாறு பிறநாட்டு வணிகர்க்குத் தம் நாட்டில் வாழ் வளித்துத் தம்நாட்டு வணிகர்க்கு வெளி நாடுகளில் வாழ வகைசெய்து துணைபுரிந்தனர் தமிழ்வேந்தர்.

8. வாணிக விளைவுகள்

வங்கம் ஏறி வாணிகம் புரிந்து வந்த பழந்தமிழ் வணிகரால் விளைந்த விளைவுகள் எத்தனையோ உள. தமிழ் நாடாண்ட அரசர்களுள் திரையன் என்பானும் ஒருவன்; காஞ்சியைத் தலை நகராக்கொண்டு, தொண்டை நாட்டில் நல்லாட்சி நிலவ நெடிதாண்ட அத்திரையனைத் தமிழகத்திற்குக் கொணர்ந்த தனிச்சிறப்பு, தமிழ் நாட்டு வணிகர் வழி வந்தான் ஒருவனுக்கே உரித்து.

பண்டு சோணாடு ஆண்டிருந்தாருள் ஒருவனாய கிள்ளிவளவன் என்பான் ஒருநாள், புகார்நகரை அடுத்திருந்த கடற்கரையில் உலாவிக் கொண்டிருந்தான் ; அக்காலை அங்கு வந்திருந்த நாகநாட்டரசன் மகளாய பீலிவளை என்பாளைக் கண்டு காதல் கொண்டான் ; இருவரும் மணம் செய்துகொண்டு மகிழ்ந்திருந்தனர் ; சில திங்கள் கழிந்ததும், அவள் நாகநாட்டிற்குச் சென்று விட்டாள் ; ஆங்கு அவளுக்கு ஓர் ஆண்மகன் பிறந்தான். அக்காலை, கடல் வாணிகம் புரியும் கம்பளச்செட்டி என்பான், வாணிகம் கருதி நாகநாடு சென்றிருந்தான் ;

தான் வந்த வினையை முடித்துக்கொண்டு மீண்டும் கலம் ஏறி ஊர் செல்லத்தொடங்கிய அவன்பால், தன் மகனை, அன்று அரசன்பால் கூறிவந்ததேபோல் அடையாளமாக ஆதொண்டைக் கொடி சூட்டி, ஒப்படைத்து, சோழன் கிள்ளிவளவன்பால் கொண்டு சேர்க்குமாறு வேண்டிக் கொண்டாள். அரசிளங்குமரனோடு கலம் ஏறித் தமிழ்நாடு நோக்கிச் செல்லத் தொடங்கினன் கம்பளச் செட்டி! இடைவழியில் கலம் கவிழ்ந்துவிட்டது; எவ்வாறோ உயிர் பிழைத்து அரசன் மகனை உரியான்பால் ஒப்படைத்து விட்டான்; கிள்ளிவளவன், திரைவழி வந்த தன் மகனுக்குத் திரையன் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தான்; ஆதொண்டைக் கொடி அணிந்து வந்தமையால் அவன் குலத்தோர் தொண்டையர் என அழைக்கப் பெற்றனர்; இவ்வாறு, சான்றோர் உடைத்து என்ற புகழ் தோன்றுமாறு, தொண்டைநாட்டை ஆக்கிஆண்ட தொண்டையர் குடியையும், அதன்குலத்து முன்னோனுய திரையனையும் தமிழகத்திற்குக் கொண்டுவந்து தந்த பெருமை, பழந்தமிழ் வணிகத்தின் விளைவுகளில் ஒன்றாம்.

சாதுவன் என்பான் ஒரு வணிகன்; புகார் நகரில் வாழ்ந்திருந்தான்; செல்வச் செருக்கால், மனைவியை மறந்து பரத்தையர் தொடர்பு கொண்டு திரிந்தான்; அதன் பயனாய், அவனும், அவன் முன்னோரும் ஈட்டிய எல்லாப் பொருளையும் இழந்தான்; அந்நிலையில் அறிவு வரப்பெற்றான்; உடனே, வெளிநாடு சென்று வாணிகம் புரிவான் வேண்டி, வங்கம் ஏறிச் சென்றார் சிலருடன், அவனும் சென்றான்; இடை வழியில் அவர்கள் சென்ற கலம் கவிழ்ந்துவிட்டது;

கடலில் வீழ்ந்த சாதுவன், பாய்மரத்தின் ஒடிந்த துண்டு ஒன்றைப் பற்றிக் கொண்டு மிதந்தான்; மிதக்கும் அவனை, அலை, அலைத்துக்கொண்டே சென்று, நாகர் வாழும் ஒரு நிலத்தில் சேர்ந்தது. கடல் அலைகளால் அலைப்புண்ட அவன் அவ்வயர்ச்சியால், கரைக்கண் இருந்த ஒரு மரத்தின் கீழ் வீழ்ந்து உறங்கிவிட்டான்; அந்நிலையில் ஆங்குவந்த நாகர், உறங்கும் அவனைக் கண்டு, அவன் உடல் உண்பதற்கு இனிய உணவாகும் என்ற மகிழ்ச்சியால் அவனை எழுப்பினர்; எழுந்த அவன், அவர்களோடு அவர்கள் மொழியில் பேசத் தொடங்கினான்; அதுகண்ட நாகர், அவனை வருத்தாமல் அழைத்துச் சென்று அவர்கள் தலைவன்முன் கொண்டு சென்று நிறுத்தினர்.

எலும்பும், தோலும், கள்ளுண் கலமும் கிடந்து நாலும் அவ்விடத்தின் நடுவண் இருந்த நாகர் தலைவனையும், நாகர் மொழியில் நயமாகப் பேசித் தன்பால் பிணித்துக்கொண்டான்; நாகர் தலைவனுக்குச் சாதுவன்பால் அன்பு பிறந்தது; நாகர் சிலரை விளித்து, வணிகனுக்குக் கள்ளும் ஊனும் வழங்கிப் பின்னர் இளைய கன்னி ஒருத்தியையும் தருமாறு பணித்தான்; நாகர் தலைவனின் அன்பு கண்டு மகிழ்ந்த வணிகன் அவன் அறியாமை கண்டு வருந்தினான்; கள்ளும், கன்னியும் வேண்டேன் என வெறுத்துரைத்தான்;

வணிகன் செயல் நாகர்க்கு வியப்பளித்தது; கள்ளையும், கன்னியரையும் வேண்டாம் என வெறுப்பவன் உளனே; அவற்றை வெறுத்த இவன் எவ்வாறு வாழ்வன் என எண்ணி ஐயுற்றனர், "மக்களுக்கு இன்பம்

தருவன பெண்டிரும், உண்டியும் அல்லால், பிற யாதேனும் உளவோ? உளவேல் எமக்கும் உரைத்தல் வேண்டும்" என வெகுண்டு கேட்டனர்.

சாதுவன், நாகரைத் தான் கூறுவனவற்றைக் கருத்தூன்றிக் கேட்குமாறு பணித்துவிட்டு, "உயிர் வாழ்க்கையின் உண்மைநிலையுணர்ந்த உயர்ந்தோர் கள்ளுண்பதையும், உயிர்க் கொலை புரிவதையும் ஒழித்துவிட்டனர்; அத்தகைய உள்ள உரம், பிறந்தவர் இருத்தல் தவறாது; பிறந்தலும், இறத்தலும், விழித்திருத்தலும், உறங்கியிருத்தலும் போலும்; நிலவுலகில் நல்லறம் செய்தவர் நற்பிறவி அடைவர்; அறம் அல்லா மறம் புரிந்தவர், நரகிடைச் சென்று அல்லல் உறுவர் என்ற உண்மை உணர்ந்ததினால் உண்டாயிற்று; இதை அறிந்து அதன் வழி நடப்பீராக" என்று கூறினான்.

அது கேட்ட நாகர் தலைவன், "இவ்வுடலை விட்டுப் பிரிந்த உயிர், மீண்டும் ஓர் உருவு கொண்டு பிறிதோர் இடம் சென்று சேரும் என உரைத்த சாதுவ! அவ்வுயிர் எவ்வாறு அவ்விடம் சென்று சேரும்? அதைச் சற்று விளங்க உரைப்பாயாக" என்று கேட்டான்; அது கேட்ட சாதுவன், சிறிது சினவாது இருந்து கேட்குமாறு வேண்டிக்கொண்டு, "இவ்வுடல் உயிரோடு கூடி வாழுங்காலத்தில், தனக்கு வரும் இன்ப துன்பங்களை அறியும் ஆற்றல் கொண்டுளது; ஆனால், உயிர் அவ்வுடலை விட்டுப் பிரிந்த பின்னர், அவ்வுடலை நெருப்பிலிட்டு எரிக்கினும் அது உணர்வதில்லை. அதனால் அதுகாறும் அவ்வுடலில் வாழ்ந்து, அவ்வுடலிற்கு உண்டாம் இன்ப துன்பங்களை உணர்த்தி இருந்த ஒரு பொருள்,

அவ்வுடலை விட்டுப் போய்விட்டது என்பதை உணர்கிறோம்; அவ்வாறு ஓடிய பொருளே உயிர்; ஓடினவர்க்கு ஓர் உறைவிடம் உண்டு என்பதை உலகில் உள்ளார் ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்வர். மேலும், உயிர் உடலைப் பிரிந்து நெடுந் தொலைவு செல்வதைக் கனவிலும் காண்கிறோம். அவ்வாறு ஓடிய உயிர், தான் செய்த நல்வினை தீவினைகளுக்கு ஏற்ற உடலில் புகுந்து வாழும். இவ்வுண்மையினை உணர்ந்து கொள்வீராக" எனக் கூறி முடித்தான்.

சாதுவன் உரைத்த அறவுரை கேட்ட நாகர் தலைவனும் நாகரும் உண்மை உணர்ந்தனர்; அதை உணர்த்திய வணிகன் காலில் வீழ்ந்து வணங்கினர்; தாம் மேற்கொள்ளற்காம் நல்லறம் யாது என விளம்புமாறு வேண்டினர்; சாதுவன், அவர்களை அருகழைத்து, "வாணிகம் கருதி வரும் வங்கங்கள், உடைய, உயிர்பிழைத்து இங்கு வருவாரைக் கொல்வதை விடுத்து அவர் மீண்டு செல்லும் வரை வைத்துப் பேணி அனுப்புங்கள்; ஆண்டு முதிர்ந்து இறந்துபோகும் உயிர்களைத் தவிரப் பிற உயிர்களைப் பிடித்துக்கொன்று உண்ணுது ஓம்புங்கள், இவையே நீங்கள் மேற்கொள்ளத்தக்க நல்லறங்களாம்" என நவின்முன்;

சாதுவன் உரைத்த அறம் கேட்டு அறிவு வரப் பெற்ற நாகர், தாம், அதுகாறும் அவ்வழிவந்த கலங்களை அழித்து, அக்கலத்து வந்த மக்களைக் கொன்று தின்று விட்டுச் சேர்த்துவைத்த அவர் பொருள்களையெல்லாம் அவன்பால் ஒப்படைத்தனர்; சிலநாள் அந்நாகரோடு

வாழ்ந்த சாதுவன், அவ்வழி வந்த சந்திரதத்தன் எனும் வணிகனுக்குரிய வங்கம் ஏறித் தமிழகம் வந்து சேர்ந் தான்.

நாகரிகமற்ற நாகரை நல்லோர் ஆக்கியதும், அந்நாக ரால், அவ்வழிச் செல்லும் வங்கங்கட்கு வந்த கேடுகளைப் போக்கியதும் பழந்தமிழ் வாணிகத்தின் விளைவுகளே யாம்.

மணிமேகலை அளிக்கும் இவ்விருபெரும் நிகழ்ச்சி களால், வாணிகம் கருதி வெளிநாடு செல்லும் பழந்தமிழ் வணிகர், தம் வாணிக வாழ்வோடு வீடு திரும்பினரல்லர்; சென்ற நாடுகளுக்கும் தமிழகத்திற்கும் இடையே அரசி யல் உறவு வளர உறுதுணை புரிந்தனர், அந்நாடுகளில் தமிழகத்தின் வாழ்க்கை முறைகள் இடம்பெற வகை செய்தனர் என்பது புலனும். பழந்தமிழ் வணிகர்பால் கண்ட, பாராட்டத்தக்க இப் பண்பால் நம் தமிழ் நாட் டின் புகழ் நாற்றிசையிலும் சென்று பரவலாயிற்று.

பழந்தமிழ் வாணிகத்தின் விளைவால், தமிழ் நாட்டு நாகரிகம் அவ்வணிகர் சென்ற நாடுகளில் எல்லாம் இடம் பெறத் தொடங்கிற்று ;

தமிழ் நாட்டோடு வாணிக உறவு கொண்ட மேலை நாடுகளுள் **அர்மீனியா** என்பதும் ஒன்று ; அங்கு வாணி கம் கருதிச் சென்று வாழ்ந்த தமிழர், ஆங்கே கண்ணனுக் கும், பலதேவனுக்கும் ஒருங்கே கோயில் கட்டி வழிபட் டனர் என்றும், அக்கடவுளர் இருவரும் **கிஸனி, தெமெதெர்** என்ற பெயர்களோடு இன்றும் வழிபடப் பெறுகின்றனர் என்றும், அக்கடவுள் வழிபாட்டு முறை

தமிழ் நாட்டைச் சேர்ந்ததே என்றும், ஆகவே, அந் நாகரிகத்தை ஆங்குக் கொண்டு சென்றவர் தமிழ் நாட்டு வணிகரே என்றும் முன்னரே கூறியுள்ளேன்.

மேலும், **பார்மோசாத் தீவிற்கு** நேர் எதிரில் உள்ள, **சூயன்-செள** எனும் சீனத் துறைமுகப் பட்டினத்தில் உள்ள சீனக் கோயிலில், கஜேந்திர மோட்சம், உரலில் கட்டுண்ட கண்ணன் ஆகிய நிலைகளை உணர்த்தும் திரு மால் சிலைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை பன்னிரண்டு, பதின்மூன்றும் நூற்றாண்டுகளில், தென்னிந்திய வணிகர்களால் கொண்டு செல்லப்பட்டனவே என்பதிலும், தமிழ்நாட்டு வணிகர் சிலர், அங்கருள் வந்து வாழ்ந்திருந்தனர் என்பதிலும் எட்டுணையும் ஐயம் இல்லை என்பர் ஆராய்ச்சியாளர்.

இவ்வாறு, தமிழகத்தின் கிழக்கிலும், மேற்கிலும் தமிழ்நாட்டின் நாகரிகம் சென்று பரவத் துணை புரிந்தவர் பழந்தமிழ் வணிகரேயாவர். தமிழகத்தின் கிழக்கே உள்ள தீவுகள் பலவற்றிலும், இன்று கண்டுபிடிக்கப் படும் இந்திய நாகரிக அடிச்சுவடுகளெல்லாம், பழந் தமிழ் வாணிகத்தின் விளைவுகளே; அந்நாகரிகங்களை அங்கெல்லாம் கொண்டு சென்றவர், அப்பழந் தமிழ் வணிகரே.

முற்றும்

CONNEMARA PUBLIC LIBRARY
1 - MA...